# <u>உள்ளடக்கம்</u> பக்க இல.


| | |
|---|---|
| ஆணைக்குழுத் தகவல்கள் | 02 |
| தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை | 04 |
| அறிமுகம் | 07 |
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக் கட்டமைப்பு | 08 |
| மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி | 10 |
| நிர்வாகம், நிதிப் பிரிவு | 12 |
| திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவு | 19 |
| பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள் பிரிவு | 33 |
| தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு | 40 |
| தகவல் முறைமைகள் பிரிவு | 58 |
| சர்வதேச ஒத்துழைப்பு | 71 |
| விசேட வேலைத்திட்டங்கள் | 76 |
| நிதிக் கூற்று | 78 -124 |
| நிதிச் செயலாற்றுமைக் கூற்று | 78 |
| நிதி நிலைமைக் கூற்று | 79 |
| தேறிய சொத்துக்களில் மாற்றம் பற்றிய கூற்று | 80 |
| காசுப் பாய்ச்சல் கூற்று | 81 |
| நிதிக் கூற்றின் குறிப்புகள் | 82 |
| நிதி செயலாற்றுமைக் கூற்றின் குறிப்புகள் | 85 |
| நிதி நிலைமைக் கூற்றின் குறிப்புகள் | 89 |
| நிதிக் கூற்றின் உப குறிப்புகள் | 91 |
| நிதி செயலாற்றுமைக் கூற்றின் உப குறிப்புகள் | 95 |
| நிதி நிலைமைக் கூற்றின் உப குறிப்புகள் | 97 |
| நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணைகள் | 103 |
| கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை | 110 |
| கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கைக்கான விளக்கம் மற்றும் விடைகள் | 119 |

## ஆணைக்குழுத் தகவல்கள்

| | |
|---|---|
| நிறுவகம் | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு |
| அமைச்சு | இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு |
| முகவரி | 03 ஆம் மாடி, "நிபுணதா பியச", 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு -05. |
| மின்னஞ்சல் | info@tvec.gov.lk |
| இணையத்தளம் | www.tvec.gov.lk |
| தொலைபேசி | 011 - 5849291 |
| தொலைநகல் | 011 - 2555007 |
| கணக்காய்வாளர்கள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதி,<br>கணக்காள்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,<br>டொரின்டன் சதுக்கம்,<br>கொழும்பு -07. |
| வங்கி | மக்கள் வங்கி<br>வை.எம்.பி.ஏ கிளை<br>பொறள்ளை |

## தொலைநோக்கு

தொழிற்சந்தைக்கு பொருந்தும் வகையில் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வியை சகலருக்கும் வழங்குவதே எமது தொலைநோக்காகும்.

## செயற்பணி

மாறுகின்ற உலக சந்தையின் தேவைப்பாடுகள் மற்றும் சமூக - பொருளாதார குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பயனுறுதியும் வினைத்திறனும் மற்றும் தர உத்தரவாதமும் வாய்க்கப்பெற்ற தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி முறைமையை தாபித்தலும் மற்றும் அதனைப் பேணுதலுமே எமது செயற்பணியாகும்.

**பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுகையில் முன்னைய வருடங்களைப் போலவே 2013 ஆம் ஆண்டும் சவால்களால் நிரம்பிய ஆண்டாக இருந்ததை குறிப்பிட வேண்டும். 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டம் (திருத்தம்) என்பவற்றிலுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவே இவ்வாணைக்குழு தொழிற்படுகின்றது. தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையின் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான சட்ட வரையுறுவை தயாரிப்பதன் பொருட்டு முன்னைய வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தை திருத்தஞ்செய்யும் செயற்பாட்டை சுமாராக நிறைவேற்றுவதற்கு இயலுமாயிருந்ததுடன், அதற்கமையத் தயாரிக்கப்பட்ட நகல் சட்ட வரைவுப் பத்திரத்தை கூர்ந்து நோக்குவதற்காக 2013 ஆம் ஆண்டு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு இயலுமாயிருந்தது. திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துடன் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்காக முன்வைக்கப்படும்.

தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறையின் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு விசேடமாக உதவிய திறன்கள் அபிவிருத்திச் செயற்திட்டம், தொழிநுட்பக் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டம் ஆகியவற்றால் செயற்படுத்தப்படுகின்ற அலுவல்களை மேலும் மேம்படுத்தி பரந்தளவில் நிறைவேற்றுவதற்காக உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஒன்றிணைந்து நிதியுதவி வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள செயற்திட்டத்தின் திட்டமிடல் அலுவல்களில் 2013 ஆம் ஆண்டு தீவிரமாக ஈடுபடுவதற்கு இயலுமாயிருந்தது. புதிய செயற்திட்டத்தின் அபிவிருத்தி அலுவல்களை 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கு தேவைப்படுகின்ற திறன்மிக்க மனிதவளத்தை வழங்குவதற்கான சவாலை முகங்கொடுத்து, உற்பத்தி மற்றும் சேவைகள் துறையிலுள்ள நிறுவகங்களுக்கு முகாமைத்துவ மட்டத்திலான ஊழியர்களை வழங்கும் பொருட்டு புதிதாக தேசிய தொழிற்திறன் தகுதிகள்மட்டம் 05 மற்றும் 06 இல் 22 டிப்ளோமா பாடநெறிகளை அபிவிருத்தி செய்தலிற்கான துரித செயற்திட்டத்திற்கு இவ்வாணைக்குழு தீவிரமாக பங்களிப்பை வழங்கியது. அச்செயற்திட்டத்தின் கீழுள்ள 08 புதிய டிப்ளோமா பாடநெறிகளை அபிவிருத்தி செய்வதற்கான முழுப்பொறுப்பையும் இவ்வாணைக்குழுவிடம் அமைச்சு நேரடியாக வழங்கியது. அப்பாடநெறிகளுக்கான தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் ஆகியவற்றை குறுகிய காலமான ஐந்து (05) மாதங்களில் அபிவிருத்தி செய்வதற்கு இவ்வாணைக்குழு இயலுமாயிருந்தது. மற்றைய நிறுவகங்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட டிப்ளோமா மட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் ஆகியவற்றை கூர் அராய்ந்து அவற்றிற்கான அங்கீகாரமும் இவ்வருடத்தில் பெறப்பட்டது. இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட டிப்ளோமா பாடநெறிகளை புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள பல்கலைக்கழகக் கல்லூரிகளில் செயற்படுத்துவதற்கு/ நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தேசிய தொழிற்திறன் தகுதிகள் மட்டம் 1-4 வரைக்கான 07 தேர்ச்சித் தரங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன், ஐந்து (05) தேர்ச்சித் தரங்கள் சிங்கள மொழியிலும், பத்து (10) தேர்ச்சித் தரங்கள் தமிழ் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டன. தொழில் உலகிற்கு தேசிய தேர்ச்சித் தரங்களையும் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகளையும் அறிமுகப்படுத்துவதற்காக இரண்டு (02) செயலமர்வுகள் 2013 ஆம் ஆண்டில் நடாத்துவதற்கு இயலுமாயிருந்தது. தேசிய தொழிற்திறன் தகுதிகள் தொடர்பாகத் தேவைப்படும் மதியுரைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட சுற்றறிக்கைகளும் 2013 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

தேசிய தொழிற்திறன் தகுதிகளை விருதளிக்கும் பொருட்டு நடாத்தப்படும் கணிப்பீடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக உத்தேச புதிய பிரிவிற்குத் தேவையான பணியாளர் தேவைப்பாட்டிற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டில் இயலுமாயிருந்தது. சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக வேண்டுதல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் சபை கூர்ந்து நோக்கியதன் பிற்பாடே அங்கீகாரம் கிடைப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரம் கிடைத்த பிறகு சம்பந்தப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளப்படும். ஆணைக்குழுவின் மற்றைய பதவி வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பை முறையாக மேற்கொள்வதற்கு 2013 ஆம் ஆண்டில் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழக்ளை வழங்கும் பிரிவினால்/ அலகினால் 2013 ஆம் ஆண்டில் மட்டும் 22,855 சான்றிதழ்கள் அச்சடிப்பதற்கு இயலுமாயிருந்தது. அதன்கீழ் தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கே அதிகளவான சான்றிதழ்கள் அச்சடிக்கப்பட்டு விநியோகஞ் செய்யப்பட்டன.

திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவின் அலுவல்களில் ஒன்றான பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி வழங்குதலும் இவ்வருடத்தில் இடம்பெற்றது. அதன் கீழ் ரூ.4.1மில்லியன் நிதித்தொகை அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகளிலுள்ள 21 பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. நிதியுதவி வழங்கப்பட்ட உரிய பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கப்பட்டு தேசிய தொழிற்திறன் தகுதிகளையும் பெற்றுக்கொடுப்பதறந்கு இயலுமாயிருந்தது. முன்னைய வருடங்களில் வழங்கப்பட்ட நிதியுதவிகள் முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை விசாரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றும் செயற்படுத்தப்பட்டது. தொழிற் கல்வி, பயிற்சித் திட்டங்களைத் தயாரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் போக்குவரத்துத் துறைக்கான திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பாக சில செயலமர்வுகளும் அவ்வருடத்தில் நடாத்தப்பட்டன. முன்னைய வருடங்களில் தயாரிக்கப்பட்ட தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கைத்தொழிற் துறைக்கான பத்து (10) தொழிற் பயிற்சித் திட்டங்களின் மனித வளத் தேவைப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது. மாகாண ரீதியான தொழிற் பயிற்சித் திட்டங்களைத் தயாரிக்கும வேலைத்திட்டத்திக் கீழ் வடமேல் மாகாணத்திற்கான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரமும் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டது. அத்தோடு, மூன்று (03) மாகாணங்களுக்கான புதிய தொழிற் பயிற்சி திட்டங்களை தயாரிப்பதற்கான அலுவல்களும் இவ்வாண்டிலேயே தொடங்கப்பட்டன. மேல், ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தொழிற் பயிற்சித் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சிச் சிற்றறையின் அலுவல்கள் 2013 ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒன்பது (09) ஆராய்ச்சிக் கற்கைகள் 2013 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆராய்ச்சி மாநாட்டில் வெளியிடப்பட்டன. வழக்கம்போல், ஆணைக்குழுவின் யாக்கத் திட்டம்(கூட்டுத் திட்டம்) நாளதுவரையாக்கப்பட்டதுடன், அதற்கமையத் தயாரிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாக்கத் திட்டத்திற்கான அங்கீகாரமும் பெறப்பட்டது.

தொழிற் பயிற்சியின் தரத்தன்மையை உத்தரவாதப்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் 256 பயிற்சி நிலையங்களை 2013 ஆம் ஆண்டில் பதிவுசெய்வதற்கு இயலுமாயிருந்தது. 2013 ஆம் ஆண்டில் 225 நிலையங்களை பதிவுசெய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்தது. ஆகவே, இத்தேர்ச்சியானது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகும். பதிவு புதுப்பித்தலின் கீழ் 250 பயிற்சி நிலையங்களின் பதிவைப் புதுப்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன், அவ் இலக்கு அவ்வாறே எய்துவதற்கு இயலுமாயிருந்தது. இதற்காக அப்பிரிவில் பணியாற்றும் அலுவலர்கள் அயராது கடமையாற்றியதுடன் அதற்காக அவர்களுக்கு எனது பாராட்டு உரித்தாகட்டும். பயிற்சி நிலையங்களைப் பதிவுசெய்வதை விருத்திசெய்வதற்காக சம்பந்தப்பட்ட செயலமர்வுகளை நடாத்துதலும் மற்றும் பதிவுபற்றிய விளம்பரங்களை தேசிய புதினப்பத்திரிகைகளில் வெளியீடு செய்து பொதுமக்களை முறை வழிநடத்துதலும் 2013 ஆம் ஆண்டில் நிகழ்ந்தன. பாடநெறி உரித்துச்சான்றளிக்கை வேலைத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் 557 பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்வதற்கு இயலுமாயிருந்ததுடன், மொத்தமாக உரித்துச்சான்றளிக்கை செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 1601 ஆக உயர்ந்துள்ளது. அதன் கீழ் தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் நடாத்தப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை 426 ஆகும். இந்நிலைமையை பாரட்டுவதுடன் தனியார் துறைப் பயிற்சி நிலையங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்துவதன் அவசியமானது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பணியென்பதை இங்கு குறிப்பிட முடியும். அதற்கிடையில், முன்னைய வருடங்களில் உரித்துச்சான்றளிக்கை செய்யப்பட்ட 151 பாடநெறிகளின் உரித்துச்சான்றளிக்கையும் புதுப்பிக்கப்பட்டன. பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை தாபிப்புச் செய்தலின் கீழ் மூன்று (03) தரக் கையேடுகள் அங்கீகரிப்பிற்காக கிடைக்கப்பெற்றதுடன் அவை தொடர்பான குறித்துரைகள் அந்நிறுவகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குத் தேவைப்படும் பயிற்சி நிலையங்களின் பதிவை உறுதிப்படுத்தும் 425 கடிதங்கள் 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. பதவி வெற்றிடத்திற்காக ஆட்சேர்க்கும் போது தொழிற் பயிற்சிச் சான்றிதழ்களை உறுதிப்படுவதற்காக 375 கடிதங்களை வழங்குவதற்கு 2013 ஆம் ஆண்டில் இயலுமாயிருந்தது. வருமானம் பெறுதலின் கீழ் மொத்தமாக பாடநெறி உரித்துச் சான்றளிக்கை மற்றும் பயிற்சி நிலைய பதிவு என்பவற்றால் 2013 ஆம் ஆண்டில் ரூ. 3.8 மில்லியன் தொகையை வருமானமாக ஈட்டுவதற்கு இயலுமாயிருந்தது.


கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தயாரிப்பதற்கும் அத்துடன் தீர்மானம் எடுத்தலை இலகுவாக்கும் பொருட்டும் தேவையான தொழிற்சந்தைத் தகவல் அடங்கிய அரையாண்டு தொழிற்சந்தைத் தகவல் பருவவெளியீடு மற்றும் வருடாந்தம் வெளியீடு செய்யப்படுகின்ற தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கிய தொழிற் பயிற்சி வழிகாட்டல் ஆகியவற்றை வெளியீடு செய்வதற்கு இவ்வாணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவிற்கு இயலுமாயிருந்தது. அதற்கிடையில், ஆணைக்குழுவின் செய்தி மடலையும் மற்றும் தொழிற் சந்தைத் தகவல் வெளியீடையும் தயாரிப்பதற்கும் 2013 ஆம் ஆண்டில் இயலுமாயிருந்தது.

அத்தோடு, ஆணைக்குழுவின் இணைய தளத்தையும் நாளதுவரையாக்குவதற்கும் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கு தேவைப்படுகின்ற கணினி முறைமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவற்றை நிர்வகித்தல் ஆகியனவும் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழு மிகுந்த சவாலுடன் செயற்படுத்திய மற்றுமொரு வேலைத்திட்டம் யாதெனில் " Touch Your Future" (எதிர்காலத்தைக் காண்போம்) எனப் பெயரிடப்பட்ட தேசிய திறன்கள் மற்றும் புத்தாக்கப் போட்டியாகும். இதன் கீழ் அரச துறைப் பயிற்சி நிறுவகங்கள் நடாத்தப்படும் பூர்வாங்கப் போட்டிகளைக் கண்காணித்தல் மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவகங்களின் போட்டிகளை நடாத்துல் போன்ற அலுவல்கள் இவ்வாணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்தோடு, போட்டிக்கான ஊடக விளம்பரத்தை மேற்கொள்ளும் பொறுப்பும் இவ்வாணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. உரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டு பூர்வாங்கப் போட்டிகளை ஏற்பாடுசெய்து நடாத்துதல் மற்றும் அப்போட்டிகளில் தகுதிபெற்றவர்களை அழைத்து மாகாண மட்டப் போட்டிகளை நடாத்துதல் போன்ற அலுவல்கள் இவ்வாணைக்குழுவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இவ் அலுவல்கள் அனைத்தும் செவ்வனே நிறைவேறுவதற்காக ஆணைக்குழுவின் சகல அலுவலர்களும் மற்றும் உதவிப் பதவியணிநரும் முயற்சியுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதற்காக, ஆணைக்குழுவின் சகல ஊழியர்களுக்கும் எனது பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும்.

இலங்கையின் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் ஒழுங்குப்படுத்தும் அமைப்பாகிய இவ்வாணைக்குழு சர்வதேச பிரதிநிதித்துவ நிறுவகங்கள் பலவற்றுடன் உற்பத்தித்திறன் வாய்ந்த தொடர்புகளை ஏற்படுத்தி அதனைப் பேணி வருகின்றது. இவ்வாணைக்குழு யுனெஸ்கொ யுனெவொக் தொடர்பு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கான அலுவல்களில் இவ்வாணைக்குழு ஈடுபட்டது. இதற்கான வசதிகளை வழங்கும் பொருட்டு யுனெஸ்கொ யுனெவொக் நிறுவகத்தின் கிளைக் காரியாலயம் இவ்வாணைக்குழுவில் தாபிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல் தொடர்பான அறிவை பரிமாறும் பொருட்டு பாகிஸ்தான் நாட்டின் உயர்மட்ட அதிகாரகள் கொண்ட குழு இவ்வாணைக்குழுவின் பல செயலமர்வுகளில் பங்குபற்றியது. தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையில் தூர மற்றும் கலப்புக் கல்வியை மாணவர்களுக்கிடையே பிரபல்யப்படுத்துவற்காக மின்னணு மூலமான கற்றலின் அடிப்படையிலான பாடநெறிகளுக்கு தரச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான முறையொன்றைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தோம். இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி வேலைத்திட்டமொன்றை பொதுநலவாய நாடுகளுக்காக அபிவிருத்தி செய்வதற்கு யுனெவொக் நிலையத்தினூடாக இவ்வாணைக்குழுவிற்கு இயலுமாயிருந்தது. சிங்கப்பூர் தெமசெக் மன்றத்தின் ஒத்துழைப்புடன் தொழில்நுட்ப, தொழிற் கல்வி பயிற்சித் துறையில் பணியாற்றுகின்ற போதனாசிரியர்களுக்கான ஆற்றலை விருத்திசெய்யும் வேலைத்திட்டமொன்றை ஏற்பாடு செய்வதற்கும் மற்றும் அதற்காக பங்கெடுப்பதற்கும் 2013 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவிற்கு இயலுமாயிருந்தது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் 2013 ஆம் ஆண்டு ஆணைக்குழுவில் பணியாற்றுகின்ற சகல ஊழியர்களும் அதிகளவு பணிச்சுமை நிறைந்த ஆண்டாக இருந்தமை குறிப்பிட வேண்டியதுடன், ஒப்படைக்கப்பட்ட சகல பொறுப்புகளையும் திருப்திகரமாக நிறைவேற்ற அவர்களுக்கு இயலுமாயிருந்தது. அதற்காக எனது மனமார்ந்த கௌரவத்தையும் நன்றிகளையும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.



**முனைவர் எஸ்.டீ.ஆர். பெரேரா**
பணிப்பாளர் நாயகம்

## 1.0 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்விச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் ஓர் நியதிச்சட்ட அமைப்பாக 1999 ஆம் ஆண்டு திசெம்பர் 16 ஆந் திகதி தொடக்கம் தொழிற்படுகின்றது.

எமது ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை கொள்கை வகுத்தல், திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்;
- சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல்; மற்றும்
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர்கள் மற்றும் ஏனைய சகல தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி தராதரங்களைப் பேணல்.

## 2.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அமைப்புக் கட்டமைப்பு

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இவ்வாணைக்குழு 1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் (திருத்தம்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரையும் உறுப்பினர்கள் 16 பேரையும் கொண்டுள்ளது.

**2013 ஆம் ஆண்டில் இருந்த உறுப்பினர்களின் விபரம் பின்வருமாறு:**

**நியமனங்கள் சரத்து 6(1) (h) உள்ளதன் படியாகும்.**

1. பேராசிரியர் தயந்த. எஸ். விஜேசேகர - தலைவர்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

2. திரு.நளின் ஆட்டிகல - உறுப்பினர்
இலங்கை கைத்தொழில், வர்த்தகக் கூட சம்மேளனத்தின் பிரதிநிதி

3. முனைவர். கே. எல். சந்திரதிலக்க - உறுப்பினர்
இலங்கை தொழில் தருநர் கூடப் பிரதிநிதி

4. திரு. நந்ததாச ராஜபக்ஸ - உறுப்பினர்
இலங்கை சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் கூடப் பிரதிநிதி

5. திரு. லால் த அல்விஸ் - உறுப்பினர்
தேசிய வர்த்தகக் கூடப் பிரதிநிதி

6. திரு. திஸ்ஸ செனவிரத்ன - உறுப்பினர்
இலங்கை தேசிய கைத்தொழில் கூடப் பிரதிநிதி

7. திரு. சி. ஜே. குணசீல - உறுப்பினர்
கைத்தொழில், வர்த்தகக் கூடப் பிரதிநிதி (சபரகமுவ மாகாணம்)

8. திரு. யு. ஐ. எஸ். திலக்கவர்தன - உறுப்பினர்
இலங்கை வர்த்தகக் கூடப் பிரதிநிதி

9. சட்டத்தரணி திரு. சேனரத் ஜயசுந்தர - உறுப்பினர்
கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்

10. டாக்டர். ஜி. விஜேசூரிய - உறுப்பினர்
கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்
(டாக்டர் ஜி. விஜேசூரிய அவர்கள் 2013.05.31 தொடக்கம் இவ்வாணைக்குழு உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்)

**நியமனங்கள் பாகம் 6 (1) கீழானவை:**

1. பி.எச்.எஸ். சுரவீர (2013 பெப்ரவரி 28 வரை) - உறுப்பினர்
பதில் பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

   முனைவர் எஸ்.டீ.ஆர். பெரேரா (2013 மார்ச் 01 தொடக்கம்)
   பணிப்பாளர் நாயகம்

2. திரு.கே.ஏ.சீ. அருணதேவ சில்வா - உறுப்பினர்
தலைவர்
தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

3. கேர்னல் திரு.கே.பி.ஆர்.ரத்நாயக்க - உறுப்பினர்
தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

4. திரு.டப்.ஏ.ஜயவிக்ரம (2013.06.30 வரை) - உறுப்பினர்
பதில் பணிப்பாளர் நாயகம்

திரு.எஸ். பாலசுப்பிரமணியம் (2013.07.01 தொடக்கம்)
பணிப்பாளர் நாயகம்
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சி திணைக்களம்

5. பேராசிரியர் கே.கபில.சீ.கே பெரேரா - உறுப்பினர்
பணிப்பாளர் நாயகம்

திரு.ஹிலரி ஈ சில்வா (2013 பெப்ரவரி தொடக்கம்)
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம்

6. திரு.கே.எச்.ஏ.எஸ்.விஜயரத்ன - உறுப்பினர்
பணிப்பாளர் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்,
நிதி அமைச்சு, திறைசேரி பிரதிநிதி

7. திரு. லெஸ்லி தேவேந்திர - உறுப்பினர்
தொழிலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதி

## 3.0 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி

இவ்வாணைக்குழுவின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணிப்பாளர் நாயகம் கடமையாற்றுகிறார். அவரது உதவிக்காக பிரதி பணிப்பாளர் நாயகம், பணிப்பாளர்கள் நால்வர் (04) மற்றும் பிரதி பணிப்பாளர்கள் அறுவர் (06) அடங்கலாக 70 பேர் கொண்ட பதவியணியொன்றினூடாக ஆணைக்குழுவின் பணிகள் 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன.

அதற்கமைய, இவ்வாணைக்குழுவின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்தும் நோக்கில் பின்வரும் பிரிவுகளின் கீழ் இதன் செயற்பாடுகள், இலக்குகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

- நிர்வாகம், நிதிப் பரிவு
- திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவு
- பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள் பிரிவு
- தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு
- தகவல் முறைமைகள் பிரிவு

இவ்வாணைக்குழுவிற்காக 85 பேர் கொண்ட பதவியணி அனுமதிக்கப்பட்டிருப்பினும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கங்களுக்கமைய 2013.12.31 அன்று இவ்வாணைக்குழுவில் 70 பேர் கொண்ட பதவியணியொன்றிருந்தது. பதவியணியினரின் விபரங்கள் வருமாறு:

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணி விபரம் - 2013**

| பதவி நிலை | | அங்கீகரிக்கப்பட்ட தொகை | 31.12.2013 அன்று பணியிலிருந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 01 | 01 |
| 03. | பணிப்பாளர் | 05 | 03 |
| 04. | பணிப்பாளர் நிர்வாகம் | 01 | 01 |
| 05. | தொழிற்சந்தை பகுப்பாய்வாளர் | 01 | 01 |
| 06. | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 15 | 12 |
| 07. | பிரதி பணிப்பாளர் (நிதி) | 01 | 01 |
| 08. | உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | 01 |
| 09. | உதவிப் பணிப்பாளர் (சட்டம்)/ பணிப்பாளர் சபைச் செயலாளர் | 01 | 01 |
| 10. | புள்ளிவிபரவியலாளர் | 01 | 01 |
| 11. | நூலகர்/ ஆவணப்படுத்தும் அலுவலர் | 01 | 01 |
| 12. | நிர்வாக அலுவலர் | 01 | - |
| 13. | மொழிபெயர்ப்பாளர் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) | 01 | - |
| 14. | அபிவிருத்தி அலுவலர் | 12 | 08 |
| 15. | தகவல் தொழில்நுட்பவியல் அலுவலர் | 01 | 01 |
| 16. | தகவல் தொழில்நுட்பவியல் உதவியாளர் | 02 | - |
| 17. | கணினி பிரயோக உதவியாளர் | 04 | 04 |
| 18. | நூலகர்/ ஆவணப்படுத்தும் உதவியாளர் | 01 | - |
| 19 | முகாமைத்துவ அலுவலர் (தரம்1/தரம்11/தரம்111) | 15 | 15 |
| 20. | சாரதி (தரம்1/தரம்11/தரம்111) | 12 | 11 |
| 21. | அலுவலக உதவியாளர் | 07 | 07 |
| | **மொத்தம்** | **85** | **70** |

வெற்றிடம் நிலவிய சாரதிப் பதவியொன்றிற்காக நேர்முகத் தேர்வொன்று நடாத்தப்பட்டு விண்ணப்பதாரர்களுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் 2013.01.01 தொடக்கம் சேவைக்கு சமூகமளித்ததுடன் அவர் 2013.11.20 தொடக்கம் சேவையை விட்டு விலகியுள்ளார. இதற்கு மேலதிகமாக, உதவிப் பணிப்பாளர்களுக்கான நேர்முகத்தேர்வு 2013.12.27 திகதியன்று நடாத்தப்பட்டதுடன் அந்நேர்முகத்தேர்வில் மூன்று (03) உதவிப் பணிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவிப் பணிப்பாளர் பதவி வெற்றிடங்கள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டன. அத்தோடு, அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான நேர்முகத்தேர்வின் போது நான்கு (04) பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் இதுவரை நிலவிய வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. கணினி தொழில்நுட்ப உதவியாளர் பதவி வெற்றிடங்கள் இரண்டிற்காக (02) நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்டு அவ்விரு பதவிகளுக்காக இருவர் (02) தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டன.

நிர்வாக அலுவலர் பதவிக்காக இரண்டு (02) நேர்முகத்தேர்வுகள் முறையே 2013.05.21 மற்றும் 2013.09.16 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டதுடன், தகுதியானவர் ஒருவரேனும் காணப்படாமையின் காரணத்தால் அப்பதவி வெற்றிடம் நிரப்பப்படவில்லை. மொழிபெயர்ப்பாளருக்கான ஆட்சேர்ப்பு தகைமையைத் திருத்தஞ் செய்வதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடம் அத்திருத்தம் 2013.12.05 திகதியன்று அனுப்பிவைக்கப்பட்டதுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2014.01.22 திகதியன்று அதற்கான அனுமதியை வழங்கியதுடன் விரைவில் பத்திரிகைகளில் பதவிவெற்றிட விளம்பரத்தை வெளியீடுசெய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

வெற்றிடம் நிலவுகின்ற இரண்டு (02) பணிப்பாளர்கள் பதவிக்காக பத்திரிகை விளம்பரங்களினூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன், பணிப்பாளர் பதவிகளுக்கான திருத்தங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்திருத்தங்களுக்கான அனுமதி கிடைக்கும் வரையில் அப்பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வுகளை பிற்போடுவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

மொழிபெயர்ப்பாளர் மற்றும் நூலக உதவியாளர் பதவிகளுக்காக பத்திரிகை விளம்பரங்களினூடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் மொழிபெயர்ப்பாளர் பதவிக்காக தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணபங்கள் கிடைக்காமையின் காரணத்தால் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்ட திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய, நிர்வாக அலுவலர் பதவி வெற்றிடத்துடன் சேர்த்து மொழிபெயர்ப்பாளர் பதவிவெற்றிட விளம்பரத்தை மீண்டும் பத்திரிகைகளில் வெளியீடு செய்வதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்படும். நூலக உதவியாளர் பதவிக்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கான நேர்முகத்தேர்வை விரைவில் நடாத்துவதற்கு அலுவல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**4.0 நிர்வாகம், நிதிப் பிரிவு**

ஆணைக்குழுவின் கடமைகளை உற்பத்தித்திறனும் வினைத்திறனும் வாய்ந்ததாக மேற்கொள்வதற்கு தேவையான மனித மற்றும் நிதி வள முகாமைத்துவ முறைமை அடங்கலாக உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்ற தொழிற்பாடுகளை இப்பிரிவு நிறைவேற்றுகின்றது.

மனிதவள முகாமைத்துவத்திற்கமைவாக பதவி வெற்றிடங்களை நிரப்புமுகமாக 2013 ஆம் ஆண்டில் கீழ் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் இவ்வாணைக்குழுவின் சேவைக்கு அமர்த்தப்பட்டனர்.

**4.1. 2013 ஆம் ஆண்டின் புதிய நியமனங்கள்**

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| முனைவர் எஸ். டீ. ஆர். பெரேரா | பணிப்பாளர் நாயகம் | 2013.03.01 |
| திரு. எச்.ஜீ.கே.என். பண்டார | உதவிப் பணிப்பாளர் | 2013.02.01 |
| திரு.திமுத்து பிரதீப் வித்தானகே | அபிவிருத்தி அலுவலர் | 2013.06.06 |
| திருவதி. வத்சலா மதுஷானி | அபிவிருத்தி அலுவலர் | 2013.07.15 |
| திருவதி.கே.டப்.ஏ. அநுருத்திகா | கணினி பிரயோகங்கள் உதவியாளர் | 2013.07.15 |
| திரு.சீ.எச். விமுக்தி தர்ஷனிக்கா | முகாமைத்துவ உதவியாளர் | 2013.03.01 |
| திருவதி. சஷிகா சத்துரங்கனி | முகாமைத்துவ உதவியாளர் | 2013.06.06 |
| திரு.ஏ.பி. சுப்புன் தாரக்க | சாரதி | 2013.01.01 |
| திரு. நிஷாந்த கமல்பிரிய | சாரதி | 2013.09.02 |
| திரு.லசந்த சந்தருவன் | அலுவலக உதவியாளர் | 2013.09.02 |

பட்டதாரிகளுக்கான வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினூடாக பின்வரும் அபிவிருத்தி உதவியாளர்கள் இவ்வாணைக்குழுவில் கடமையாற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

| பெயர் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திருவதி.எம்.எஸ்.எஸ். மாரசிங்க | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.06 |
| திருவதி.ஆர்.டீ.எஸ். அமரசேன | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.02 |
| திருவதி. மதுஷா அபேதீர | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.06 |
| திருவதி.எம்.ஆர்.எச்.சீ. சூரியவன்ஸ | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.02 |
| திருவதி.ஜீ.ஆர்.எஸ். செனவிரத்ன | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.02 |
| திருவதி.எஸ்.வீ. நிரஞ்சலா ரஞ்ஜனி | அபிவிருத்தி அலுவலர் | 2013.05.06 |

**4.2 2013 ஆம் ஆண்டில் ஆணைக்குழுப் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்தவர்**

| பெயர் | பதவி | இராஜினாமா செய்த திகதி |
|---|---|---|
| திருமதி.ஜே.டி.என்.பீ. ஜயக்கொடி | கனிஷ்ட நிகழ்ச்சித்திட்டமிடலாளர்/ நிகழ்ச்சித்திட்ட ஆய்வாளர் | 2013.01.31 |
| திருமதி.எச்.ஜீ. பியுமி தில்ஹாணி | கணினி பிரயோகங்கள் உதவியாளர் | 2013.02.28 |
| திரு.கே.எம்.ஜீ.பி.எஸ்.கே. டயஸ் | முகாமைத்துவ உதவியாளர் | 2013.02.28 |
| திரு.ஜே.திலக் தம்மிக்க | அலுவலக உதவியாளர் | 2013.07.01 |
| திரு.திமுத்து பிரதீப் வித்தானகே | அபிவிருத்தி அலுவலர் | 2013.09.30 |
| திரு.ஏ.பி. சுப்புன் தாரக்க | சாரதி | 2013.11.20 |

**4.3 2013 ஆம் ஆண்டில் கடமையை ஆவரணப்படுத்துதல்/ பதில் கடமையாற்றல் பதவிக்காக ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்**

| பெயர் | பதவி | திகதி |
|---|---|---|
| திரு.பி.எச்.எஸ்.சுரவீர | பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக | 2013.02.28 |
| திரு.எஸ்.யு.கே.ரூபசிங்க | பணிப்பாளர் (பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள்) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக | 2009.07.01 |

தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வைக்கு அமைய ஆட்சேர்ப்புத் திட்டத்தை புதிதாகத் தயாரிக்கும் பணிகள் 2006 ஆம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அத்திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. அப்புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்கத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டு புதிய தகைமைகளின் கீழ் பணிப்பாளர் (பாநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள்) பதவி வெற்றிடம் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளதால் இப்பதவிக்கு ஆட்சேர்க்கப்படவில்லை. தற்போது இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பினும் அவ் ஆட்சேர்ப்புத் திட்டம் மீண்டும் ஆணைக்குழுவின் பணிப்பாளர்கள் சபையினூடாக திருத்தஞ்செய்யப்பட்டு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி பெறுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், அனுமதி கிடைக்கும் வரையில் இப்பதவி வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு பிற்போடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இதற்கான அனுமதி கிடைத்தவுடன் ஆட்சேர்ப்பிற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

### 4.4 உள்ளூர், வெளியூர் பயிற்சி

இவ்வாணைக்குழுவின் பதவியணியினரின் தொழிற்திறன் தொடர்பான அறிவை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்டு அலுவலர்களை உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சி/ கருத்தரங்குகள் என்பவற்றில் பங்குபற்றுவதற்கான அலுவல்களையும் இப்பிரிவு மேற்கொண்டது. 2013 ஆம் ஆண்டில் உள்ளூர் மற்றும் வெளியூர் பயிற்சி/ கருத்தரங்குகள் என்பவற்றில் பங்குபற்றியவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**உள்ளூர் பயிற்சி - 2013**

**பதவியணியில் உள்ளவர்களுக்கு கீழ்க்குறிப்பட்ட வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது:**

**அட்டவணை 4.1: உள்ளூர் பயிற்சி - 2013**

| பெயர் | பதவி | பயிற்சி | விடயம் | கால எல்லை |
|---|---|---|---|---|
| பி.எச்.எஸ்.சுரவீர | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | SLITAD தேசிய மாநாடு | SLITAD | 2013/05/08 |
| வத்சலா மதுஷானி | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| பி.எஸ்.ஜே. விபுல்ஸி | அபிவிருத்தி அலுவலர் | | | - |
| எச்.எம்.ஏ.டி.கே. ஹேரத் | அபிவிருத்தி அலுவலர் | திட்ட முகாமைத்துவம் | SDFL | 2013/07/23-24 |
| டி.என்.ஐ.டி. த சில்வா | அபிவிருத்தி அலுவலர் | திட்ட முகாமைத்துவம் | SDFL | 2013/07/23-24 |
| ஆர்.டி.எஸ். அமரசேன | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| எச்.எம்.எஸ். மாரசிங்க | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| மதுஷா அபேதீர | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| எம்.ஆர்.எச்.சீ.சூரியவன்ஸ | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| எஸ்.வீ. நிர்மலா ரஞ்ஜனி | அபிவிருத்தி அலுவலர் | | | |
| ஜி.ஆர்.எஸ். செனவிரத்ன | அபிவிருத்தி அலுவலர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| டப். ஜி. சுமிந்த அருணகீர்த்தி | முகாமைத்துவ அலுவலர் | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் வழங்கல் படிமுறை தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு | ICTAD | 2013/02/21 |
| | | போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு | SDFL | 2013/06/20 |
| | | எழுதுவினைஞர் NVQ மட்டம் 3 | NAITA | 2013/04/03 |
| எச்.பீ.இந்திக சம்பத் | முகாமைத்துவ அலுவலர் | முகாமைத்துவம் தொடர்பான B.Sc பட்டப்படிப்பு | Open University | 3 Years |

| பெயர் | பதவி | பயிற்சி | விடயம் | கால எல்லை |
|---|---|---|---|---|
| சஷிகா சத்துரங்கனி | முகாமைத்துவ உதவியாளர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| சீ.எச். விமுக்தி தர்ஷனிக்கா | முகாமைத்துவ உதவியாளர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| ஆர்.ஜி. அசங்க திஸ்ஸ குமார | முகாமைத்துவ உதவியாளர் | எழுதுவினைஞர் NVQ மட்டம் 3 | NAITA | 2013/04/03 |
| நிஸன்சலா தில்ருக்ஷி | முகாமைத்துவ உதவியாளர் | எழுதுவினைஞர் NVQ மட்டம் 3 | NAITA | 2013/04/03 |
| ஜி.சீ. ஜனக் த சில்வா | முகாமைத்துவ உதவியாளர் | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் வழங்கல் படிமுறை தொடர்பான ஒருநாள் கருத்தரங்கு | ICTAD | 2013/02/21 |
| கே.டப்.ஏ. அநுருத்திகா | கணினி பிரயோகங்கள் உதவியாளர் | ஆரம்ப பயிற்சி | SDFL | 2013/07/23-25 |
| எஸ்.எஸ்.கல்பகே | அலுவலக உதவியாளர் | கனணி பிரயோக உதவியாளர் NVQ மட்டம் 3 | NAITA | 2013/04/03 |

**அட்டவணை 4.2: வெளியூர் பயிற்சி/ கருத்தரங்குகள் – 2013**

| பெயர் | பதவி | பயிற்சியின் தலைப்பு | விடயம் | கால எல்லை |
|---|---|---|---|---|
| முனைவர் எஸ். டீ. ஆர். பெரேரா | பணிப்பாளர் நாயகம் | ஆசிய பசுபிக் சர்வதேச கல்வி மாநாடு | Australia | 2013/08/28 -30 |
| | | வேலைவாய்ப்பில் தொழில் நுட்ப திறன்கள் பங்கு மற்றும் அதன் விளைவு | Iran | 2013/05/07 To 10 |
| ஜே.ஏ.டி.ஜே. ஜயலத் | பணிப்பாளர் (தகவல் முறைமைகள்) | இளைஞர்வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த அபிவிருத்தி தொடர்பாக முன்னேற்றமடையும் TVET துறைக்கான பிராந்திய ஆசிய மற்றும் பசுபிக் மாநாட்டில் பங்குபற்றியமை | Korea | 2013/09/01 -08 |
| பி.கே. சுனில் | பிரதிப் பணிப்பாளர் (தேசிய தொழிற்திறன் தகுதிகள்) | அபிவிருத்தியில் தொழிற் கல்வி முகாமைத்துவம் தொடர்பான கூட்டம் | China | 2013/04/08 - 04/30 |
| டப்.ஏ.டப்.சீ. பிரேமரத்ன | பிரதிப் பணிப்பாளர் (பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள்) | 2013 ஆம் ஆண்டுக்கான பிராந்திய செயற்பாடு தொடர்பான திட்டமிடலுக்கான Unevoc ஆலோசகர் பயிற்சி பட்டறை | UN Campus Bonn,Germany | 2013/03/17 -03/20 |
| லக்சரா எதிரிசூரிய | தொழிற் சந்தை பகுப்பாய்வாளர் | Dujiangyan சர்வதேச மாநாடு ICT ஊடான கிராமிய இளைஞர்களின் திறன்கள் அபிவிருத்தி | China | 2013/10/24 - 2013/10/28 |
| பி.எம்.சி.பீ. குணதிலக்க | உதவிப் பணிப்பாளர் | இலத்திரனியல் (e) கற்பிப்போருக்கான பயிற்சி | Germany | 2013/04/21 -04/26 |
| டப்.ஏ.எல். தயமந்தி | புள்ளிவிபரவியலாளர் | TVET இன் மாற்றப்படக்கூடிய திறன்கள் தொடர்பான ஆராய்ச்சி பயிற்சி பட்டறை | China | 2013/10/22 - 2013/10/28 |

### 4.5 வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தை மீளச் செலுத்தல்

இவ்வாணைக்குழுவில் பணியாற்றும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அதிகாரிகளினால் தொழில்சார் நிறுவகங்களுக்கு செலுத்தப்பட்ட வருடாந்த அங்கத்துவக்கட்டணம் இவ்வாணைக்குழுவால் மீளச் செலுத்தப்பட்டது.

| | |
|---|---|
| பேராசிரியர் தயந்த விஜேசேகர, தலைவர் | • பட்டய ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்து நிறுவகம்<br>• பட்டய சிவில் பொறியியலாளர்கள் நிறுவகம் - இங்கிலாந்து |
| திரு.பி.எச்.எஸ்.சுரவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம் | • இலங்கை பொறியிலாளர் நிறுவகம்<br>• இலங்கை பயிற்சி, அபிவிருத்தி நிறுவகம் |
| திரு.டப்.பி.எம்.பி.பிரேமசந்திர, பணிப்பாளர் (நிர்வாகம்) | • இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் |
| திரு.ஜே.ஏ.டி.ஜே.ஜயலத், பணிப்பாளர் (தகவல் முறைமைகள்) | • பிரித்தானிய கணினி சங்கம்<br>• இலங்கை கணினிச் சங்கம் |
| திருவதி.எச்.எம்.ஏ.டி.கே.ஹேரத், அபிவிருத்தி அலுவலர் (தகவல் முறைமைகள்) | • இலங்கை கணினிச் சங்கம் |
| திரு.எஸ்.யு.கே.ரூபசிங்க, பதில் பணிப்பாளர் (பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள்) | • இலங்கை பொறியிலாளர் நிறுவகம் |
| திரு. வஜிர பெரேரா பணிப்பாளர் (தேசிய தொழிற்திறன் தகுதிகள்) | • இலங்கை முகாமைத்துவ நிறுவகம் |
| திரு.டப்.எம்.டீ. அநுர வீரக்கோன் நூலகர் | • இலங்கை நூலகச் சங்கம் |

### 4.6 நிதித் தேர்ச்சி

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான நிதி திறைசேரியினூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**2013 ஆம் ஆண்டின் செலவினங்களுக்காக இவ்வாணைக்குழுவினால் உத்தேசிக்கப்பட்ட தொகைகள் வருமாறு:**

மீள்வரும் செலவுகளுக்காக ரூ. 66 மில்லியன் ஆகும்.
மூலதனச் செலவுகளுக்காக ரூ. 15 மில்லியன்கள் ஆகும்.

இவ் ஒதுக்கங்களில் 2013 ஆம் ஆண்டிற்காக திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டு செலவுகளுக்காக விடுவிக்கப்பட்ட தொகைகள் வருமாறு:

மீள்வரும் செலவுகளுக்காக ரூ.53,640,700 நிதித்தொகையும் , மூலதனச் செலவுகளுக்காக ரூ.10,060,000 நிதித்தொகையும் விடுவிக்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் உத்தேசிக்கப்பட்ட தொகையை 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீள்வரும் செலவில் 9.6% அதிகரிப்பு காணப்பட்டதுடன், மூலதன மதிப்பீட்டில் 18% அதிகரிப்பு காணப்பட்டது.

2013 ஆம் ஆண்டில் 078-1001-1226834 கணக்கில் மேலதிகமா இருந்த ரூ.2,500,000 பணத்தை மூன்று மாத வைப்பு முதலீடாக பயன்படுத்த இயலுமாயிருந்தது.

இவ்வாணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டிற்கான செலவு உத்தேசத்தொகையைத் தயாரிக்கும் போது, தொகையாக ரூ.5.165 மில்லியன் வருவாயாக நிர்ணயிக்கப்பட்டது. எனினும் ரூ.4.497

மில்லியன் தொகையே வருவாயாக கிடைக்கப்பெற்றது. உத்தேசத்தொகை மற்றும் கிடைக்கப்பெற்ற வருவாய் (உண்மையான வருமானம்) பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | உத்தேசத் தொகை (ரூ.) | உண்மைத்தொகை (ரூ.) |
|---|---|---|
| மாணவர் தேர்ச்சி அறிக்கைப் புத்தக விற்பனையின் தேறிய இலாபம் | 1,500,000 | 1,372,385 |
| பயிற்சி நிறுவகங்களை பதிவதற்காக அறவிடப்படும் கட்டணம் | 550,000 | 1,048,500 |
| நிறுவகங்களில் பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்வதற்காக அறவிடப்படும் கட்டணம் | 1,000,000 | 1,375,600 |
| ஏனையவை | 2,115,000 | 1,170,696 |
| **மொத்தம்** | **5,165,00** | **4,497,181** |

### 4.7 உள்ளகக் கணக்காய்வு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் பணி ஆய்வு ஆகிய அலுவல்கள் இவ்வாணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், முன்னைய வருடங்களைப் போலவே எதிர்வரும் வருடங்களிலும் இவ்வாணைக்குவின் கணக்காய்வு அலுவல்கள் ஆணைக்குழுச் சட்டத்திற்கும், சுற்றறிக்கைகளுக்கும் மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்படும். கண்காணிப்பு அலுவல்கள் மற்றும் புதிய கொள்கைகள் பிரேரணை செய்தல் அல்லது கொள்கை மாற்றம் என்பவை இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு மூலம் நிறைவேற்றப்படுவதுடன், இவ்வாணைக்குழு முறைமைகளிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்தல் தொடர்புடைய அலுவல்கள் சம்பந்தப்பட்ட வருடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கீழ் குறிப்பிடப்பட்ட ஆணைக்குழு அங்கத்தவர்களைக் கொண்டதொரு குழுவாகும்.
   - பி.எச்.ஏ.எஸ். விஜேரத்ன - குழுத் தலைவர்
   - சந்திர லால் த அல்விஸ் - குழு அங்கத்தவர்
   - திஸ்ஸ செனவிரத்ன - குழு அங்கத்தவர்

2. 2013 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் முறையே 2013.03.18, 2013.06.04, 2013.08.15 மற்றும் 2013.12.18 ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டன.

3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வரும் பிரதான பணிகளில் கவனத்தைச் செலுத்தி கலந்துரையாடலை மேற்கொண்டதுடன், தேவையான உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுரை வழங்கியது.

   - உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக
   - ஆணைக்குழுவின் நிதி அறிக்கை ஆண்டு அறிக்கை தொடர்பாக
   - ஆணைக்குழுவின் வருடாந்த செயலாற்றுகை தொடர்பாக
   - ஆணைக்குழுவின் உள்ளக நிர்வாகம் மற்றும் விதி முறைகள் தொடர்பாக

4. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் ஆறு (06) பிரதான உள்ளகக் கணக்காய்வுகள் நாடத்தப்பட்டதுடன், பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிவுறுத்தல்ளுக்கமைய மேதிக கணக்காய்வுப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

### 4.8 சட்டஞ்சார்ந்த அலுவல்கள்

1. சட்டத்தின் பிரகாரம் பயிற்சி நிறுவகங்களைப் பதிவு செய்தல்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 14(1) மற்றும் 15(1) ஆகியவற்றின் பிரகாரம் எந்தவொரு அரச, தனியார் அல்லது அரச சார்பற்ற நிறுவகமும் இவ்வாணைக்குழுவின் அனுமதியின்றி மூன்றாம் நிலைக்கல்வியையோ அல்லது தொழிற்கல்வியையோ நடாத்தமுடியாது. அப்பிரிவு ஏற்பாடுகளை மீறி இயங்கும் பயிற்சி நிறுவகங்களுக்கெதிராக இவ்வாணைக்குழு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தற்போது வரை 94 பயிற்சி நிறுவகங்களுக்கு மேற்கூறப்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடு பற்றி விளக்கியதுடன், பதிவை பெற்றுக்கொள்ள எத்தனிக்குமாறு எழுத்து மூலமும் இவ்வாணைக்குழுவால் அந்நிறுவகங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. இவற்றுள் 53 பயிற்சி நிறுவகங்கள் மாத்திரமே ஆணைக்குழுவிற்கு பதில் அனுப்பின.

2. சட்டத்தைச் திருத்தஞ் செய்வதன் தேர்ச்சி

மூன்றாம் நிலைக்கல்வி,, தொழிற்கல்வி சட்டம் 1990 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டமாகுவதுடன் பதிவுசெய்யப்படாத நிறுவகங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான சட்டவிதிக் கூறுகள் அதில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இதன் காரணத்தால் அந்நிறுவகங்களுக்கெதிராக சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. உத்தேச திருத்தச் சட்டத்தில் மூலம் நீதிமன்ற அதிகாரம் பற்றிய பிரிவொன்று/சரத்தொன்று உள்ளடக்கப்பட்டு இச்சட்டத்தை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2004 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறுவை செயற்படுத்துவதற்காக பயிற்சி நிறுவகங்களைப் பதிவுசெய்தல் மற்றும் பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்தல் ஆகியவற்றை மிகவும் முறையான விதத்தில் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கமைய தொழிற் பயிற்சியை திருத்தஞ் செய்கையில் எதிர்நோக்குகின்ற சவால்களுக்கு மிகவும் உற்பத்தித்திறன் மிக்க வகையில் முகங்கொடுப்பதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இதற்காக சட்டஞ்சார் உபகுழு நியமிக்கப்பட்டதுடன் பதவியணியனரினதும் மற்றும் சம்பந்தப்பட்ட வெளிவாரி சார்பாளர்களினதும் கருத்துக்கள் கேட்கப்பட்டு திருத்தச் சட்டத்தின் நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந் நகல் அறிக்கை ஆணைக்குழு இணைய தளத்தில் வெளியீடு செய்யப்பட்டு பத்திரிகைகளினூடாக பொது மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு மீண்டும் சம்பந்தப்பட்ட வெளிவாரி சார்பாளர்களினதும் கருத்துக்கள் கேட்கப்பட்டு இறுதி நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பிறகு அரசியலமைப்பு அலுவல்கள் தொடர்பான அமைச்சரைவின் உபசெயற்குழுவிற்கு உதவுகின்ற உத்தியோக செயற்குழுக் கூட்டம் ஆண்டின் 2013.06.07 திகதியன்று நீதி அமைச்சிலும் மற்றும் அரசியலமைப்பு அலுவல்கள் தொடர்பான அமைச்சரைவின் உபசெயற்குழுக் கூட்டம் ஆண்டின் 2013.07.02 திகதியன்றும் நடாத்தப்பட்டன. அதன் பிறகு உத்தேச பரிந்துரைகளுடன் நகல் சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்திடம் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கையளிக்கப்பட்டது.

3. நிறுவகங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 04 இன் கீழ் தனியார்/ அரச சார்பற்ற துறை நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்யாத, முறையாக பாடநெறிகளை செயற்படுத்தாது இயங்கும் பயிற்சி நிறுவகங்களிடமிருந்து அந்நிதியுதவித் தொகையை மீளப்பெறுவதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதற்கமைய, அந்நிறுவகங்களுக்கெதிராக வழக்குகள் தொடுப்பதற்கு உதவிப் பணிப்பாளர் (சட்டஞ்சார்) மூலமான முழுதான மேற்பார்வையுடன் தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அவ்வழக்குகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பிறகு சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர்களுடன் இது

தொடர்பான ஆரம்பகட்ட பேச்சுவார்த்தையை நடாத்தியது. அதன் பிறகு, மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதற்கு முன் இணக்கச் சபையிடம் இந்நிறுவகங்களை கொண்டுசெல்லுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டதுடன், அதற்கமைய அந்நிறுவகங்கள் உதவிப் பணிப்பாளர் (சட்டஞ்சார்) மூலம் இணக்கச் சபையிடம் கொண்டு செல்லப்பட்டன. அதன் பிரகாரம், 2013.11.23 திகதியன்று ஏற்படுத்தப்பட்ட இணக்கத்திற்கமைய ரூ.32,444.00 தவணைக் கட்டுப்பண அடிப்படையில் ATC கணினி நிறுவகம் ரூ.194,659.00 ஐ திருப்பிச் செலுத்த இணங்கியதுடன் தற்போது இரண்டு (02) தவணைக் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளது. அவ்வாறே, புனித. ஜோன் தொழிற் பயிற்சி நிலையம் பெற்றுக்கொண்ட முழுத்தொகை ரூ.161,875.00 ஐ மீளச்செலுத்தி நிறைசெய்துள்ளது. நிர்மாணி மன்றத்தால் 2013.11.30 ஏற்படுத்தப்பட்ட இணக்கத்திற்கமைய ரூ.24,708.00 தவணைக் கட்டுப்பண அடிப்படையில் ரூ.290,500.00 ஐ திருப்பிச் செலுத்துவதற்கு இணங்கியுள்ளதுடன் தற்போது ஒரு (01) தவணைக் கட்டணம் மீளச்செலுத்தப்பட்டுள்ளது.

4. TVEC பெயர் மற்றும் இலச்சினையை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

பெரும்பாலான பயிற்சி நிறுவகங்களால் TVEC பெயர் மற்றும் இலச்சினை தவறான முறையில் பயன்படுத்தப்படுவதாக தொடர்ச்சியாக இவ்வாணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கையில், TVEC பெயர் மற்றும் இலச்சினை ஆகியவற்றின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. ஆகையால், TVEC யின் உத்தியோகபூர்வ இலச்சினை மற்றும் NVQ என்ற கருப்பொருள் ஆகியவை இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுடன் அதன் மூலம் ஆணைக்குழுவின்/ அடையாளம் சட்டரீதியாக பேணப்பட்டு வலுத்தப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2013.05.30 திகதியன்று "மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு" என்ற பெயரையும் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

5. ஆணைக்குழு பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்துதல்

உதவிப் பணிப்பாளர் (சட்டஞ்சார்) ஆணைக்குழு பணிப்பாளர்கள் சபையின் செயலாளராகக் கடமையாற்றுவதுடன் 2013 ஆம் ஆண்டிற்காக பத்து (10) பணிப்பாளர்கள் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 5.0 திட்டமிடல், ஆராய்ச்சி பிரிவு

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல், ஆராய்ச்சி பிரிவின் பிரதான தொழிற்பாடானது 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைகல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது குறிக்கோளான, அதாவது "பொருளாதார, மனிதவள அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற் கல்வி திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்" போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக இயன்றளவு உதவிகளை வழங்குவதாகும். திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

- அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளித்தல் மற்றும் அந்நிறுவகங்களைக் கண்காணித்தல்
- தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- இலங்கையில் மாகாண சபைகளுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்
- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்துதல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் யாக்கத் திட்டத்தை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்
- ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்

திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவால் 2013 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் மேற்கூறப்பட்டவற்றின் கீழ் செயற்படுத்தப்பட்டன.

### 5.1 அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளித்தல் மற்றும் அந்நிறுவகங்களைக் கண்காணித்தல்

அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் தொழில்நுட்ப, தொழில் பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தையும் மற்றும் தொழிற்சந்தை சார்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அவசியமான பயிற்றுவிப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆணைக்குழு இவ்வேலைத்திட்டத்தை செயற்படுத்தியுள்ளது. இதனூடாக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைய உரித்துச்சான்றளிக்கை செய்யப்பட்டு அதன் மூலம் தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை அளிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.


2013 ஆம் ஆண்டு நிதியுதவி வேலைத்திட்டத்திற்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய, பெறப்பட்ட விண்ணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்ட நிதியுதவி விருதளிப்பதற்கு அலுவல்கள் மேற்காள்ளப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்காக விருதளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய விபரம் அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1: 2013 ஆம் ஆண்டில் துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி**

| துறை | 2013 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதித்தொகை (ரூ.மில்லியன்) | | நிதியுதவி விருதளிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் பாடநெறிகளின் எண்ணிக்கை | | உண்மையாக நிதியுதவி விருதளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | நிறுவகங்களின் எண்ணிக்கை | செலவிடப்பட்ட தொகை (ரூ.மில்லியன்) |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்பத் தொகை | திருத்தப்பட்ட தொகை | ஆரம்பம் | திருத்தம் | | | |
| அரச துறை | 0.9 | 0.9 | 07 | 07 | 05 | 05 | 0.887 |
| தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை | 3.5 | 3.05 | 25 | 19 | 13 | 13 | *2.702 |
| ஏதுநிலைக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக தொழிற் பயிற்சி வழங்குகின்ற நிறுவகங்கள் | 0.75 | 0.65 | 08 | 08 | 07 | 03 | 0.580 |
| **மொத்தம்** | 5.15 | 4.6 | 40 | 34 | 25 | 21 | 4.169 |

- *ரூ. 0.476 மில்லியன் 2014 ஆம் ஆண்டு செலவு செய்யப்படும்*

**வரைபு 5.1: துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி**




2013 ஆம் ஆண்டில் நிதியுதவி விருதளிக்கும் வைபவம் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ திரு. டலஸ் அழகப்பெரும அவர்கள் தலைமையில் 2013.11.27 திகதியன்று இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு அலுவலகத்தில் நடாத்தப்பட்டது.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ திரு. டலஸ் அழகப்பெரும அவர்களால் நிதியுதவி விருதளிப்பதை மேலுள்ள படங்களில் காணலாம்.

அமைச்சின் செயலாளர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சிப் பிரிவின் பணிப்பாளரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

நிதியுதவி விருதளிக்கப்பட்டதன் விபரங்கள் தனித்தனியே பின்வருமாறு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

### 5.1.1 அரச துறையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்களுக்காக நிதியுதவி விருதளித்தல்

அரச துறைப் பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி விருதளித்தல் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 14 வருடங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் குறிக்கோள் யாதெனில் ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள், தொழிற்சந்தைத் தகவல் பகுப்பாய்வு ஆகியவற்றினூடாக கண்டறியப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளை அரச துறை பயிற்சி நிறுவகங்களில் செயற்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதியுதவி விருதளிப்பதேயாகும். கண்டறியப்பட்ட பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைவாக உரித்துச்சான்றளிக்கை செய்யப்பட்டு தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களை வழங்குவதற்கான சந்தர்ப்பமும் இங்கு நிகழ்கின்றது. நிதியுதவி பெற்றுக்கொண்ட பெரும்பாலான பயிற்சி நிறுவகங்கள் தமது பாடநெறிகளின் தரத்தை உயர்த்தி அதனை பேணி வருகின்றன.

2013 ஆம் ஆண்டில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு வெளியேயுள்ள பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி விருதளிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டது. அதற்கமைய, அமைச்சிற்கு வெளியே இயங்குகின்ற, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச துறை பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதன் பிரதிபலிப்பாக பெறப்பட்ட 22 விண்ணப்பங்களுள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகளின் கீழ் இயங்கும் பயிற்சி நிறுகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இப் பயிற்சி நிறுவனங்களை பிரதிநிதித்துவஞ்செய்யும் மூன்று (03) மாகாணங்களின் போதனாசிரியர்களுக்காக தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறு, பயிற்சி நிறுவகங்களைப் பதிவுசெய்தல் மற்றும் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை தொடர்பாக மூன்று (03) தெரியப்படுத்தும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.


2013 ஆம் ஆண்டு அரச துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் 17 பாடநெறிகளுக்கு நிதியுதவி விருதளிப்பதற்காக ரூ. 0.9 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் ஐந்து (05) பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் ஐந்து (05) பாடநெறிகளுக்காக ரூ.0.887 மில்லியன் நிதித்தொகை விருதளிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகையில் 98.5% செலவிட முடியுமாயிருந்தது. அரச துறையில் கைத்தொழிற்துறைக்கமைய விருதளிக்கப்பட்ட நிதித்தொகை பற்றிய விபரம் அட்டவணை 5.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.2: கைத்தொழிற் துறை ரீதியாக நிதியுதவி விருதளிப்பு -2013**

| இல. | கைத்தொழிற் துறை | பாடநெறிகளின் எண்ணிக்கை | விருதளிக்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) | சதவீதம் (%) (விருதளிக்கப்பட்ட முழுத்தொகையின்) |
|---|---|---|---|---|
| 01. | கட்டிட நிர்மாணத் துறை | 04 | 480,603 | 54% |
| 02. | புடவை மற்றும் தைத்த ஆடைகள் துறை | 01 | 406,640 | 46% |
| மொத்தம் | | 05 | 887,243 | 100% |

அட்டவணை 5.2 பிரகாரம், 2013 ஆம் ஆண்டில் அரச துறை பயிற்சி நிறுவனங்களுக்காக பிரதான இரண்டு (02) கைத்தொழிற் துறைகளை உள்ளடக்கும் வகையில் நிதியுதவி வழங்கப்பட்டதுடன், வழங்கப்பட்ட நிதியுதவியில் 54% உள்ளூர் மற்றும் வெளியூர் தொழிற் சந்தைகளில் உயர் கேள்வி நிலவுகின்ற நிர்மாணத் துறைக்குரிய பயிற்சியை மேம்படுத்துவதற்காகவே வழங்கப்பட்டது. அத்தோடு, 2013 ஆண்டிலே புடவை மற்றும் தைத்த ஆடைகள் துறைக்காக 46% நிதித்தொகை விருதளிக்கப்பட்டது. இது தொடர்பான விளக்கம் வரைபு 5.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**வரைபு 5.2: கைத்தொழிற் துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி**




அட்டவணை 5.3 ஆனது மீளாய்வாண்டில் நிறுவகங்கள் ரீதியாக நிதியுதவி விருதளிப்பு பற்றிய விபரங்களைக் காட்டுகிறது.

**அட்டவணை 5.3: அரச துறையிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவகங்களுக்காக நிதியுதவி விருதளித்தல் -2013**

| இல. | நிறுவகத்தின் பெயர் | கைத்தொழிற் துறை | பாடநெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | விருதளிக்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| **தென் மாகாண சபை** | | | | |
| 01. | தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் (மரவேலை),<br>கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,<br>கித்தலகொட மேற்கு,<br>திஹகொட. | நிர்மாணம் | மரவேலைக் கைவினைஞர்<br>04 ஆம் மட்டம் | 168,500 |
| | | | **உப தொகை - தென் மாகாணம்** | **168,500** |
| **சபரகமுவ மாகாண சபை** | | | | |
| 02. | தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,<br>(மரவேலை),<br>பிட்டிஹூம,கேகாலை. | நிர்மாணம் | மரவேலைக் கைவினைஞர்<br>04 ஆம் மட்டம் | 122,063 |
| 03. | பல்லபான பயிற்சி நிறுவகம்,<br>பல்லபான,<br>கலிகமுவ நகரம் | புடவை மற்றும் தைத்த ஆடைகள் | கைத்தொழில்சார் தையல் இயந்திரம் இயக்குபவர் | 406,640 |
| | | | **உப தொகை - சபரகமுவ மாகாணம்** | **528,703** |
| **வடமேல் மாகாணம்** | | | | |
| 04. | தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் (மரவேலை),<br>புஜ்ஜோகமுவ. | நிர்மாணம் | மரவேலைக் கைவினைஞர்<br>04 ஆம் மட்டம் | 89,120 |
| 05. | தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,<br>மத்திய மாகாண சபை,<br>பிட்டியகெதர, வத்தேகமை. | உலோக மற்றும் இலகு பொறியியல் | காய்ச்சி இணைப்பவர்<br>03 ஆம் மட்டம் | 100,920 |
| | | | **உப தொகை - வடமேல் மாகாணம்** | 190,040 |
| | **மொத்தம்** | | | **887,243** |

#### 5.1.2 தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு மூலதன மானியங்களை வழங்குதல்

2013 ஆம் ஆண்டில் தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளின் தரத்தையும் சார்புத்தன்மையும் மேலுயர்த்துவதன் நிமித்தம் நிதியுதவி வழங்குவதற்காக ரூ.3.05 மில்லியன் நிதித்தொகை 19 பாடநெறிகளுக்காக (திருத்தஞ் செய்யப்பட்ட வருடாந்த செயலாக்கத் திட்டத்தின் பிரகாரம்) ஒதுக்கப்பட்டது. அதற்கமைய, 92 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 48 பயிற்சி நிறுவகங்கள் பௌதீக ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் தகுதியான 17 பயிற்சி நிறுவகங்கள் மாத்திரமே நிதியுதவி விருதளிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டன.

அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட 17 பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் 19 பாடநெறிகளுக்காக ரூ.3.05 விருதளிப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனினும் தெரிவு செய்யப்பட்ட மூன்று (03) பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் ஆறு (06) பாடநெறிளுக்கான உரித்துச்சான்றளிக்கை விண்ணப்பங்கள் கிடைக்காமையின் காரணத்தால் நிதியுதவி வழங்குவதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லை. ஆகையால், மதிப்பிடப்பட்ட தொகையில் ரூ.0.27 மில்லியனை செலவிட முடியவில்லை. அதன்படி, 2013 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதித்தொகையில் 87.5% ஐ விருதளிப்பதற்கு இயலுமாயிருந்தது.

அட்டவணை 5.4 ஆனது தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய விபரங்களை காட்டுகிறது.

**அட்டவணை 5.4: தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி விருதளிப்பு - 2013**

| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) | செலுத்தப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01. | கிண்ணியா தொழில்நுட்ப நிறுவகம், குட்டித்தீவு, கிண்ணியா | மின்னியம் மற்றும் மின்னணு | குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டி பொறிவலர் மட்டம் 03 | 145,600 | 107,170 |
| 02. | பிரில்ஸ் வெதுப்பு, சமையல் மற்றும் பிஸ்கட் தயாரிப்பு பயிற்சி நிறுவகம் இல.255/1, கிருல வீதி, கொழும்பு 05. | உணவு மற்றும் பானம் | சமையல் வினைஞர் மட்டம் 04 | 116,326 | 93,170 |
| 03. | ட்ரயங்கள் லிவிங் கெயார், இல.4, முதலாம் புகையிரத ஒழுங்கை, உடஹமுல்லை, நுகேகொடை. | சுகாதாரம் | தாதி உதவியாளர் மட்டம் 03 | 222,530 | 219,030 |
| 04. | சணச தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவக் கல்வி நிறுவகம், இல.437, மாதம்பே வீதி, குளியாபிட்டிய. | புடவை மற்றும் தைத்த ஆடைகள் | கைத்தொழில்சார் தையல் இயந்திரம் இயக்குபவர் மட்டம் 03 | 404,950 | 404,950 |
| 05. | ரியல்வே தகவல் தொழில்நுட்ப நிறுவகம், இல.152, கண்டி வீதி, பஹல இம்புல்கொட, இம்புல்கொட. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | கணினி வன்பாகப் பொறிவலர் மட்டம் 04 | 63,280 | 62,825 |

| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) | செலுத்தப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 06. | எம்.டி.பீ. கணினி பயிற்சி நிறுவகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொழில்சார் நிறுவகம், இல.60சீ, புகையிரத நிலைய வீதி,கந்தானை. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வினைஞர் மட்டம் 04 | 110,320 | 105,420 |
| 07. | டொன் பொஸ்கொ தொழிற் பயிற்சி நிறுவகம், புத்தளம் வீதி, நொச்சியாகம. | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | தன்னியக்க வாகன பொறிவலர் மட்டம் 04 | 737,443 | 688,402 |
| 08. | றோயல் கணினி நிலையம், பவுண்ட்ரி வீதி, களுதாவலை 01. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | கணினி வன்பாகப் பொறிவலர் மட்டம் 04 | 33,915 | 9,310 |
| 09. | சர்வோதய சிரமதான சங்கம், சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு. | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | மோட்டார் சைக்கிள் பொறிவலர் மட்டம் 04 | 227,927 | 223,811 |
| 10. | புனித அந்தோனியார் தொழிநுட்ப நிறுவகம், திஸ்ஸ வீதி, மொனராகலை. | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | மோட்டார் சைக்கிள் பொறிவலர் மட்டம் 04 | 233,730 | 233,730 |
| 11. | புதிய ஏ.சீ.எஸ். தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல.144,நெலீகம,மீரிகம. | மின்னியம் மற்றும் மின்னணு | குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டி பொறிவலர் மட்டம் 03 | 77,000 | 77,000 |
| | **மொத்தம்** | | | **3,125,723** | **2,224,818** |

மேற்குறித்த அட்டவணையின் பிரகாரம், 2013.12.31 திகதி வரையில் ரூ.2.2 மில்லியன் நிதித்தொகை 11 பாடநெறிகளை நடாத்தும் 11 நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்டது.

எனினும் இரண்டு (02) பயிற்சி நிறுவகங்கள் 2013.12.31 திகதி வரையிலும் உபகரணங்களை கொள்வனவு செய்யாததன் காரணத்தால் 2014 ஆண்டில் கொள்வனவைப் பூர்த்திசெய்த பிற்பாடு செலுத்துவதற்காக அந்நிதித்தொகை முன்கொண்டு செல்லப்பட்டது. அது தொடர்பான விபரம் அட்டவணை 5.5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.5: 2014 இல் நிதித்தொகை செலுத்தவேண்டியுள்ள பயிற்சி நிறுவகங்கள்**

| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01. | பியுச்சர் லின்க் தொழில்நுட்ப கற்கைகள் நிறுவகம், இல.122, ஆர்னோல்ட் ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 10. | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | தன்னியக்க வாகன பொறிவலர் மட்டம் 04 | 404,767 |

| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 02. | வை.எம்.சீ சர்வதேச பாடசாலை, இல.11, புகையிரத நிலைய வீதி, மாத்தறை. | உலோக மற்றும் இலகு பொறியியல் | அலுமீனியம் சட்டம் புனைபவர் | 72,065 |
| **2013 ஆண்டு நிதி ஒதுக்கீடுகளிலிருந்து ஒதுக்கிய தொகை** | | | | 476,832 |

2013 ஆம் ஆண்டில் கௌரவ அமைச்சரினதும் ஆணைக்குழுச் சபையினதும் அனுமதியை பெற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத நிறுவனங்கள் பற்றிய விபரம் அட்டவணை 5.6 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.6: நிதியுதவி உடன்படிக்கை கைச்சாத்திடப்படாத பயிற்சி நிறுவகங்கள்**


| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | பயிற்சி நெறி மற்றும் எதிர்பார்க்கும் NVQ மட்டம் | அனுமதி வழங்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) | உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமைக்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| 01. | யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவகம், வட்டுக்கோட்டை | பொறியாளர் மட்டம் 03 | 68,810 | உரித்துச்சான்றளிக்கை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| | | கணினி வன்பாகத் தொழில்நுட்பவியலாளர் மட்டம் 04 | 13,720 | |
| | | அலுமீனியம் சட்டம் புனைபவர் மட்டம் 03 | 20,580 | |
| 02. | பத்திரிசியார் நிறுவகம், இல.61, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். | குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டி பொறிவலர் மட்டம் 03 | 47,250 | உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகையில் நிறுவகத்தின் பதிவு புதுப்பிக்கப்படவில்லை. |
| 03. | டொன் பொஸ்கொ தொழிற் பயிற்சி நிலையம், மன்னார் | காய்ச்சி இணைப்பவர் மட்டம் 03 | 17,150 | உரித்துச்சான்றளிக்கை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| 04. | லங்கா தாதி பாடசாலை, த.பெ. இல.05, மல்லிகா கட்டிடம்,வெஹெர, குருநாகல். | தாதி உதவியாளர் மட்டம் 03 | 108,360 | உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு சமூகமளிக்கவில்லை |
| விருதளிக்கப்படாத நிதித்தொகை | | | 275,870 | |

அட்டவணைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூ.752,702.50 நிதித்தொகை விருதளிக்கப்படவில்லை.

**அட்டவணை 5.7: கைத்தொழிற்துறை ரீதியிலான பகுப்பாய்வு - நிதியுதவி விருதளிப்பு 2013 (தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்)**

| கைத்தொழிற் துறை | பாடநெறிகளின் எண்ணிக்கை | விருதளிக்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) | சதவீதம் (%) |
|---|---|---|---|
| மின்னியல் மற்றும் மின்னணு | 02 | 184,170 | 07% |
| உலோக மற்றும் இலகு பொறியியல் | 01 | 72,065 | 03% |
| சுகாதாரம் | 01 | 219,030 | 08% |
| தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | 04 | 1,550,710 | 54% |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 01 | 404,950 | 15% |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 03 | 177,555 | 07% |
| உணவு மற்றும் பானம் | 01 | 93,170 | 03% |
| **மொத்தம்** | **13** | **2,701,650** | **100%** |

**வரைபு 5.3: கைத்தொழிற்துறை ரீதியிலான பகுப்பாய்வு 2013**




தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளில், தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புத் துறை சார்ந்த பாடநெறிகளுக்கு அதிகளவு நிதித்தொகை (57%) மீளாய்வாண்டில் விருதளிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் விருதளிக்கப்பட்ட நிதித்தொகை பற்றிய விபரங்கள் அட்டவணை 5.7 இலும் வரைபு 5.3 இலும் விபரிக்கப்பட்டுள்ளன.

### 5.1.3 ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்கு நிதியதவி விருதளித்தல்

இலங்கையில் ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளின் திறன்களை உயர்த்தும் நிமித்தம் தொழிற்பயிற்சியை நடாத்துகின்ற நிறுவகங்களுக்கு தேவையான உபகரணங்களையும் கருவிகளையும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை நிபந்தனையற்றதன் அடிப்படையில் நிதியுதவி விருதளிக்கப்படுகிறது.
2013 ஆம் ஆண்டில் 08 பாடநெறிகளுக்காக ரூ.0.65 மில்லியனை விருதளிப்பதற்கு (திருத்தப்பட்ட வருடாந்த செயலாக்கத்திட்டத்தின் பிரகாரம்) திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள மூன்று (03) பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படுகின்ற ஏழு (07) பாடநெறிகளுக்கு ரூ.0.58 மில்லியன் விருதளிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இவ்வேலைத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகையில் 77% ஐ செலவிட இயலுமாயிருந்தது. முழுத்தொகையில் 77% ஐ மட்டும் செலவிடக் காரணம் யாதெனில் விண்ணப்பித்த ஐந்து (05) நிறுவகங்களில் நிதியுதவி விருதளிப்பதற்குத் தகுந்த பாடநெறிகள் இல்லாமயே ஆகும்.

கீழே அட்டவணை 5.8 குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிலையங்களுக்கு நிதித்தொகை விருதளிக்கப்பட்டது.

**அட்டவணை 5.8: ஏதுநிலைக்கு உட்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்படும் தொழிற்பயிற்சி பாடநெறிகளுக்கு நிதியதவி விருதளித்தல்**

| இல. | நிறுவகத்தின் பெயர் மற்றும் முகவரி | உரிமம் | கைத்தொழிற் துறை | பயிற்சி நெறியின் பெயர் | விருதளிக்கப்பட்ட நிதித்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01. | தொழிற் பயிற்சி நிலையம், சமூக சேவைகள் திணைக்களம், கெட்டவலை, லேவுலை, கண்டி | சமூக சேவைகள் திணைக்களம் | மின்னியல் மற்றும் மின்னணு | மின்சாரத்தொழில்வலர் | 60,700 |
| | | | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | கணினி வன்பாகத் தொழில்நுட்பவியலாளர் | 11,300 |
| | | | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | பொறியாள் | 49,300 |
| | | | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | தன்னியக்க வாகன பொறிவலர் | 22,150 |
| | | | தன்னியக்க வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு | தன்னியக்க வாகன பொறிவலர் | 43,450 |
| | | | தோல்பொருள் உற்பத்தி | தோல்பொருள் உற்பத்தி வினைஞர் | 55,950 |
| | | | அச்சுப்பதிப்பு | கணினி வரைகலை வடிவமைப்பாளர் | 337,500 |
| **விருதளிக்கப்பட்ட மொத்தத் தொகை** | | | | | **580,350** |

**5.1.4 பாடநெறிகளுக்காக நிதியுதவி விருதளிக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்களில் கண்காணிப்பு வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்படும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இவ்வாணைக்குழு வருடந்தோறும் கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2012 ஆம் ஆண்டில் நிதியுதவி பெற்றுக்கொண்ட பயிற்சி நிறுவகங்களை இவ்வாணைக்குழு பார்வையிட்டு மதிப்பீட்டை நடாத்தியதுடன், அவ்வாண்டில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட 36 பாடநெறிகளில் 34 பாடநெறிகள் மதிப்பிடப்பட்டன.

இக்கண்காணிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் நிதியுதவி விருதளிக்கப்பட்ட, தனியார் பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 15 பாடநெறிகளில் ஏழு (07) பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கை பெறப்பட்டமை கண்டறியப்பட்டது. மற்றைய பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கை பெற்றுக்கொள்வதற்கான அலுவல்களில் ஈடுபட்டுள்ளமையும் கண்காணிக்கப்பட்டது. அரச பயிற்சி நிறுவகங்களால் பத்து (10) பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கை பெற்றுக்கொள்ளாமையும் கண்டறியப்பட்டது.

இது தொடர்பான விபரங்கள் அட்டவணை 5.9 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.9: கண்காணிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள்**

| **துறை** | **நிதியுதவி விருதளிக்கப்பட்ட நிறுவகங்களின் எண்ணிக்கை** | **நிதியுதவி விருதளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை** | **மதிப்பீடு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை** | **விருதளிக்கப்பட்ட நிதித்தொகை** | **பயிற்சி பெற்றுக்கொண்ட மாணவர்களின் தொகை** | |
|---|---|---|---|---|---|---|
| அரச | 10 | 10 | 10 | **1,446,652** | 122 | 87 |
| தனியார் | 10 | 15 | 15 | **2,137,258** | 437 | 384 |
| ஏதுநிலைக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் | 06 | 11 | 09 | **857,555** | 137 | 113 |
| **மொத்தம்** | 26 | 36 | 34 | **4,441,465** | 696 | 584 |

## 5.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

இவ்வாணைக்குழு 1999 ஆம் ஆண்டு தொடக்கம் பிரதான கைத்தொழிற் துறைகளுக்கு அவசியமான திறன்கள் தேவைப்பாடுகளை அறிந்துகொள்வதற்காக தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்களை தயாரித்து வருகின்றது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் புதிய தொழில் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றதுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்களும் நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றன. 2013 ஆம் ஆண்டு வரையில் 18 தொழிற் பயிற்சி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 14 திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன.

### 5.2.1 புதிய தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல்

- **போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் துறை**

இந்நாட்டின் அபிவிருத்திக்கும் பெரிதளவில் பங்களிப்பை வழங்கிவருகின்ற போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் துறைக்கான புதிய தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தை தயாரிக்கும் பணிகளை இவ்வாணைக்குழு 2012 ஆம் ஆண்டில் இறுதிக் காலாண்டில் ஆரம்பித்தது. இத்திட்டத்தின் நகல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் செல்லுபடிதாக்கல் செயற்குழுக் கூட்டத்தை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடாத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மொறட்டுவ பல்கலைக்கழகத்திலுள்ள யுனி- கன்சல்டன்ஸி சேர்விசஸ் நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.740,480.00 செலவிடப்பட்டது. அதற்கமைய, 2013 ஆம் ஆண்டில் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகையில் 54% ஐ செலவிட இயலுமாயிருந்தது.

### 5.2.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல்

தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் கண்டறியப்பட்ட பத்து (10) கைத்தொழிற் துறைகளுக்காக மனித வளத் தேவை மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இம் மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் 2012 ஆம் ஆரம்பிக்கப்பட்டதுடன், எதிர்பார்த்தபடி 2013 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு இயலுமாயிருந்தது.

அவ்வாறு தயாரிக்கப்பட்ட மனித வளத் தேவைப்பாடுள்ள கைத்தொழிற் துறைகள் பின்வருமாறு:

1. நிர்மாணம்
2. அச்சுப்பதிப்பு
3. நகை மற்றும் இரத்தினக்கல்
4. தன்னியக்க வாக பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு

5. உணவு மற்றும் பானம்
6. சிகை மற்றும் அழகுக்கலை
7. உலோக மற்றும் இலகு பொறியியல்
8. பெருந்தோட்டம்
9. பரா (உதவி) மருத்துவத்துறை
10. புடவை மற்றும் தைத்த ஆடை

**5.3 இலங்கையில் மாகாணசபைகளுக்கான தொழிற்கல்வி, பயிற்சித் VET திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்தல்**

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றும் வகையில் இலங்கையில் மாகாண மட்டத்தில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி (VET) திட்டங்கள் தயாரிக்கும் பணிகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டு வரையில் சபரபகமுவ, கிழக்கு, தென் மற்றும் வடமேல் மாகாணங்களுக்காக VET திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைசெய்யப்பட்டுள்ளன. வட மாகாணத்திற்காக தயாரிக்கப்பட்ட VET திட்டத்தின் நகல் அறிக்கை 2013 ஆம் ஆண்டு முடிவடைகையில் நிறைவுசெய்யப்பட்டது. இவ் நகல் அறிக்கையை 2014 ஆம் ஆண்டு செல்லுபடிதாக்குவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. காலத்தின் தேவை கருதியே இத்திட்டங்கள் தயாரித்தலை ஆணைக்குழு நிறைவேற்றி வருகின்றது.

2013 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு வரையில் மேலும் மூன்று (03) மாகாணங்களுக்கான VET திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. VET திட்டங்கள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 5.10 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.10: தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள்**

| இல. | மாகாணம் | திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட நிறுவகம் | 2013 ஆம் ஆண்டில் தேர்ச்சி | 2013 ஆம் ஆண்டு வரையில் செலவு (ரூ.) |
|---|---|---|---|---|
| 01. | மேல் | களனி பல்கலைக்கழகம் | முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை பகுப்பாய்வதன் மூலம் மாகாணத்தின் பிரதான கைத்தொழிற் துறைகள் கண்டறியப்பட்டதுடன், மாகாணத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து புதிதாக தொழிற்சந்தைக்கு உட்புகும் தொழிற் படையணி தொடர்பாக அடுத்து வரும் ஐந்து (05) ஆண்டுகளுக்கு எதிர்வுகூறுவதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | 199,000 |
| 02. | மத்திய | பேராதனைப் பல்கலைக்கழகம் | கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மூன்று(03) மாவட்டங்களுக்கான மூன்று (03) திட்டமிடல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அச்செயலமர்வுகளில் பிரதான கைத்தொழிற் துறைகள் இனங்காணப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் அம்மாகாணத்தின் பொருண்மியம் பகுப்பாயப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மாகாணத்தில் பாடசாலைக் கல்வியை | 505,325 |

| | | | | |
|---|---|---|---|---|
| 03 | | | நிறைவுசெய்து புதிதாக தொழிற்சந்தைக்கு உட்புகும் தொழிற் படையணி தொடர்பாக அடுத்து வரும் ஐந்து (05) ஆண்டுகளுக்கு எதிர்வுகூறப்பட்டுள்ளது. | |
| 03. | ஊவா | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | பதுளை மற்றும் மொனராகல் ஆகிய இரண்டு (02) மாவட்டங்களுக்கான இரண்டு (02) திட்டமிடல் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அச்செயலமர்வுகளில் பிரதான கைத்தொழிற் துறைகள் இனங்காணப்பட்டன. முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் அம்மாகாணத்தின் பொருண்மியம் பகுப்பாயப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக மாகாணத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து புதிதாக தொழிற்சந்தைக்கு உட்புகும் தொழிற் படையணி தொடர்பாக அடுத்து வரும் ஐந்து (05) ஆண்டுகளுக்கு எதிர்வுகூறப்பட்டுள்ளது. | 473,268 |

### 5.4 தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் தொழிற்படுகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சிகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை நல்கியுள்ளது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளின் அறிக்கைகள் ஆணைக்குழு இணைய தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டு ஆராய்ச்சிச் சிற்றறையின் பார்வையை ஒரு புதிய பாதைக்கு இட்டுச்சென்றது. அவ்வாண்டு திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் அலுவலர்களால் 2011 ஆம் ஆண்டு அரச பயிற்சி நிறுவகங்களில் பயிற்சியை நிறைவுசெய்தவர்களின் தொழில் அமர்வு தொடர்பான ஆராய்ச்சிக் கற்றை மேற்கொள்ளப்பட்டது.

இதற்காக ரூ.0.67 மில்லியன் நிதித்தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் ரூ.0.547 மில்லியன் நிதித்தொகை செலவிட முடியுமாயிருந்தது. அவ் ஆராய்ச்சிக் கற்கை குறிக்கப்பட்ட காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டது. அவ்வாறு நிறைவுசெய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கை அறிக்கையின் முற்பக்க அட்டையை கீழுள்ள படத்தில் காணலாம்.

**நான்காம் ஆராய்ச்சி மாநாடு**

நான்காவது ஆராய்ச்சி மாநாடு 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆந் திகதி மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் நடாத்தப்பட்டது. 2012 ஆம் ஆண்டு ஆராய்ச்சி சிற்றறையால் ஆரம்பிக்கப்பட்ட ஒன்பது (09) ஆராய்ச்சிக் கற்கைகள் அம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டன. இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவகங்களின் அலுவலர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான விபரங்கள் அட்டவணை 5.11 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.11: ஆராய்ச்சி கற்கைகள் - 2012**

| இல. | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி குழு | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.) | 2012 இல் செலவிடப்பட்ட தொகை (ரூ.) | 2013 இல் செலவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01. | தொழில்நுட்பக் கல்வித் துறையிலுள்ள கணக்கீட்டு பாடநெறிகளின் பாடவிதானத்தை நவீன தொழிலுலகிற்கு ஒப்பீடு செய்தல் தொடர்பான கற்கை | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 66,500 | 56,500 | 10,000 |
| 02. | வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்த்து தங்களது சான்றிதழ்களை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழுவில் உறுதிப்படுத்தல் மற்றும் அதன் மூலம் வெளிநாட்டு வேலையைப் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவதற்கான கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 94,750 | 63,490 | 18,000 |
| 03. | இலங்கையில் தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (NVQ 5) பாடநெறியின் பலனை மேலுயர்த்துவதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய கற்கை | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 78,500 | 68,500 | 10,000 |
| 04. | தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நிறுவப்பட்டுள்ள தர முகாமைத்துவ முறைமையின் பலனை கண்டறிவதற்கான கற்கை | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 120,000 | 15,000 | 105,000 |
| 05. | தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படுகின்ற தேசிய தொழிற்திறன் தகுதிப் (NVQ 5 மற்றும் 6) பாடநெறிகளின் பலனைக் கண்டறிவதற்கான ஆய்வு | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 64,000 | 56,000 | 8,000 |
| 06. | தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப்படும் தேசிய தொழிற்திறன் தகுதிப் (NVQ 5 மற்றும் 6) | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 99,000 | 20,000 | 79,000 |

| இல. | ஆராய்ச்சி தலைப்பு | ஆராய்ச்சி குழு | அனுமதிக்கப்பட்ட தொகை (ரூ.) | 2012 இல் செலவிடப்பட்ட தொகை (ரூ.) | 2013 இல் செலவிடப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | பாடநெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்களின் சித்தியடைதல் சதவீதம் குறைவடைதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கான கற்கை | | | | |
| 07. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா (NVQ 5 மற்றும் 6) பாடநெறியை நிறைவு செய்த மாணவர்களின் பின்விபரம் பற்றிய கற்கை | தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் | 197,000 | 7,500 | 182,000 |
| 08. | NVQ கணிப்பீட்டு முறையில் ஒருமைப்பாடு தொடர்பான கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 141,750 | 120,500 | 10,000 |
| 09. | தொழிற் பயிற்சியின் மூலம் தொழிலில் முன்னேறியவர்களின் வாழ்க்கைப் பயணம் பற்றிய கற்கை | மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு | 165,000 | 65,000 | 45,700 |
| ஆராய்ச்சி மாநாட்டிற்கான செலவு | | | | | 78,980 |
| **மொத்தச் செலவு** | | | **1,028,511** | **474,051** | **546,680** |

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூ.0.547 மில்லியன் செலவிடப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டவற்றிற்காக ரூ.0.546 மில்லியன் செலவிடப்பட்டது. அதற்கமைய, மீளாய்வாண்டில் ஆராய்ச்சி கற்கைகளுக்காக மொத்தமாக ரூ.1.093 மில்லியன் செலவிடப்பட்டது. 2013 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதித்தொகை 91.1% செலவிடப்பட்டது.

### 5.6 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் யாக்கத் திட்டத்தை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்

இவ்வாணைக்குழுவின் ஐந்து (05) வருட யாக்கத்திட்டம் (2014-2018) நாளதுவரையாக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டம் "மகிந்த சிந்தனை" அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 10 வருட அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள திறன் அபிவிருத்தி கொள்கையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையிலும், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் 10 வருட திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை எய்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. யாக்கத்திட்டத்திற்கமைய, வருடாந்த அமுலாக்கல் திட்டம் அரச வரவு செலவு நிதியொதுக்கங்கள், வெளிநாட்டு முகவர்களினூடாக பெறப்படும் நிதியுதவிகள் என்பவற்றைக் கருதியே தயாரிக்கப்பட்டது.

## 6.0 பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள் பிரிவு

1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் மற்றும் 1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி இல. 887/8 அரச வர்த்தமானி (அதிவிசேட கஸெட்) அறிவித்தல் என்பவற்றிற்கமைய தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறையிலுள்ள சகல நிறுவகங்களினதும் தர உத்தரவாதத்தை உறுதிப்படுத்துவதே இப்பிரிவின் பிரதான குறிக்கோளாகும். இப்பிரதான குறிக்கோளை எய்தும் நோக்கில் கீழ்க்குறிப்பிடப்பட்ட உப குறிக்கோள்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அவை தொடர்பான சகல செயற்பாடுகளையும் இப்பிரிவு மேற்கொண்டுவருகின்றது.

1. பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்.
2. பயிற்சி பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்தல்
3. தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் மற்றும் கணக்காய்விடல்

மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை திறம்படச் செய்வதற்கு உதவியாக பதில் பணிப்பாளரொருவர், பிரதிப் பணிப்பாளர் ஒருவர், உதவிப் பணிப்பாளர்கள் மூவர், அபிவிருத்தி அலுவலர் மூவர், எழுதுவினைஞர் மூவர் மற்றும் அலுவலக உதவிப் பணியாளரொருவர் அடங்கிய பதவியணியொன்று இப்பிரிவு மீளாய்வாண்டில் கொண்டிருந்தது.

பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள் பிரிவினால் மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டில் பின்வரும் கடமைகள் மேற்கொள்ளப்பட்டன:

### 6.1 பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவகங்கள் இவ்வாணைக்குழுவில் பதிவு செய்தல் சட்டரீதியாக அவசியமானதொன்றாகும். 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் பதிவு செய்வதற்கான ஒழுங்கு முறைகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், 1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி இல. 887/8 அரச வர்த்தமானி (அதிவிவிசேட கஸெட்) அறிவித்தலாக வெளியீடு செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டத்தில் பதிவதற்கான நிர்ணயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. நாட்டின் தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையின் தரத்தையும் சார்புத்தன்மையையும் உறுதிப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு இவ் ஒழுங்குமுறைகளுக்கும் நிர்ணயங்களுக்கும் அமைவாகவே நிறுவகங்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

நிறுவகத்தை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கும் விதம், பாடநெறியின் காலஎல்லை/அளவு, மாணவர் நலன்புரி சேவை மற்றும் பயிற்சியின் சார்புத்தன்மை ஆகியன மதிப்பீடிற்கு உட்படுத்தப்பட்டே பதிவு மேற்கொள்ளப்படும்.

2013 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் 225 பயிற்சி நிறுவகங்களில் புதிதாக பதிவு செய்வதற்கான மதிப்பீடலை நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 256 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 31 அதிகமாகும்.

**அட்டவணை 6.1: பயிற்சி நிறுவகங்களை பதிவதற்கான மதிப்பீடு**

| | நிறுவகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலக்கு | 225 |
| தேர்ச்சி | 256 |

2013 ஆம் ஆண்டில் வருடாந்த செயலாக்கத் திட்டத்தில் இலக்கிடப்பட்டிருப்பினும் நிறுவக பதிவிற்காக கிடைக்கும் முற்றாக பூரணமாகிய விண்ணப்பங்கள் அனைத்தும் பௌதீகரிதியாக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் தகுதிகளைப் பூர்த்திசெய்த நிறுவகங்கள் பதிவுசெய்யப்பட்டன.


புதினப்பத்திரிகை விளம்பரம், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களின் மூலம் உரியவர்களுக்கு தெரியப்படுத்தல் மற்றும் பதிவுசெய்வதன் தேவைப்பாட்டை சமூகமயமாக்கல் போன்ற காரணிகளால் அதிகளவிலான விண்ணப்பங்கள் இவ்வாணைக்குழுவிற்கு கிடைத்தன.

மேற்குறிப்பிட்ட புதிதாக பதிவுசெய்வதற்காக மேற்கொண்ட 256 மதிப்பீடுகளில் 168 பயிற்சி நிறுவகங்கள் தகுதிகளைப் பூர்த்திசெய்ததால் மீளாய்வாண்டில் அந்நிறுவகங்கள் புதிதாக பதிவுசெய்யப்பட்டன. மற்றைய நிறுவகங்கள் தகுதிகளைப் பூர்த்திசெய்யாததால் பதிவுசெய்யப்படவில்லை.

2013 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவால் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:

| **பயிற்சி நிறுவகங்கள்** | **பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|
| அரச துறை பயிற்சி நிறுவகங்கள் | 12 |
| நியதிச் சட்ட சபைகள்/ கூட்டுத்தாபனங்களின் கீழ் இயங்கும் பயிற்சி நிறுவகங்கள் | 42 |
| அரச சார்பற்ற அமைப்புகளினூடாக தொழிற்படும் பயிற்சி நிறுவகங்கள் | 15 |
| தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் | 99 |
| **மொத்தம்** | **168** |

**வரைபு 6.1: உடைமையுரிமைக்கமைய நிறுவக பதிவு**




### 6.2 பயிற்சி நிறுவகங்களின் பதிவுகளைப் புதுப்பித்தல்

1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இல. 887/8 இல் குறிப்பிடப்பட்ட பிரமாணங்களுக்கமைவாக சகல பயிற்சி நிறுவகங்களும் வகைப்படுத்தப்பட்டு இரண்டு (02) அல்லது மூன்று (03) வருட காலத்திற்கு தற்காலிக பதிவு வழங்கப்படுகின்றது. இக்கால எல்லை காலாவதியாகிய பின்னர் நிறுவகங்கள் தமது பதிவுகளை புதுப்பித்துக் கொள்வதற்காக மீண்டும் இவ்வாணைக்குழுவில் விண்ணப்பித்தல் வேண்டும்.

2013 ஆம் ஆண்டில் 250 பயிற்சி நிறுவகங்களின் பதிவைப் புதுப்பிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுடன், பதிவைப் புதுப்பித்துக்கொள்வதற்காக 264 நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன (2012 இல் பதிவு காலாவதியான நிறுவகங்களும் இதில் உள்ளடங்கும்). அவ்விண்ணப்பகளின் 250 விண்ணப்பங்களின் பதிவு புதுப்பிக்கப்பட்டதுடன், பின்வரும் காரணங்களால் 14 நிறுவகங்களின் பதிவு புதுப்பிக்கப்படவில்லை.

- பாடநெறிகளின் காலம்  போதியளவு இன்மை
- பாடநெறிகளுக்குரிய பாடத்திட்டம் இல்லாமை மற்றும் புதிய கல்விசார் பதவியணினரின் சுயவிபரக்கொத்துக்கள், அவர்களின் சான்றிதழ்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்படாமை
- தரப்பட்டுள்ள பாடத்திட்டத்திற்கமைய பாடநெறி நடாத்தப்படாமை
- பதிவு செய்யப்பட்ட மற்றும் புதிதாக பதிவினைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாடநெறிகள் நடாத்தப்படுகின்றதென்பதற்கு போதிய ஆதாரங்கள் இன்மை
- உரிய பாடநெறிகளுக்கான பயிலரங்குகள் மற்றும் உபகரணங்கள் போதியளவு இல்லாமை

**அட்டவணை 6.2: பயிற்சி நிறுவகங்களின் பதிவை புதுப்பிப்பதற்கான மதிப்பீடு**

| | நிறுவகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலக்கு | 250 |
| தேர்ச்சி | 264 |

2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் இவ்வாணைக்குழுவில் பதிவைப் பெற்றுக்கொண்ட மற்றும் பதிவைப் புதுப்பித்துக்கொண்ட பயிற்சி நிறுவகங்கள் அடங்கிய பட்டியலொன்றை 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத அரச வர்த்தமானி அறிவித்தலில் வெளியீடுசெய்வதற்கு எதிர்பார்த்துள்ளதுடன், ஆணைக்குழு இணைய தளத்திலும் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்கள் பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 6.3 2013 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களின் பதிவுகளை அதிகரிக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்கள்

பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக போலி பிரச்சாரத்தின் மூலம் மாணவர்கள் வழிதவறி செல்வதற்கான பல்வேறு வியாபாரங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இப்பிரச்சாரங்களுக்கு மாணவர்கள் ஏமாறுவதைத் தடுப்பதற்கும், பயிற்சியின் தரத்தை அதிகரிப்பதற்கும், பயிற்சி நிறுவகங்கள் பதிவுசெய்யப்பட்டல் மற்றும் பதிவு புதுப்பிக்கப்படல் தொடர்பாக பொதுமக்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்துவதன் நிமித்தம் கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைத்திட்டங்கள் 2013 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

1. புதினப்பத்திரிகை விளம்பரங்களினூடாக தெரியப்படுத்தல்

- 2013 செப்டம்பர் 15 ஆந் திகதிய சிலுமின, இரிதா லங்காதீப, வீரகேசரி, சன்டே ஒப்சேர்வர் ஆகிய புதினப் பத்திரிகைகள்
- 2014 ஜனவர் 05 ஆந் திகதிய சிலுமின, இரிதா லங்காதீப, வீரகேசரி, சன்டே ஒப்சேர்வர் ஆகிய புதினப் பத்திரிகைகள்

2. துண்டுப்பிரசுரங்களினூடாக தெரியப்படுத்தல்

   பயிற்சி நிறுவக பதிவு மற்றும் பதிவு புதுப்பிப்பு தொடர்பாக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் துண்டுப்பிரசுரங்களை அச்சடித்து தேசத்திற்கு மகுடம் மற்றும் இதர நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளில் விநியோகிக்கப்பட்டன.

3. 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆந் திகதி அரச வர்த்தமானி வெளியீட்டின் மூலம் தெரியப்படுத்துவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 6.4 பாடநெறி உரித்துச்சான்றளிக்கை

இலங்கையில் தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறு 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. பதிவு செய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகள் NVQ தகுதிகளை விருதளிப்பதற்காக தயார்படுத்துதல் உரித்துச்சான்றளிக்கை அளிப்பதன் மூலம் அக்குறிக்கோள் நிறைவேற்றப்படுகிறது. இங்கு தேசிய தேர்ச்சி தரங்களில் அடையாளங் காணப்பட்ட கைத்தொழிற் துறைக்கு அவசியமான தேர்ச்சியை பயிலுநர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் விதத்தில் பயிற்சி நிர்ணயங்கள்  தயார் செய்யப்படுகின்றன.

அந் நிர்ணயங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்டு தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழை விருதளிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படும்.

அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டில் பாடநெறி உரித்துச்சான்றளிக்கைக்காக இலக்கிடப்பட்ட தொகையும் தேர்ச்சியும் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.3: பாடநெறி உரித்துச்சான்றளிக்கை – இலக்கு மற்றும் தேர்ச்சி 2013**

| | கணிப்பீடு செய்தல் | |
|---|---|---|
| | **இலக்கு** | **தேர்ச்சி** |
| அரச துறை பயிற்சி நிறுவகங்கள் | 320 | 440 |
| தனியார், அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்கள் | 75 | 117 |
| **மொத்தம்** | **395** | **557** |

அட்டவணையின் பிரகாரம் தேசிய தேர்ச்சித் தரங்களுக்கமைய அரச துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படுகின்ற 440 பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கைக்காக கணிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றுள் 309 பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டு முடிவடைகையில் அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்கு உரித்தான உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 1,175 ஆகும்.

மீளாய்வாண்டில் தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 117 பாடநெறிகள் உரித்துச்சான்றளிக்கைகாக கணிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றுள் 69 பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டு முடிவடைகையில் தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு உரித்தான உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 426 ஆகும்

2013 ஆம் ஆண்டு முடிவடைகையில் உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகளின் மொத்த எண்ணிக்கை 1601 ஆக இருந்தது.

அட்டவணை 6.3 இன் பிரகாரம், அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்கான இலக்கிடப்பட்ட கணிப்பீட்டுத் தொகையிலும் பார்க்க 120 கணிப்பீடுகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டதுடன் தனியார் மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களின் இலக்கிடப்பட்ட தொகையிலும் பார்க்க 42 கணிப்பீடுகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டன.

பொது நிர்வாக அமைச்சினால் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு தேசிய தொழிற்திறன் தகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டமை, புதிய தேசிய தேர்ச்சி தரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை, தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறு பொதுமக்களிடையே பிரபலமாகியமை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினூடாக வேலைக்குச் செல்லும் வீட்டு நிர்வாக உதவியாளர்களுக்கு NVQ சான்றிதழ் கட்டாயமாக்கியமை போன்ற காரணங்களால் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை செய்வதற்காக விண்ணப்பங்கள் அதிகளவில் பெறப்பட்டமையால் இலக்கிடப்பட்ட தொகையிலும் பார்க்க கூடுதலாக 162 கணிப்பீடுகள் மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

அரச துறை பயிற்சி நிறுவகங்களில் 440 பாடநெறிகளுக்கான கணிப்பீட்டை நடாத்தியிருப்பினும், உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை 309 ஆகும். பயிற்றுவிப்பு உபகரணங்கள் போதியளவு இன்மை, தகுதிவாய்ந்த போதானசிரியர்கள் இல்லாமை, தரங்களுக்கமைய பயிற்சி நடாத்தப்படாமை, தொடர்ச்சியான கணிப்பீட்டை நடாத்தாமை போன்ற காரணிகளால் ஏனைய பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்படவில்லை. மீளாய்வாண்டில் மொத்தமாக 557 கணிப்பீடுகள் நடாத்தப்பட்டதுடன் 376 பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்டன.

**2013 ஆம் ஆண்டு முடிவடைகையில் உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம் – பயிற்சி நிறுவகங்கள் அடிப்படையில் கீழே விபரிக்கப்பட்டுள்ளது**

**அட்டவணை 6.4: உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பயிற்சி பாடநெறிகள்**

| பயிற்சி நிறுவகத்தின் பெயர் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் தொகை (2013 ஆம் வருடத்தில்) ** | மதிப்பீடு செய்யப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை * (2013) | 2013 ஆம் ஆண்டில் உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை | உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகளின் மொத்தத்தொகை (2013 ஆண்டு முடிவடைகையில்) |
|---|---|---|---|---|
| தேசிய பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | 20 | 33 | 33 | 99 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 24 | 56 | 18 | 82 |
| தொழில்நுட்பக்கல்வி, பயிற்சித் திணைக்களம் | 74 | 90 | 57 | 249 |
| இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை | 184 | 218 | 148 | 683 |
| ஏனைய அரச துறை பயிற்சி நிறுவகங்கள் | 67 | 43 | 53 | 62 |
| தனியார், அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்கள் | 107 | 117 | 67 | 426 |
| **மொத்தம்** | **476** | **557** | **376** | **1601** |

* முன்னைய வருட விண்ணப்பங்களும் கணிப்பீடு செய்யப்பட்டன

* திசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கணிப்பீடு செய்யப்படவில்லை.

### 6.5 பாடநெறி உரித்துச்சான்றளிக்கையை புதுப்பித்தல்

உரித்துச்சான்றளிக்கை அளிக்கப்பட்ட பாடநெறிகளின் செல்லுபடியாகும் காலம் 03 வருடங்கள் ஆவதுடன் அச்செல்லுபடியாகும் காலம் முடிவடைகையில் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்படவேண்டும். அதற்கமைய, 2013 ஆம் ஆண்டில் அரச துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 127 பாடநெறிகளும் மற்றும் தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 50 பாடநெறிகளும் புதுப்பிக்கப்படல் வேண்டும். இவற்றில், வருடத்தினுள் அரச துறையைச் சார்ந்த 111 பாடநெறிகள் கணிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றில் 117 பாடநெறிகளின் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்பட்டன. இங்கு முன்னைய வருடத்தில் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வாறே, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறையைச் சார்ந்த 36 பாடநெறிகள் கணிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றில் 34 பாடநெறிகளின் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்பட்டன.

பயிற்சி நிறுவகங்களில் நிலவுகின்ற கீழ்க்குறிப்பிடப்பட்ட காரணிகளால் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறைகளில் நடாத்தப்படும் பாடநெறிகளின் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்படவில்லை

- திட்டங்களுக்கமைய பாடநெறி நடாத்தப்படாமை
- உரிய தேசிய தேர்ச்சித் தரங்களுக்கமைய பாட உள்ளடகங்கள் இல்லாமை
- தொடர்ச்சியான கணிப்பீடுகள் நடாத்தப்படாமை மற்றும் அவற்றின் பதிவுகள் பராமரிக்கப்படாமை
- மாணவர் தேர்ச்சிப் புத்தகங்கள் மற்றும் இதர ஆவணங்கள் பராமரிக்கப்படாமை
- முதலாம் உரித்துச்சான்றளிக்கையின் போது (03 வருடங்களுக்கு முன்) காணப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகள் போன்ற வசதிகள் காணப்படாமை

மீளாய்வாண்டில் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரம் – பயிற்சி நிறுவகங்கள் அடிப்படையில் கீழே விபரிக்கப்பட்டுள்ளது

**அட்டவணை 6.4: உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்பட்ட பயிற்சி பாடநெறிகள்**

| பயிற்சி நிறுவகத்தின் பெயர் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் தொகை (2013 ஆம் வருடத்தில்) | கணிப்பீடு செய்யப்பட்ட பாடநெறிகளின் தொகை (2013)* | 2013 ஆம் ஆண்டில் உரித்துச்சான்றளிக்கை புதுப்பிக்கப்பட்ட பாடநெறிகளின் மொத்தத்தொகை |
|---|---|---|---|
| தேசிய பயிலுநர், கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை | 01 | 02 | 06 |
| தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் | 04 | 06 | 07 |
| தொழில்நுட்பக்கல்வி, பயிற்சித் திணைக்களம் | 12 | 22 | 20 |
| இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | 89 | 78 | 81 |
| ஏனைய அரச துறை பயிற்சி நிறுவகங்கள் | 03 | 03 | 03 |
| தனியார், அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்கள் | 31 | 36 | 34 |
| **மொத்தம்** | **140** | **125** | **151** |

* முன்னைய வருட விண்ணப்பங்களும் கணிப்பீடு செய்யப்பட்டன.

* திசெம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கணிப்பீடு செய்யப்படவில்லை.

### 6.6 பாடநெறி உரித்துச்சான்றளிக்கையை அதிகரிக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட செயலமர்வுகள்

பல்வேறு மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களின் போதானாசிரியர்களுக்கு பாடநெறி உரித்துச்சான்றளிக்கைக்கான தேர்ச்சிசார் பயிற்சி ஆவணங்கள் தயாரிப்பது எவ்வாறு என்பது தொடர்பாக 07 செயலமர்வுகள் நடாத்தப்பட்டதுடன் நிறுவகங்களைச் சார்ந்த 213 போதானாசிரியர்கள் மீளாய்வாண்டில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

### 6.7 ISO 9001-2008 தர முகாமைத்துவ முறைமையயை நிறுவுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

நிறுவக பதிவு மற்றும் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை மூலமாக பயிற்சித் தரத்தை விருத்தி செய்வதற்கான அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும், பயிற்சியின் தரத்தை மென்மேலும் விருத்திசெய்து நடாத்திச்செல்வதற்காக பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அலுவல்களை மேற்கொள்கின்றது.

தேசிய தொழிற்திறன் தகுதிகள் இயக்க கையேடிற்கமைய தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 மற்றும் 06 பாடநெறிகளை நடாத்தும் நிறுவகங்கள் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் கட்டாயமாகும்.

தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கான படிமுறைகள் பின்வருமாறு:

1. தரக் கையேட்டைத் தயாரித்தல்
2. அடையாளங் கண்டுகொண்ட செயல்களுக்கு செய்முறைகளை கட்டியெழுப்புதல்
3. செயல்முறைக் கையேட்டைத் தயாரித்தல்
4. தரக் கையேடு மற்றும் செயல்முறைக் கையேடு ஆகியவற்றை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிடம் கையளித்ததன் பின்பு அவற்றை பரீட்சித்து அவற்றின் குறைபாடுகளை கண்டறிதல்
5. தரக் கணக்காய்வை நடாத்துதல் மற்றும் தர முகாமைத்துவ முறைமைக்கு அங்கீகாரம் வழங்குதல்
6. தர முகாமைத்துவ முறைமைக்கான சான்றிதழை விருதளித்தல்

தொழில்நுட்கல்வி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட ISO 9001:2008 மற்றும் IWA 2007 தரங்களின் அடிப்படையிலேயே ஆணைக்குழு இத் தர முகாமைத்துவ முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது.

பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல், கண்காணித்தல் ஆகியவற்றை நிறைவேற்றும் நோக்கில் வினைத்திறனான செயற்கிரமங்களை தயாரித்தல் இப்பிரிவின் பொறுப்பாகும்.

தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகங்களில் தர முகாமையை முறைமையை நிறுவுவதுடன் தொடர்புடைய பின்வரும் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மீளாய்வாண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

2013 ஆம் ஆண்டு மூன்று (03) தரக் கையேடுகள் இவ்வாணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. அக் கையேடுகள் பரீட்சிக்கப்பட்ட பின்பு மீண்டும் அந்நிறுவகங்களுக்கு கையளிக்கப்பட்டதுடன், அவற்றை சரிசெய்து தர முகாமைத்துவ விண்ணப்பத்துடன் ஆணைக்குழுவிடம் அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

தனியார் மற்றும் அரச சார்பற்ற துறையில் தர முகாமைத்துவ முறைமைச் சான்றிதழ் விருதளிக்கப்பட்ட நிறுவகங்கள் இரண்டின் தரக் கணக்காய்வு அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது வரையிலும் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கு தேவையான அலுவல்களை ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்ற பயிற்சி நிறுவகங்களுக்காக தர முகாமைத்துவம் மற்றும் தரக் கணக்காய்வு தொடர்பான மூன்று (03) செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

### 6.8 பயிற்சி நிறுவகங்களின் பதிவை சான்றுறுதிப்படுத்தல்

பயிற்சி நிறுவகங்களால் வழங்கப்படும் சான்றிதழ்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கையில் அச்சான்றிதழின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, வெளிநாட்டு தூதுவராலயங்கள், தகைமை சரிபார்த்தல் மன்றங்கள் மற்றும் அதிகாரசபைகள் ஆகியவற்றினூடாக அச்சான்றிதழ்கள் இவ்வாணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளிற்கிணங்க வெளிநாட்டில் வேலைவாய்ப்பைப் பெறுவோரின் 425 சான்றிதழ்களுக்கான சான்றுறுதிக்கடிதங்கள் கொடுக்கப்பட்டன.

மேலும் அரச துறை நிறுவகங்களில் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி தொடர்பாக இவ்வாணைக்குழுவிற்கு அனுப்பிய வேண்டுகோளிற்கமைய 375 சான்றுறுதிக் கடிதங்களும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டன.

### 6.9 2013 ஆம் ஆண்டில் பாடநெறி அங்கீகரிப்பு, பயிற்சி நியமங்கள் பிரிவால் ஈட்டப்பட்ட வருமானம்

| | |
|---|---|
| மாணவர் தேர்ச்சிப் பதிவுப் புத்தக விற்பனையால் ஈட்டப்பட்ட வருமானம் | ரூ.1,436,385 |
| நிறுவக பதிவுக் கட்டணம் | ரூ.1,048,500 |
| உரித்துச்சான்றளிக்கைக் கட்டணம் | ரூ. 1,369,500 |
| **2013 ஆம் ஆண்டில் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை, பயிற்சி நியமங்கள் பிரிவால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம்** | **ரூ. 3,854,385** |

## 7.0 தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) பிரிவு

தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறுவை செயல்படுத்துவதற்கான குறிக்கோளுடன் NVQ பிரிவு அதன் இலக்கிடப்பட்ட குறிக்கோள்களை அடைவதன் நிமித்தம் மீளாய்வாண்டில் பின்வரும் செயல்நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவையாவன:

1. தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறையை பொதுமக்களிடையே ஊக்குவிப்பதற்காக அரச மற்றும் கைத்தொழிற் துறையைச் சார்ந்தோருக்கு தெரியப்படுத்தல் செயற்பாடுகள்
2. தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் அதுசார்ந்த ஆவணங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்கல்
3. தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறையை செயற்படுத்துவதற்கான நேரடி மற்றும் நேரடியல்லாத வேலைத்திட்டங்கள்
4. இவ்வாணைக்குழுவில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதற்கான சான்றுறுதிப்படுத்தலை நாளதுவரையாக்கும் செயற்பாடுகள்

மற்றும்

5. 2013 ஆம் ஆண்டு வருடாந்த செயலாக்கத்திட்டத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்ட NVQ மற்றும் ஏனைய செயற்பாடுகள்

மேற்கூறிய ஐந்து விடயங்களையும் மீளாய்வாண்டில் செயற்படுத்திய விதம் பின்வருமாறு விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

### 7.1 தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறையை பொதுமக்களிடையே ஊக்குவிப்பதற்காக அரச மற்றும் கைத்தொழிற் துறையைச் சார்ந்தோருக்கு தெரியப்படுத்தல் செயற்பாடுகள்

i. 2013 ஆம் ஆண்டின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தின் பிரகாரம் NVQ தொடர்பான தெரியப்படுத்தல் செயலமர்வுகள் மூன்றை (03) நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, அரச கைத்தொழிற் திணைக்களம் ஆகிய நிறுவகங்களைச் சார்ந்த ஊழியர்களுக்காக இரண்டு (02) செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அத்துடன், சிறு தொழில் அபிவிருத்தி செய்தல் பிரிவின் கீழ் பதிவு செய்துள்ள சுயதொழில் முயற்சியாளர்களுக்காகவும் செயலமர்வொன்று நடாத்தப்பட்டது. இம் மூன்று செயலமர்வுகளிலும் 180 பேர் கலந்துகொண்டனர்.

இதற்கு மேலதிகமாக சம்பள நிர்ணய சபைக்காக NVQ தகுதிகளை உள்ளடக்கி தனியார் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு NVQ தகுதிகள் அடிப்படையில் சம்பளத்தை வழங்குவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சிலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன.

ii. 2013 ஆம் ஆண்டு தேசத்திற்கு மகுடம் கண்காட்சி அலுவல்களுக்கு இணையாக அம்பாறை மாவட்டத்திலுள்ள நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளில் பணியாற்றுகின்ற திண்மக் கழிவு முகாமைத்துவ உதவியாளர்கள் தொழிலுடன் தொடர்புடைய ஊழியர்களுக்காக NVQ தொடர்பான தெரியப்படுத்தல் செயலமர்வுகள் மற்றும் NVQ சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கான கணிப்பீட்டு அலுவல்கள் ஆகியவற்றை இப் பிரிவு மேற்கொண்டது. இம்மாவட்டத்தில் பணியாற்றுகின்ற 90 ஊழியர்களுக்கு NVQ சான்றிதழ் விருதளிக்கப்பட்டது.

### 7.2 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் அதுசார்ந்த ஆவணங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் நாளதுவரையாக்கல்

i. 2013 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்திச செய்யப்பட்டு செல்லுபடியாக்கப்பட்டன.

**அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்**

(அ) NVQ மட்டம் 01 - 04

- பற் சிகிச்சை தாதி உதவியாளர்
- மீன் பிடி வினைஞர்
- கட்டிட சேவை வினைஞர்
- மின்னுயர்த்தி வினைஞர்
- உயிர்க் காப்பாளர்
- விவசாய உபகரணப் பொறிவலர்
- ஆடை அணிமணி வடிவமைப்பாளர்
- கறுவா விளைநிலப்பரப்பு செயற்பாடு
- கறுவா ஆலை செயற்பாடு
- முன் அலுவலக செயற்பாடு
- சமூகஞ்சார் சுற்றுலா உதவியாளர்
- வீட்டுப் பராமரிப்பு மேற்பார்வையாளர்
- முதலுதவியாளர்
- சுற்றுலா வழிகாட்டி
- சுற்றுலா மற்றும் பிரயாணச் செயற்பாடு
- திண்மக் கழிவு இயக்க மேற்பார்வையாளர்
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
- நிகழ்வு செயற்பாடு
- ரிக்கர்
- மீன்பிடிப் படகு வினைஞர்

(ஆ) NVQ மட்டம் 05 - 06

- தேயிலைத் தொழில்நுட்பம்
- அழகியல்
| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | |
| | 83,527 | 104,839 | 113,060 | 116,157 | 82,167 | 124,741 | 108,193 | 136,994 | 57,660 |

குறிப்பு: அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட வேலைவாய்ப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2004 தொடக்கம் 2012 வரை பத்திரிகை விளம்பர ஆய்வுகளின்படி தொழிற் கேள்வி மற்றும் மாற்றம் கீழேயுள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




### 8.3 தொழிற்சந்தைத் தகவல் இணையப் பக்கம்


தொழிற்சந்தைத் தகவல்களை பயனுறுதியும் வினைத்திறன் மிக்கதாக பாவனையாளர்களுக்கு வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டிலும் தொழிற்சந்தைத் தகவலிற்கான இணையப் பக்கம் நாளதுவரையாக்கப்பட்டது. இதனூடாக:

- நடப்பு தொழிற்சந்தைத் தகவல்கள்
- பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான தகவல்கள்

- கடந்தகால தொழிற்சந்தைத் தகவல் வெளியீடுகள் தொடர்பான தகவல்கள்
- தொழிற்சந்தைத் தகவல் வரைவிலக்கணங்கள், எண்ணக்கருக்கள்
- பயனுள்ள, தொடர்புடைய இணையத்தளங்களின் இணைப்புக்கள்
- சுய விபரத்தொகுப்பு தயாரிப்பதற்கான உதவி வழிமுறைகள்
- தொழில் வெற்றிடங்களை வெளியிடுதல் மற்றும் மீள்பார்வை செய்தல்
- தொழில்நுட்ப, தொழில்சார் வகையிலுள்ள கேள்வியுள்ள 10 தொழில்கள்
- **TVET Guide** உள்ள பாடநெறிகளின் விபரம்
- கடந்த வருடங்களின் தொழிற்சந்தைத் தகவல்கள்
- தொழில் தேடுநர்களுக்காக தொழில்தருநர்களால் வழங்கப்படும் தொழில் வெற்றிடங்கள் காலத்திற்குக் காலம் முறையாக நாளது வரையாக்கப்படுவதுடன் நடைமுறையிலுள்ள தொழில் வெற்றிடங்களைப் பிரசுரித்தல்

ஆகிய முக்கிய விடயங்களை வழங்குவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளபட்டுள்ளன.

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




### 8.4 இணையம், மின்னஞ்சல் மற்றும் உள்ளிணைய வசதிகள்

மின்னஞ்சலைப் பயன்படுத்துதல் தொடர்பான அரச சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலக தகவல்களை பரிமாறிக்கொள்கையில் வினைத்திறனை அதிகரித்தல், செலவைக் குறைத்தல் மற்றும் நேரத்தை சிக்கனப்படுத்தல் ஆகியவற்றிற்காக விரைவுமிக்க இணைய மற்றும் மின்னஞ்ஞல் வசதிகளை பதவியணியில் உள்ள அனைவரும் பயன்படுத்துவதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. அதனூடாக ஆணைக்குழுவின் பதவியணியினர் அறிவை வளர்த்துக்கொள்வதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. பணியாளர்களுக்கிடையே தகவல்களை பகிர்ந்துகொள்வதற்காக உள்ளிணையமொன்று இப்பிரிவினால் பராமரிக்கப்படுகின்றது. இப்புதிய தொடர்பாடல் வசதியின் பயனுறுதி, நெகிழ்வுத்தன்மை போன்ற காரணிகளால் பயனாளர்களின் கவனத்தை இவ்வுள்ளிணையம் ஈர்த்துள்ளது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதவியணிநர்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்தை அதிகரிப்பதற்காக மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### 8.5 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை பராமரித்தல்

தகவல் முறைமைகள் பிரிவினாலேயே ஆணைக்குழுவின் இணைய தளம் நிருவகிக்கப்படுகின்றது. ஆணைக்குழுவின் செயற்பாடுகள், தொழிற்சந்தை தகவல்களை மிகவும் சரியாகவும் மற்றும் நாளதுவரையாகவும் பராமரித்தல், ஆணைக்குழுவின் புதிய முன்னேற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப, தொழில் கல்வி மற்றும் பயிற்சி துறையின் புதிய அபிவிருத்திகளை அறிமுகப்படுத்தல் ஆகியன இவ்வாணைக்குழு இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.




எமது TVEC இணைய தளத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்ட இணைய பக்கங்கள் வெளியீடு செய்யப்பட்டுள்ளன:

- தொழிற்சந்தைத் தகவல்
- தேசிய தொழிற்திறன் தகுதிகள்
- பாடநெறி பதிவு, உரித்துச்சான்றளிக்கை
- திட்டமிடல், ஆராய்ச்சி
- உள்ளிணையம்
- ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை
- செய்திகளும் சம்பவங்களும்
- தகவல் முறைமைகள்
- TVET வழிகாட்டி
- NVQ விருதளிப்பு முறை
- உள்ளக இணை வலை

மேலும், 2013 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்களின் தேவைகளை விரைவாகப் பூர்த்திசெய்யும் முயற்சியாக பின்வரும் தரவுத்தளங்கள் இவ்வாணைக்குழு இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டன.

- 2014-2018 யாக்கத் திட்டம்
- தேசிய TVET கொள்கை வரையுறு


- பிரஜைகள் சாசனம்
- பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குநர்களின் பட்டியல்
- NVQ சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- NVQ தொழிற்படு கையேடு
- உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகளின் பட்டியல்
- TVET துறையிலுள்ள பாடநெறிகளின் விபரம்
- தேசிய தேர்ச்சித் தரங்களின் பட்டியல்
- TVET வழிகாட்டி
- NVQ தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பதிவேடு
- தொழில் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள்
- பயிற்சி நிறுவகங்களுக்காக வழங்கப்படும் நிதியுதவி பற்றிய விபரங்கள்
- TVET ஆராய்ச்சி அறிக்கைகள் மற்றும் ஏனைய கல்வி, பயிற்சி ஆராய்ச்சி அறிக்கைகள்

2013 ஆம் ஆண்டில் கீழ்க் காணப்படும் இணைய பக்கங்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை இணையத்தில் தொடர்பு செய்யப்பட்டன.

### 8.6 பதிவு, உரித்துச்சான்றளிக்கை இணைய பக்கம்

இவ் இணைய பக்கத்தின் மூலம் நிறுவகப் பதிவு மற்றும் பாடநெறி உரித்துச்சான்றளிக்கை பற்றிய சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். மேலும், இப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவகங்கள், உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகள், பதிவு விண்ணப்ப படிவம், பதிவு புதுப்பிப்பு விண்ணப்ப படிவம், பாடநெறி உரித்துச்சான்றளிக்கை விண்ணப்ப படிவம் என்பவை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை தரவிறக்கமும் செய்துகொள்ளலாம்.


இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




**பதிவு, உரித்துச்சான்றளிக்கை பற்றி நேரடியாக இணைய பக்கத்தில் பெறக்கூடிய வசதி**

இவ்வசதியினூடாக நாட்டிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்கள் மற்றும் உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகள் பற்றிய விபரங்களை கூர்ந்து ஆராய முடிவதுடன் அதன்மூலம் எவரேனும் ஒருவரிற்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட முறைகளுக்கு அமைய ஆராய முடியும்.


1. மாகாண மற்றும் துறைகளுக்கமைய நிறுவகங்கள்
2. மாகாண மற்றும் உரித்துடைமைக்கமைய நிறுவகங்கள்
3. நிறுவகத்தின் பெயரோ அல்லது பெயரின் ஒரு பகுதி
4. பாடநெறியின் பெயர் மற்றும் மாவட்டதிற்கமைய நிறுவகங்கள்





### 8.7 திட்டமிடல், ஆராய்ச்சி இணைய பக்கம்

இவ் இணைய பக்கத்தில் தொழில்நுட்ப, தொழில் பயிற்சி திட்டமிடல் கொள்கை, யாக்கத்திட்டம், வருடாந்த செயலாக்கத் திட்டம், தொழில் பயிற்சித் திட்டம், மூலதன மானியம் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி சிற்றறைக்காக தனியானதொரு பக்கம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அதில் சிற்றறையின் தொலைநோக்கு, செயற்பணி ஆராய்ச்சி சிற்றறையை தாபித்தல், ஆராய்ச்சி வகைகள் மற்றும் ஏனைய நடாத்தப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகளின் தேர்ச்சி அறிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சி சம்பந்தமாக ஆர்வமுள்ளவர்கள் ஆராய்ச்சி பற்றியும் அது தொடர்பான விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி இணைய பக்கத்தை பார்வையிட்டவர்கள் பற்றிய ஆய்வொன்று 2013 ஆம் ஆணடு நடாத்தப்பட்டதுடன் உள்ளூர் மற்றும் வெளியூரில் உள்ள சுமார் 20,000 பேர் இவ் இணைய பக்கத்தை பிரயோசனப்படுத்தியுள்ளனர். இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




### 8.8 தகவல் முறைமைகள் பிரிவின் இணைய பக்கம்

இவ் இணைய பக்கம் 2013 ஆம் ஆண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டது.

இப் பக்கத்தில் மின்னனு நூலகம் மற்றும் உள்ளிணையம் போன்ற வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.




இதற்கு மேலதிகமாக பின்வரும் தரவுத்தளங்களை அபிவிருத்தி செய்து பராமரிப்பதற்கு இப்பிரிவிற்கு இயலுமாயிருந்தது.

- பதிவுசெய்யப்பட்ட பயிற்சி வழங்கும் நிறுவகங்கள், உரித்துச்சான்றளிக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்
- NVQ சான்றிதழாளர்களின் விபரங்கள்
- புதினப்பத்திரிகை விளம்பர ஆய்வு விபரங்கள்


TVEC உள்ளூர் பிரதேச வலையமைப்பை இப்பிரிவு நிர்வகிப்பதுடன் வலையமைப்பின் இணையம், மின்னஞ்சல், மத்திய தரவுத்தளங்கள், மற்றும் ஏனைய பகிரப்பட்ட வசதிகள் ஆகியனவற்றை 2013 ஆம் ஆண்டிலும் இப்பிரிவு பராமரித்தது.

### 8.9 TVET வழிகாட்டி


தொழிற்சந்தைத் தகவல் வெளியீடுகளுக்கு மேலதிகமாக, TVET வழிகாட்டி - 2014 ஐ 2013 ஆம் ஆண்டில் இப்பிரிவு வெளியீடு செய்தது. இவ்வழிகாட்டியில், மாகாண மட்டங்களில் மற்றும் தொழிற்துறைகள் ரீதியாக இலங்கையில் அரச துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் பற்றிய விபரங்கள், பாடநெறியை பயிலுவதற்கான தகைமைகள், பாடநெறிக் கட்டணங்கள், பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களின் விபரங்கள் மற்றும் உரித்துச்சான்றளிக்கப்பட்ட பாடநெறிகளின் விபரங்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. மாகாண

மட்டத்தில் ஒவ்வொரு நிறுவகத்திலும் பயிற்சியை பாடநெறியைப் பயிலுவதற்கான தகைமைகளுக்கமைய வகைப்படுத்தப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

இவ்வெளியீட்டின் முன் அட்டைப்படம் கீழே தரப்பட்டுள்ளது.




இதற்கு மேலதிகமாக TVET வழிகாட்டி குறுவட்டு வடிவில் மும்மொழிகளிலும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அதன் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




TVET வழிகாட்டியை இவ் ஆணைக்குழு இணைய தளத்தினூடாக பார்வையிட முடிவதுடன் அதுபற்றிய தகவல்களை பின்வரும் விதத்தில் பெற்றுக்கொள்ளலாம்:

- மாகாண ரீதியாகவுள்ள கைத்தொழிற் துறைகள்
- மாகாண ரீதியாகவுள்ள தகைமைகள்
- கைத்தொழில் மற்றும் மாகாண ரீதியாகவுள்ள பயிற்சித் துறைகள்

இவ் இணைய பக்கத்தின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.

### 8.10 TVEC செய்திமடல்கள்




மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாக தெரியப்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டில் இரண்டு TVEC செய்திமடல்கள் தயாரிக்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு அவை பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் மற்றும் அது தொடர்பாக ஆர்வம் காட்டுவோர்களுக்கிடையே இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

அவ் இரண்டு செய்திமடல்களின் வடிவம் கீழே தரப்பட்டுள்ளது.






## 8.11 ஆணைக்குழுவின் நூலகம்

இவ்வாணைக்குழுவின் நூலகம் தகவல் முறைமைகள் பிரிவினால் நிருவகிக்கப்படுகின்றது. உள்ளூர் மற்றும் வெளியூரின் பல்வேறு கல்வித் துறைகளிலுள்ள பல்வேறு முறைமைகள் மற்றும் கட்டமைப்புகளை கற்றறிந்து கொள்வதற்கான வசதிகளை இந்நூலகம் வழங்குகின்றது.

தகவல் முறைமைப் பிரிவின் கீழ் செயற்படும் TVEC யின் நூலகம் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது:

- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறைக்குரித்தான புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை வழங்குதல்
- ஆணைக்குழு வெளியீடுகள் மற்றும் பிரசுரங்களை நிருவகித்தல் மற்றும் விற்பனை செய்தல்
- பதினப்பத்திரிகைகளை கிடைக்கச்செய்தல் மற்றும் ஏனைய ஆவணங்களை கிடைக்கச்செய்தல்
- பருவ வெளியீடுகள் கிடைக்கச்செய்தல்
- ஏனைய நூலகசார் சேவைகளை வழங்குதல்

2005 தொடக்கம் 2013 வரை நூலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்களின் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | பெறுமதி (ரூ.) |
|---|---|
| 2005 | 50,000.00 |
| 2006 | 99,513.00 |
| 2007 | 150,000.00 |
| 2008 | 195,000.00 |
| 2009 | 99,288.00 |
| 2010 | 50,000.00 |
| 2011 | 50,000.00 |
| 2012 | 50,000.00 |
| 2013 | 50,000.00 |

2005 தொடக்கம் 2013 வரை நூலகத்தால் விற்பனை செய்யப்பட்ட வெளியீடுகளின் பெறுமதி கீழே தரப்பட்டுள்ளது.


| ஆண்டு | பெறுமதி (ரூ.) |
|---|---|
| 2005 | 75,100.00 |
| 2006 | 57,975.00 |
| 2007 | 96,000.00 |
| 2008 | 146,178.00 |
| 2009 | 189,100.00 |
| 2010 | 125,100.00 |
| 2011 | 400,050.00 |
| 2012 | 482,672.00 |
| 2013 | 671,875.00 |

இவ்வாணைக்குழு நூலகத்திலிருந்து கிடைக்கப்பெறாத புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய நூல்களை ஆர்வமுள்ளவர்களுக்கு பெற்றுக்கொடுக்குமுகமாக நூலகங்களுக்கிடையேயான இரவல் சேவையினையும் வழங்கியது.

பதவியணிநரின் தகவல் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்காக வெவ்வேறு நூலகங்களினூடாக தகவல்களை பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டது. பிரித்தானிய மன்ற நூலகத்திலிருந்து கூட்டு அங்கத்துவமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. இதன் மூலம் மேலதிகமாக புத்தகங்களை வாசிக்கவும் சர்வதேசம் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு மின்னணு நூலகம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தரவுத்தளமொன்றில் சகல வெளியீடுகளினதும் விபரங்கள் உட்செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பணியாளர்கள் நூலகத்திற்கு வராமலேயே கணினியூடான நேரடித்தொடர்பு மூலம் தமக்குத் தேவையான புத்தகத் தலைப்புக்கள், நூலாசிரியர் போன்ற விபரங்களைத் தேடிக்கொள்ளலாம். 2011 ஆம் ஆண்டில் இருந்து libsys என்ற மென்பாகம் பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் நூலகத்தைப் பயன்படுத்துவோருக்கு அதிக வசதியும் சேவையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

libsys என்ற நூலக மென்பாகத்தின் பக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




## 8.12 புவியியல்சார் தகவல் முறைமை (GIS)

2009 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாணைக்குழுவில் புவியியல்சார் தகவல் முறைமை (GIS) தாபிக்கப்பட்டு பராமிக்கப்படுகின்றது (http://www.tvec.gov.lk/pathfinder). இதற்காக ஆணைக்குழுவின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. நவீன கணினி தொழில்நுட்பத்தின் உதவியுடன் மின்னணு ரீதியாக நாட்டில் இயங்கும் எந்தவொரு பயிற்சி நிறுவகத்தையும் அணுகுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இம்முறைமையினூடாக அருகாமையிலுள்ள நகரங்கள், அமைவிடம் மற்றும் நிறுவகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகள் ஆகியனவற்றை தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இணைய சார் GIS இனூடாக வலையமைப்பை அணுகுவதற்கான சாத்தியப்பாட்டை ஆராய்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பயிற்சி ஏற்பாடுகள் பற்றிய நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஆர்வமுள்ளோர் GIS இனைப் பயன்படுத்த முடியும். இப் புவியியல்சார் தகவல்களை அணுகுவதற்கான மென்பாகமொன்றைத் தெரிவு செய்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், விசேடமாக அதிக செலவில்லாமல் மென்பாகமொன்றைக் கொள்வனவு செய்வதற்கும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இத் தகவல் சேவையின் முதற்கட்ட நடவடிக்கை சபரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ள தொழிற் பயிற்சி நிறுவகங்களில் கடமையாற்றும் போதனாசிரியர்களின் ஆலோசனைகளுக்கமைய இடம்பெற்றது. அத்துடன் மீளாய்வாண்டில் தென், வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் முற்றாக உள்ளடக்கப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் “தேசத்திற்கு மகுடம்” தேசிய கண்காட்சிக்கு ஒருங்கமைவாக இப் பணி மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் வருடம் பூராகவும் நாளதுவரையாக நடாத்தப்பட்டது. இச் சேவைக்கு நாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும்

வைத்தியசாலைகள் மற்றும் சில பொது நிறுவகங்கள் போன்ற முக்கிய தகவல்களையும் இம்முறைமையினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

GIS இன் பக்கம் கீழே தரப்பட்டுள்ளது.



## 9.0 சர்வதேச ஒத்துழைப்பு

9.1 2013 ஆம் ஆண்டில் யுனெஸ்கொ – யுனெவொக் ஒருங்கிணைப்பு வலையமைப்பில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு பெற்றுக்கொண்ட தேர்ச்சி

2013 ஆம் ஆண்டு தொடக்கம் யுனெஸ்கொ – யுனெவொக் நிலையத்தின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதற்கும் மற்றும் பல்வேறு பணிகளை மேம்படுத்துவதற்கும் இவ்வாணைக்குழு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. ஜேர்மனியில் பொன் நகரிலுள்ள யுனெஸ்கோ – யுனெவொக் தலைமைக் காரியாலயத்தின் கிளை அலுவலமாக இவ்வாணைக்குழு தொழிற்படுகின்றது. அதற்கமைய, யுனெஸ்கொ – யுனெவொக் இன் கிளைக் காரியாலயம் இவ்வாணைக்குழுவில் தாபிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் இவ்வாணைக்குழு கிளைக் காரியாலயமாகத் தொழிற்பட்டு பல்வேறு மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் பிரதிநிதியாக கலந்துகொண்டது. இம் மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தைச் சார்ந்த நாடுகளின் பல பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அதன் மூலம் பிராந்திய யுனெவொக் நிலைய ஒருங்கிணைப்பாளர்களுக்கிடையே மற்றும் நிலையங்களுக்கிடையே கருத்துகள் பரிமாறப்பட்டமை காணக்கூடியதாகவுள்ளது). இம்மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளின் முடிவில் யுனெவொக் நிலையங்களுக்கிடையே மற்றும் அவற்றின் ஒருங்கிணைப்பாளர்களுக்கிடையே மிகவும் வலிமையான ஒத்துழைப்பு கட்டியெழுவதற்கான இவ்வாறான கூட்டங்கள் பெரிதும் உதவின.

தெற்காசிய வலயத்தின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையிலே இவ்வாணைக்குழு மேற்கொண்ட கடமைகள் மற்றும் யுனெவொக் நிலையங்களுக்கிடையிலே பேணி வரும் தலைமைத்துவம் மூலம் இலங்கையில் அமைந்துள்ள யுனெவொக் நிலையம் பிராந்திய நிலையங்களின் தலைமைத்துவமாக செயற்படுவதற்கு ஏதுவாயுள்ளது. அதற்கமைய ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், ஈரான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை சம்பந்தப்படுத்தி மற்றுமொரு யுனெவொக் பிராந்திய அலுவலகம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு அலுவலகத்தில் திறக்கப்பட்டுள்ளது.

9.2 பாகிஸ்தான் நாட்டின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் உள்ள உயர்மட்ட அலுவலர்கள் இலங்கையில் கல்விச் சுற்றுலா

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் யுனெவொக் நிலையம், பாகிஸ்தான் நாட்டின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் உள்ள உயர்மட்ட அலுவலர்களுக்காக 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆந் திகதி தொடக்கம் 13 ஆந் திகதி வரை விசேட கல்விச் சுற்றுலாவின் மூலம் அவ் அலுவலர்கள் இலங்கையின் தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறு மற்றும் முன் கற்றலை அங்கீகரித்தல் மூலம் தொழிற்திறன் தகுதிச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நிலவும் முறை தொடர்பாக தெரிந்துகொண்டனர். இக்கல்விச் சுற்றுலாவில் பாகிஸ்தான் நாட்டின் 21 உயர்மட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர். அவர்களுள் பாகிஸ்தானின் தேசிய தொழிற்திறன் தொழில்நுட்ப பயிற்சியின் தேசிய அமைப்புகளுக்கான உறுப்பினர்கள், ஒவ்வொரு தொழிற் பரீட்சிப்புச் சபையின் உறுப்பினர்கள் மற்றும் பாகிஸ்தான் தொழில்நுட்ப கல்விச் சபையின் உறுப்பினர்கள் உள்ளடங்குவர். இக்கல்விச் சுற்றுலாவின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- இலங்கையின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி துறை முறைமை தொடர்பாக ஒப்பீடு செய்தல் மற்றும் பாகிஸ்தான் நாட்டின் தேசிய தொழிற்திறன் தகுதிகள் வரையுறு தொடர்பாக புதிய எண்ணங்களை மேலும் விருத்தி செய்தல்.

- தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறைமையை செயற்படுத்துவது தொடர்பாக பல்வேறு தொழிற்துறைகளிலுள்ள பிரபலமானவர்கள் மற்றும் பொறுப்புள்ள அலுவலர்களின் கருத்துகளை அறிந்துகொள்ளல் மற்றும் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அனுபவங்களை பகிர்ந்துகொள்ளல்.

- தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையில் தேசிய தொழிற்திறன் தகுதி பட்டப்படிப்பை பெற்றுக்கொள்கையில் நிலவுகின்ற குறுக்கு மற்றும் நெடுக்குமுக தடைகளை கண்டறிதல் மற்றும் ஆராய்தல்

• முன்கற்றலை அங்கீகரித்தல் முறையினூடாக தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழை பெற்றுக்கொள்வது தொடர்பாக பிரயோக ரீதியாக நிலவுகின்ற அங்கீகாரம் பற்றி ஆராய்தல் மற்றும் கைத்தொழிற் துறையிலுள்ள தொழில் தருநர்கள் மற்றும் தொழில்புரிவோர்களுக்கு அதன் மூலம் கிடைக்கும் பலன்கள் பற்றியும் ஆராய்தல்

இதற்காக பங்குபற்றியவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தொழிற்துறை ரீதியாகவும் கலந்துரையாடினர்.

• தேசிய தொழிற்திறன் தகுதிகள் முறைமையை மேற்பார்வை செய்கையில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கடமைகள் மற்றும் பின்பற்றப்படும் முறைகள்

• முன்கற்றலை அங்கீகரித்தல் முறையினூடாக கணிப்பீட்டை நடாத்தி சான்றிதழ் விருதளிப்பதற்கு பின்பற்றப்படும் முறைகள்

• தேசிய தொழிற்திறன் தகுதிகளுக்கான கணிப்பீட்டை நடாத்துகின்ற தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகள் மற்றும் அவர்கள் பின்பற்றவேண்டிய முறைகள்

• கணிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் பதிவு செய்தல், மற்றும் முன்கற்றலை அங்கீகரித்தல் முறையினூடாக விண்ணப்பிப்பவர்கள் பூர்த்திசெய்திருக்க வேண்டிய தகுதிகள் மற்றும் அவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகள்

• தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் பெற்றவர்கள் பற்றிய தரவுத்தளமொன்றை பராமரித்தல் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழை உறுதிப்படுத்தல் மற்றும் பதிவேடொன்றை பராமரித்தல்

இதற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக சம்பந்த அலுவலர்களுடன் கலந்துரையாடினர்.

• தொழிற் சந்தை தகவல் முறைமையொன்றைப் பராமரித்தல்

• தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவகங்களின் தரத்தை உறுதிப்படுத்தல் (பயிற்சி நிறுவகத்தை பதிவுசெய்தல், அந்நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்தல், தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல்)

• வளர்ந்துவரும் கைத்தொழிற் துறைகளுக்காக தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல்

• தேசிய தேர்ச்சித் தரங்களை செல்லுபடியாக்குதல்



9.3 தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையிலே மின்னணு கற்றலினூடாக பாடநெறிகளுக்கு தரச் சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் யுனெவொக் நிலையத்தின் உதவி மீளாய்வாண்டில் பெறல்

இலங்கையில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையின் தரத்தை உறுதிப்படுத்துகின்ற மற்றும் பாடநெறிகளுக்கு உரித்துச்சான்றளிக்கை அளிக்கின்ற ஒர் ஒழுங்குபடுத்தும் அமைப்பாகத் தொழிற்படும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி துறைக்காக மின்னணு கற்றலினூடாக பாடநெறிகளுக்கும் தர நியமங்களை அபிவிருத்திசெய்துள்ளது. இச்செயற்திட்டம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிலுள்ள யுனெவொக் நிலையத்தின் தலைமையில் செயற்படுத்தப்படுகிறது.

நடப்பிலே, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையிலுள்ள பாடநெறிகள் தொலைதூரக் கல்வி முறை மற்றும் கலப்பு கல்வி முறை என்ற வகையில் பிரபலமாகி வருகின்றன. மின்னணு கற்றல் முறைக்கு தொலைதூர மற்றும் கலப்பு முறை கல்வி மாணவர்களுக்கிடையே படிப்படியாக பிரபலமாகி வருகின்றது. இவ்வாறான கற்பிப்பு முறைகள் இலங்கை மக்களின் சமூக மற்றும் பொருளாதார அமைப்பிற்கமைய அவர்களின் வதிவிடம் மற்றும் பொருளாதார நிலைமைக்கேற்ப ஓப்பீடு செய்தல் காலத்தின் தேவையாகவுள்ளது. எனவே, மின்னணு கற்றல் முறை அவரவர்களின் கல்வி மட்டத்திற்கமைவாக இடம்பெறுகின்றது.

மின்னணு கற்றல் முறையினூடான பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பு தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையின் ஒழுங்குபடுத்தும் அமைப்பாகிய மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைனக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின்னணு கற்றல் முறையினுடாக பாடநெறிகளின் தர நியமங்களைப் பேணல் மற்றும் உரித்துச்சான்றளிக்கை அளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன இவ்வாணைக்குழு நீண்டகாலமாக அறிந்துவைத்துள்ள காலத்திற்குரிய தேவைப்பாடாகும்.

இத்தேவைப்பாட்டை பூர்த்திசெய்வதற்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு சம்பந்தபட்ட துறைகளைச் சார்ந்த அரச, தனியார் நிறுவகங்கள் மற்றும் துறையிலுள்ள அனைத்து அமைப்புகளுடன் ஒத்துழைப்பைப் பெற்று அலுவல்களை மேற்கொள்கின்றது. மேலும், ஐரோப்பிய கல்வி ஆற்றல் கட்டியெழுப்பல் (ECB) அளவை நிர்ணயங்கள் இம்முறையில் பின்பற்றப்படுகின்றது.



9.4 மின்னணு கற்றல் செயற்பாட்டில் ஈடுபடல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான பயிற்சியை ஜேர்மனி நாட்டின் GIZ நிறுவகம் வழங்கியது. இது தொடர்பான ஆரம்ப சுற்றுப் பேச்சுவார்த்தை மற்றும் யோசனை முன்வைப்பு 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆந் திகதி இவ்வாணைக்குழு அலுவகத்தில் நடாத்தப்பட்டது.

இலங்கையிலே மின்னணு கற்றல் செயற்பாட்டில் ஈடுபடல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய செயன்முறை, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறைக்குரிய தரம் ஒப்படைத்தல் தொடர்பாக விபரங்கள், ஆணைக்குழுவில் பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்தல், பாடநெறிகளை உரித்துச்சான்றளிக்கை செய்தல், தரங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான விரிவான விபரங்களை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்திலிருந்து (www.tvec.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

பொதுநலவாய நாடுகளுக்காக கல்வி என்ற தலைப்பின் கீழ் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் யுனெவொக் நிலையத்தால் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறைக்காக வழிப்படுத்திய, திறந்த மற்றும் தொலைதூரக் கல்வி பயிற்சி வழங்குவதற்கான அலுவல்களை மேற்கொள்ளப்பட்டமை 2013 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவால் நிறைவேற்றப்பட்ட ஒரு கடமையாகும்.

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய பொதுநலவாய நாடுகளுக்காக கல்வி வழங்குதல் மற்றும் செயற்பாட்டில் ஈடுபடுதல் செயற்திட்டத்தினால் திறந்த மற்றும் தொலைதூர கல்வி பயிற்சி வேலைத்திட்டமொன்றை இவ்வாணைக்குழு நடாத்தியது. இதுதொடர்பாக 2011 ஆம் ஆண்டு சீனாவில் சங்காய் நகரில் நடாத்தப்பட்ட யுனெஸ்கொ மூன்றாவது மாநாட்டில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி என்ற தலைப்பில் இடம்பெற்ற கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தில் கவனஞ்செலுத்துகையில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் தொழிற்படும் யுனெவொக் நிலையத்தால் விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கிணங்க வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டது.

இச்செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான காரணி யாதெனில் இவ்வாணைக்குழுவில் தகவல் முறைமைகள் பிரிவில் பணிப்பாளராக கடமையாற்றும் திரு.ஜானக ஜயலத் அவர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சி பத்திரமே ஆகும்." இலங்கையில் மின்னணு முறையினூடாக கல்வி பயிலலை அபிவிருத்தி செய்வதற்குரிய ஆற்றல் மற்றும் அதன் மூலம் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறையின் வலுத்தன்மையை விருத்தி செய்தல்" என்ற தலைப்பில் திரு. ஜானக ஜயலத் அவர்கள் முன்வைக்கப்பட்ட இப்பத்திரம் பொதுநலவாய நாடுகளில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அபிவிருத்தி செய்தல் தொடர்பான வல்லுநர் அலிசன் ரிச்சர்ட்ஸன் அம்மையாரின் விசேட கவனத்திற்கு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக அலிசன் ரிச்சர்ட்ஸன் அவர்கள் இவ்வாணைக்குழுவுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டதன் பிற்பாடு இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் யுனெஸ்கொ யுனெவொக் நிலையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜயலத் அவர்களால் முன்வைக்கப்பட்ட இவ் எண்ணக்கரு சீனாவின் சங்காய் நகரில் நடைபெற்ற யுனெஸ்கொ யுனெவொக் மாநாட்டில் மேலும் வலுப்படுத்தப்பட்டு மற்றும் நிரந்தரமாக முன்வைக்கப்பட்டதன் பிறகு விரிவான ஆராய்ச்சி முன்மொழிவொன்று பொதுநலவாய நாடுகளில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி அபிவிருத்தி செய்தல் தொடர்பான பிரிவிடமிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டது.

திருவதி. அலிசன் அவர்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (தொழிற் பயிற்சி) திரு. தேசபிரிய, ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் திரு.பி.எச்.எஸ். சுரவீர, அமைச்சின் தொழிற் பயிற்சி பிரிவின் பணிப்பாளர் திருவதி. கல்தேர மற்றும் ஆணைக்குவின் தகவல் முறைமைகள் பிரிவின் பணிப்பாளர் திரு. ஜானக ஜயலத் ஆகியோருடன் அமைச்சில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துரையாடுவதை கீழுள்ள படத்தில் காணலாம்.



9.5 **2013 ஆம் ஆண்டில் பயிற்றுவிப்பாளர்களுக்காக கற்பிப்பு முறைகள் தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கு Temasek மன்றத்தின் நிதி அனுசரணை**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இவ்வாணைக்குழு ஆகியவற்றின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கை தொழில்நுட்ப,தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையிலுள்ள பயிற்சியாளர்களுக்கு "முதன்மைப் பயிற்சியாளர்கள் ஆசிரியரியல் நிகழ்ச்சித்திட்டத்தை" நடாத்துவதற்கு சிங்கப்பூர் ITTES நிறுவனம் முன்வந்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு Temasek மன்றம் நிதி அனுசரணை வழங்குகிறது. 2007 ஆம் மே மாதம் தாபிக்கப்பட்ட Temasek மன்றம் Temasek ஹோல்டிங்ஸ், சிங்கப்பூர் நிறுவனத்தின் மனிதநேய அமைப்பாகும். இவ் அமைப்பின் நோக்கம் யாதெனில் அவசர நிவாரணம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றில் கவனஞ்செலுத்தி ஆசிய நாடுகளில் வாழுகின்ற மக்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்தல் மற்றும் மக்களிடையே நல்லுறைவைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கு உதவுவதே ஆகும்.

இவ்வாணைக்குழு சிங்கப்பூர் அரசின் ஒத்துழைப்புடன் இலங்கையின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி துறையில் கடமையாற்றும் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதன் பின்பு இலங்கையிலேயை இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இது தொடர்பாக இலங்கை மற்றும் சிங்கப்பூர் அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 120 பயிற்றுவிப்பாளர்களை குழுக்களாக பயிற்றுவிப்பதலும் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய, வெற்றிகரமாக பயிற்சியை நிறைவுசெய்த பயிற்றுவிப்பாளர்கள் தாம் பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் துறையிலுள்ள மற்றைய பயிற்றுவிப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான முறையியலொன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் அதிகளவான பயிற்றுவிப்பாளர்களுக்கு தொழிற் பயிற்சி தொடர்பான பயிற்சியை வழங்குவதற்கான சந்தர்ப்பம் எழுந்துள்ளது.

சிங்கப்பூரில் தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பக் கல்விச் சேவைகள் நிறுவகம் (ITEES) இவ்விதமாக ஆரம்பத்தில் ஒரு குழுவிற்காக 30 பேர் சேர்க்கப்பட்டனர். அதன் பின்னர் 03 குழுக்களுக்கு 90 பேர் சேர்க்கப்பட்டு படிப்படியாக குழுக்களாக 600 பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டத்திற்காக வளவாளர்களை தேர்ந்தெடுக்கும் அலுவல்களை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவும் மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சும் மேற்கொண்டன. பயிற்சிக்கு வழிகாட்டுவதற்காக ஆரம்பத்தில் பல்வேறு துறைகளுக்கும் 3-5 இற்கிடைப்பட்ட நாட்களுக்கு பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சி நிறைவிலே பங்குபற்றியவர்கள் பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் தங்களது நிறுவனத்தின் பயிற்சியை திட்டமிடுவதற்கும் நடாத்துவதற்கும் சிங்கப்பூர் தொழில்நுட்பக் கல்விச் சேவைகள் நிறுவகத்திடமிருந்து (ITEES) பெறப்பட்ட சேவைகளும் அனுபமும் பிரயோசனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டில் மேற்கூரிய பயிற்சியின் இரண்டு சுற்றுகளை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவும் மற்றும் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் என்பன கூட்டாக இணைந்து நடாத்தின.

## 10.0 விசேட வேலைத்திட்டங்கள்

### 10.1 பயிற்சி நிறுவகங்களின் நடப்பு நிலைமையை ஆராய்தல்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கமைய அமைச்சின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவகங்களுக்கு உரித்தான பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் பயிற்சி நெறிகள் தொடர்பாக ஆராயப்பட்டன. இரண்டு மாதங்களுக்குள் சகல பயிற்சி நிலையங்களுக்கும் இவ்வாணைக்குழு அலுவலர்கள் அனுப்பப்பட்டு அந்நிலையங்களின் பயிற்சி நிலைமை ஆராயப்பட்டது. இந்நிலையங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர், அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர்கள் மற்றும் நிறுவகத் தலைவர்கள் பங்குபற்றிய கூட்டத்தின் முன்வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் பயிற்சி நிலையங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன். இவ் ஆராய்வு பயிற்சி நிலையங்களில் பயிற்சி மற்றும் நிர்வாக அலுவல்களை மேம்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளது.

### 10.2 தேசிய திறன்கள் போட்டி

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெரும அவர்களின் அறிவுறுத்தல்களுக்கமையவும் மற்றும் அமைச்சின் வழிகாட்டுதலுக்கமையவும் பதினாறு (16) தொழில்களுக்கான தேசிய திறன்கள் போட்டி முதன்முறையாக நடாத்தப்பட்டது. 18-35 வயதிற்குட்பட்ட NVQ சான்றிதழ் பெற்ற அல்லது இவ்வாணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிலையங்களில் பாடநெறிகளைப் பின்பற்றிய இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் இப்போட்டி நடாத்தப்பட்டது. இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட “எதிர்காலத்தைக் காண்போம்” திறன்கள், புத்தாக்க மற்றம் கல்விக் கண்காட்சிக்கு இணையாக இப்போட்டியில் பதினாறு (16) தொழில்களிலும் வெற்றியீட்டியவர்களுக்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.250,000/=, ரூ.150,000/=, ரூ.100,000/= ரொக்கப்பரிசுகளாக விருதளிக்கப்பட்டன. வெற்றியீட்டியவர்களுக்கான கேடயங்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் அலரிமாரிகையிலே வழங்கப்பட்டது.

இப்போட்டியின் மூலம் வெற்றியீட்டியவர்களுக்கு உயர் அங்கீகாரம் கிடைப்பதுடன், அவ் அங்கீகரிப்பால் தொழிற் பயிற்சியின் மதிப்பும் விருத்தியடைந்துள்ளது. அத்தோடு, தொழிற் பயிற்சியின் மூலம் தொழிற்திறனைப் பெற்றுக்கொண்ட வினைஞர்களுக்கு இப்போட்டியினூடாக சமூகத்தில் பிரபலமானவர்களாக வலம்வருவதற்கு வாய்ப்பும் உள்ளது.

### 10.3 தேசிய தொழிற்திறன் அபிவிருத்தித் திட்டத்திற்காக இவ்வாணைக்குழுவின் பங்களிப்பு

நிதி அமைச்சின் செயலாளர் அவர்களினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் தேசிய தொழிற்திறன் அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அவர்களால் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும் மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் திட்டத்தை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அதற்கமைய, தேசிய தொழிற்திறன் திட்டத்தைத் தயாரிப்பதற்காக இவ்வாணைக்குழுவால் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு உயரிய பங்களிப்பு வழங்கப்பட்டது.

### 10.4 பல்கலைக்கழகக் கல்லூரிகள் தாபித்தல் செயற்திட்டத்திற்கு பங்களிப்பு

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 25 பல்கலைக்கழக்க் கல்லூரிகளை தாபிப்பதற்கான செயற்திட்டத்தில் தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்களை அபிவிருத்திசெய்வதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்தல் மற்றும் தரத்தன்மையை உறுதிப்படுத்தல் ஆகியவற்றிற்காக இவ்வாணைக்குழு அலுவலர்கள் தம்மாலான உயரிய பங்களிப்பினை வழங்கினர். பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு அவசியமான

26 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் என்பவை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு, தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவகங்களால் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், அவற்றுள் எட்டு (08) தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் இவ்வாணைக்குழுவால் அபிவிருத்தி செய்யப்பட்டன. பல்கலைக்கழகக் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்படவுள்ள பாடநெறிகளுக்கு அவசியமன உபகரணங்களின் பட்டியல், உபகரணங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் வரியறைகள் என்பனவும் இவ்வாணைக்குழுவின் அலுவலர்களினால் மற்றைய நிறுவகங்களின் சிரேஷ்ட அலுவலர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்டன. அதன் பிரகாரம், 31 பாடநெறிகளுக்கான உபகரணப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக செயற்திட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றிற்காக தேவைப்படும் ஆவணங்களைத் தயாரிப்பதற்கும் இவ்வாணைக்குழு பங்களிப்பை வழங்கியது.

**10.5 பாடசாலைகளில் கற்பிக்கப்படும் தொழில்நுட்பவியல் பாடங்கள் அபிவிருத்திக்கான பங்களிப்பு**


பாடசாலையில் கற்பிக்கப்படும் தொழில்நுட்பவியல் பாடத்தை கற்பிப்பதற்குத் தேவையான பாடவிதானங்களைத் தயாரித்தல், புதிய தொழில்நுட்பவியல் ஆசிரியர்களை நியமித்தல் உள்ளடங்கலாக பல்வேறு காரியங்களுக்கு இவ்வாணைக்குழுவின் அலுவலர்களின் பங்களிப்பு வழங்கப்பட்டது. இதற்கு முன் நடாத்தப்பட்ட தொழில்நுட்பவியல் பாடநெறிகளைப் பின்பற்றிய மாணவர் குழுவொன்றிற்கு பயிலுநர் பயிற்சியைப் பெற்றுக்கொடுப்பதற்கு இவ்வாணைக்குழு தனது பங்களிப்பை வழங்கியது.

**10.6 பாடசாலைக் கல்வியின்போது NVQ சான்றிதழை விருதளிப்பதற்கான வசதிகளை செய்துகொடுத்தல்**

பாடசாலை மாணவர்களுக்காக கணினி பிரயோக உதவியாளர் பாடநெறிக்கான தேர்ச்சிசார் கணிப்பீட்டை நடாத்தி NVQ மட்டம் 02 மற்றும் 03 சான்றிதழ்களை விருதளிப்பதன் நிமித்தம் இவ்வாணைக்குழுவின் ஒத்துழைப்புடன் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி கைச்சாத்திட்டது.

பாடசாலைகளில் தற்போது நடாத்தப்படும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளை அங்கீகரித்து முறையான கணிப்பீட்டினூடாக NVQ சான்றிதழ் விருதளிப்பதற்கான தகுதி தொடர்பாக இவ்வாணைக்குழு மேற்பார்வை செய்து வருவதுடன் க.பொ.த சாதாரண தர மற்றும் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்காக தகவல் தொழில்நுட்ப பாடநெறியைப் பின்பற்றுகின்ற மாணவர்களுக்காக NVQ சான்றிதழ் விருதளிப்பதற்கு தேவையான கணிப்புகளை நடாத்துவதற்கு இவ்வாணைக்குழு திட்டமிட்டுள்ளது. இங்கு பாடநெறி உரித்துச்சான்றளிக்கை மற்றும் NVQ கணிப்பீடு தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியுதுடன் கணிப்பீட்டை நடாத்துவதற்காக பாடசாலை ஆசிரியர்கள் கணிப்பீட்டாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டனர்



**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

**2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2013 (ரூ.) | 2012 (ரூ.) | 2011 (ரூ.) |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| திறைசேரி மானியம் | 01 | 60,831,121 | 57,985,658 | 73,063,385 |
| செயற்திட்ட மானியம் | 02 | 11,170,987 | 8,054,613 | 3,488,544 |
| தொழிற்படு வருமானம் | 03 | 4,967,181 | 4,270,572 | 3,469,182 |
| மானியம் மீள்ளிப்பு | | 401,908 | 224,617 | 280,968 |
| தொழிற்பாடற்ற வருமானம் | 04 | 126,610 | 99,790 | 20,808 |
| | | 77,497,807 | 70,635,250 | 80,322,887 |
| பதவியணிக் கடன் வட்டி மற்றும் ஏனைய வட்டி | 05 | 408,668 | 242,444 | 208,929 |
| அகற்றிய சொத்துக்களின் இலாபம் | | | | |
| | | **77,906,475** | **70,877,694** | **80,531,816** |
| பிற்போடப்பட்ட வருமானம் | | 11,135,232 | 12,333,184 | 5,261,473 |
| | | **89,041,707** | **83,210,878** | **85,793,289** |
| **செலவு** | | | | |
| பணிப்பாளர் சபை மற்றும் அவதானிப்பாளர்களின் கொடுப்பனவு | 06 | 489,068 | 584,793 | 415,648 |
| ஆளுக்குரிய ஊதியங்கள் | 07 | 32,910,021 | 29,601,196 | 24,537,957 |
| பிரயாணச் செலவு | 08 | 738,843 | 855,484 | 651,940 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள் | 09 | 6,526,279 | 5,535,425 | 4,025,722 |
| பராமரிப்புச் செலவு | 10 | 3,044,833 | 2,998,041 | 1,722,416 |
| புனரமைப்புச் செலவு | 11 | 919,215 | 1,942,699 | 1,855,908 |
| ஒப்பந்த சேவைகள் | 12 | 7,591,039 | 6,434,387 | 6,902,099 |
| தொழிற்படு செலவு | 13 | 17,745,335 | 13,375,560 | 35,547,196 |
| | | 69,964,633 | 61,327,585 | 75,658,888 |
| செயற்திட்ட செலவு | 14 | 11,170,987 | 8,054,613 | 3,297,126 |
| | | 81,135,620 | 69,382,198 | 78,956,014 |
| பெறுமானத் தேய்வு | | 11,135,232 | 12,333,184 | 5,261,473 |
| | | 92,270,852 | 81,715,382 | 84,217,486 |
| **அளிப்பின் முன்னரான தேறிய மேலதிகம்/ (போதாமை)** | | (3,229,145) | 1,495,496 | 1,575,803 |
| **வருடத்திற்கான அளிப்பு** | | | | |
| பணிக்கொடை அளிப்பு | | 1,617,239 | 1,440,279 | 1,176,759 |
| | | 93,888,091 | 83,155,661 | 85,394,245 |
| **அளிப்பின் பின்னரான தேறிய மேலதிகம்/ (போதாமை)** | | **(4,846,384)** | **55,217** | **399,044** |

ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

**ஏ.எஸ். அமரசிங்க**
பிரதிப் பணிப்பாளர்

**முனைவர். எஸ். டீ. ஆர். பெரேரா**
பணிப்பாளர் நாயகம்

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு**

**2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று**

| விளக்கம் | குறிப்பு | 2013 (ரூ.) | 2012 (ரூ.) | 2011 (ரூ.) |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 15 | 35,248,338 | 43,715,697 | 18,343,062 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| கடன்கொடுத்தோர் | 16 | 7,003,285 | 6,883,527 | 5,451,372 |
| பெறுகைகளும் வைப்புகளும் | 17 | 5,163,697 | 1,996,281 | 783,529 |
| இருப்பு | 18 | 184,201 | 493,539 | 654,890 |
| காசும் காசு நிகர்த்தவையும் | 19 | 7,530,907 | 6,934,823 | 8,911,362 |
| | | **19,882,090** | **16,308,170** | **15,801,152** |
| **மொத்த சொத்துக்கள்** | | **55,130,428** | **60,023,867** | **34,144,214** |
| **தேறுமதி மற்றும் பொறுப்புக்கள்** | | | | |
| **தேறுமதி** | | | | |
| திரட்டு நிதியம் | | 175,452 | 175,452 | 175,452 |
| மாற்ற ஒதுக்கம் | 20 | (1,484,629) | 3,862,963 | 5,672,262 |
| | | (1,309,177) | 4,038,415 | 5,847,714 |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 21 | 35,248,338 | 43,715,697 | 18,343,062 |
| பணிக்கொடை அளிப்பு அட்டவணை 01 | | 7,671,980 | 6,557,426 | 5,479,389 |
| | | 42,920,318 | 50,273,123 | 23,822,451 |
| | | 41,611,141 | 54,311,538 | 29,670,165 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| கடன்கொடுத்தோர் | 22 | 5,594,810 | 2,098,032 | 2,144,372 |
| மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள் மற்றும் செலுத்துகைகள் | 23 | 7,924,477 | 3,614,297 | 2,329,677 |
| | | 13,519,287 | 5,712,329 | 4,474,049 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **55,130,428** | **60,023,867** | **34,144,214** |

ஆணைக்குழுவிற்காகவும் அதன் சார்பிலும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

**ஏ.எஸ். அமரசிங்க**

பிரதிப் பணிப்பாளர்

**முனைவர். எஸ். டீ. ஆர். பெரேரா**

பணிப்பாளர் நாயகம்

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

### 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேறுமதியில் மாற்றங்கள்

| | திரட்டு நிதியம் ரூ. | மாற்ற ஒதுக்கம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|
| 01.01.2011 இல் இருந்த மீதி | 175,452 | 5,274,685 | 5,450,137 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | 399,044 | 399,044 |
| முன்னைய வருடத்தில் திருத்தம் | | (1,467) | (1,467) |
| 01.01.2012 இல் இருந்த மீதி | 175,452 | 5,672,262 | 5,847,714 |
| பொதுத் திறைசேரிக்கு மாற்றம் | | (1,500,000) | (1,500,000) |
| முன்னைய வருடத்தில் திருத்தம் | | (364,519) | (364,519) |
| ஆரம்ப மீதி வித்தியாசம் | | 3 | 3 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | 55,217 | 55,217 |
| 01.01.2013 இல் இருந்த மீதி | 175,452 | 3,862,963 | 4,038,415 |
| முன்னைய வருடத்தில் திருத்தம் | | (513,177) | (513,177) |
| நிலையான வைப்பு வட்டியில் திருத்தம் | | 11,967 | 11,967 |
| ஆரம்ப மீதி வித்தியாசம் | | 2 | 2 |
| வருடத்திற்குரிய மேலதிகம்/ (போதாமை) | | (4,846,384) | (4,846,384) |
| 31.12.2013 இல் இருந்த மீதி | **175,452** | **(1,484,629)** | **(1,309,177)** |

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

## 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2013 (ரூ.) | 2012 (ரூ.) | 2011 (ரூ.) |
|---|---|---|---|
| **வருடத்திற்கான தேறிய தொழிற்படு மேலதிகம்/(போதாமை)** | | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்து மேலதிகம்/ (போதாமை) | (4,846,384) | 55,217 | 399,044 |
| நிலையான சொத்து நீக்கலின் இலாபம் | | | |
| **காசற்ற இயக்கங்களில் திருத்தம்** | | | |
| முன்னைய வருடத்தில் திருத்தம் | (513,177) | (364,519) | (1,467) |
| பெறுமானத்தேய்வு | 11,135,232 | 12,333,184 | 5,261,473 |
| ஆரம்ப மீதி மாற்றம் | 11,966 | 3 | |
| பணிக்கொடை அளிப்பு | 1,617,239 | 1,440,279 | 1,176,759 |
| பிற்போடப்பட்ட வருமானம் | (8,467,359) | 25,372,633 | 1,205,566 |
| | (1,062,483) | **38,836,797** | **6,222,614** |
| வட்டி வருமானம் | 408,668 | 242,444 | 208,929 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 502,685 | 362,242 | |
| **நடப்பு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்படு மேலதிகம்/ (போதாமை)** | **(1,973,836)** | **38,232,111** | **6,013,685** |
| கடன்பட்டோரில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | (119,758) | (1,432,154) | (609,908) |
| வைப்புகள் மற்றும் பெறுகைகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி | (3,167,416) | (1,212,752) | 194,182 |
| கையிருப்பில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | 309,338 | 161,351 | (545,182) |
| கடன்கொடுத்தோரில் அதிகரிப்பு/ வீழ்ச்சி | 3,496,778 | (46,340) | 402,238 |
| மீளச்செலுத்தக்கூடிய வைப்புகள் மற்றும் செலுத்துகைகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி | 4,310,180 | 1,284,620 | (1,344,044) |
| | 4,829,122 | (1,245,275) | (1,902,714) |
| வட்டி வருமானம் | 408,668 | 242,444 | 208,929 |
| **தொழிற்படு நடவடிக்கைகளால் தேறிய காசு** | 3,263,954 | 37,229,280 | 4,319,900 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொள்வனவு | (2,869,579) | (38,597,238) | (4,662,299) |
| நிலையான சொத்துக்களின் தேறிய நீக்க பெறுமதி | 201,709 | 891,419 | 14,020 |
| ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதிகளிலிருந்தான விற்பனை வருமானம் | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு/ (பயன்படுத்திய)** | (2,667,870) | (37,705,819) | (4,648,279) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| திரட்டு நிதியம் | | | |
| மாற்றங்கள் (பொதுத் திறைசேரிக்கு மாற்றம்) | | (1,500,000) | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு/ (பயன்படுத்திய)** | | (1,500,000) | |
| காசும் காசு நிகர்த்தவையில் தேறி அதிகரிப்பு/ வீழ்ச்சி | 596,084 | (1,976,539) | (328,378) |
| வருட ஆரம்பத்தில் காசும் காசு நிகர்த்தவையும் | 6,934,823 | 8,911,362 | 9,239,740 |
| **வருட முடிவில் தேறிய காசும் காசு நிகர்த்தவையும்** | 7,530,907 | 6,934,823 | 8,911,362 |
| **காசுப் பாய்ச்சல் கூற்றிற்கான குறிப்புகள்** | | | |
| **வருட முடிவில் காசும் காசு நிகர்த்தவையும்** | | | |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-722-66044 | 732,459 | 2,032,822 | 4,212,388 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-122-68324 | 2,855,870 | 3,712,026 | 4,420,768 |
| மக்கள் வங்கி Y.M.B.A.கிளை A/c No-078-1001-422-66050 | 494,172 | 389,975 | 278,206 |
| அழைப்பு வைப்பு | 3,448,406 | 800,000 | - |
| | **7,530,907** | **6,934,823** | **8,911,362** |

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

1. பெறுமானத்தேய்வுமுறையானது நேர்கோடுமுறையிலிருந்து பெறுமதிகுறைப்பு மீதிமுறைக்கு 2008 ஆம்ஆண்டிலிருந்து மாற்றப்பட்டது.

2. 2007ஆம் ஆண்டில் பூச்சியமதிப்பு காட்டப்பட்டிருந்த சொத்துக்கள்2008 ஆம் ஆண்டில் மீள்மதிப்புச் செய்யப்பட்டது.

3. உள்பொருளின் பயன்பாடு மற்றும் தன்மை என்பவற்றின் பிரகாரம் சொத்துக்களின் வகுப்பு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4. வருட முடிவில் மாணவர் பதிவுப் புத்தகங்களின் செலவு நிதிக்கூற்றுக்களில் கையிருப்பாக காட்டப்பட்டுள்ளது .

5. மீளாய்வாண்டில் )2013) பணிக்கொடை அளிப்பிற்கு முன்னரான நிதிப் பற்றாக்குறை ரூ.3,229,145 ஆகும் இதற்கான பிரதான காரணங்கள் யாதெனில் .201 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட அரச துறை மானிய முற்பணம் நடப்பு வருடத்தில் செலவாக கட்டணப்படுத்தப்பட்டதுடன் அதே வருடத்தில் அட்டுறு செலவுகளுக்கான ஏற்பாடாகவும் காட்டப்பட்டது .

**எதேச்சையான பொறுப்புக்கள்**

திருஅமர்த்துமாறு தொழில் சுரங்க தம்மிக அவர்கள் தம்மை மீளவும் தொழிலில் .டப்.டி. நியாயசபையில் வழக்கு தொடுத்துள்ளார்தீர்ப்பு அவருக்கு சாதமாக . .வழங்கப்படுமெனில் நிதிசார்பொறுப்புக்கள் இவ்வாணைக்குழுவிற்கு எழலாம்

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

**01. பொது**

1.1 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கணக்கீடு அடிப்படைகள், வரலாற்று கணக்கீடு அடிப்படைகளுக்கமையவும், தவிர 2003, 2008 இல் குறிப்பிட்ட பொறிகள், உபகரணங்கள் என்பவற்றிற்கான மறுமதிப்பு செய்யப்பட்டும் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கணக்கீடு நியமங்களுக்கமையவும் தயாரிக்கப்பட்டதுறுகள் இலங்கை ரூபாயில் நிதிக்கூற் . தயாரிக்கப்பட்டுள்ளது.

1.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்
வெளிநாட்டுச்செலவாணியுடன் தொர்புபட்ட சகலவிதமான கொடுக்கல்வாங்கல்களும் அக்கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்கின்ற சந்தர்ப்பத்தில் உள்ள நாணய மாற்றுவீத அடிப்படையில் கணக்கீடு இலங்கை ரூபாயில் நடைமுறைப்படுத்தப்படும்.

1.3 ஐந்தொகைத் தினத்தின் பின் நடைபெறும் நிகழ்வுகள்
ஐந்தொகைத் தினத்தின் பின் நடைபெறும் சகல மூலப்பொருள் நிகழ்வுகளும் நிதிக்கூற்றுகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

1.4 ஒத்துப்பார்க்கக்கூடிய தகவல்கள்

தேவையான ஒத்துப்பார்க்கக்கூடிய கணக்குகள் நடப்புவருடத்தின் கணக்குகளை உறுதிப்படுத்துவதற்காக மீள்வகுக்கப்பட்டன.

**02. சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு நடவடிக்கைகளும்**

2.1 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பவை ஆகுசெலவிலிருந்து சேர்ந்த பெறுமாத்தேய்வு குறைக்கப்பட்டு பதியப்பட்டுள்ளன.

2.2சகலசொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பனவற்றிற்கு பெறுமானத் தேய்வு அறவிடப்பட்டுள்ளது.

2.3 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கள் கொள்வனவு செய்த வருடத்திற்கான முழுவருட பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டதுடன் அவை அப்புறப்படுத்தும் வருடத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படவில்லை .2008 ஆம் ஆண்டிலிருந்து பெறுமானத்தேய்வு கொள்வனவு செய்யப்பட்டதிகதிஅப்புறப்படுத்தப்பட்ட திகதி என்பதன் அடிப்படையில் / றதுகணிப்பிடப்படுகி

**03. கணக்கீட்டுக் கொள்கையில் மாற்றம்**

3.1 பெறுமானத்தேய்வு முறையில் நேர்கோடு முறைகைவிடப்பட்டு பெறுமதிகுறைப்பு மீதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுசொத்துக்களின் முன்கொண்டுவரப்பட்ட . .மிகுதிகளின் திருத்தங்கள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டன

3.2 சொத்துக்கள், பெறுமானத்தேய்வு வீதங்கள் 2008 ஆம் ஆண்டில் மீள்வகுக்கப்பட்டன . :சொத்துகளும் அவற்றிற்குரிய பெறுமானத்தேய்வு வீதங்களும் பின்வருமாறு

| சொத்துக்கள் வீதம் | (வருடத்திற்கு) |
|---|---|
| 1. வாகனங்கள் | 25% |
| 2. தளபாடங்கள், பொருத்தல்கள் | 10% |
| 3. அலுவலகஉபகரணங்கள் | 25% |
| 4. கணினிகள், பாகங்கள் | 33% |
| 5. கணினிஅச்சுப்பொறிகள் | 33% |
| 6. ஆதனம், பொறித்தொகுதி | 25% |
| 7. பெயர்ப்பலகை | 25% |

**04. வியாபாரக் கடன்களும் கிடைக்கப்பெற வேண்டியவைகளும்**

4.1 கடன்களும் கிடைக்கப்பெற வேண்டியவைகளும் அவற்றின் மாற்றத்தகு பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4.2 காசும் காசு நிகர்த்தவைகளும்
காசும் காசு நிகர்த்தவைகளும் வங்கியிலுள்ள காசாக விளக்கப்படும்.

**05. கடன்பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

சகல அறிந்தகடன் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக கணக்கிடப்பட்டுள்ளன.

5.1 ஓய்வுபெறல், பயன்செலவுகள்

5.1.1 வரைவிலக்கணங்களுக்கு செய்யப்பட்ட பங்களிப்புத்திட்டம் – ஊநி.சே., ஊநி.ந. எல்லாஊழியர்களும்ஊழியர்சேமலாபநிதியம், ஊழியர்நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கு தகுதியடையவர்கள்

5.1.2 ஓய்வூதியப்பணிக்கொடை

1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டம் மற்றும் 16 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு தரத்திற்கமைய எல்லா ஊழியர்களும் இவ்வாணைக்குழுவில் தொடர்ச்சியாக ஒருவருடத்திற்கு மேல் பூர்த்தி செய்வரெனில் ஓய்வூதியப் பணிக்கொடைக்கு உட்படுவர் .

5.2 மானியங்களுக்கான கணக்கீடு

திறைசேரி மற்றும் வெளிநாட்டு செயற்திட்டத்திலிருந்து பெறப்பட்ட மூலதனமானியங்களோடு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் பிற்போடப்பட்ட வருமானமாக உபசரிக்கப்படும்சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் . கீகரிக்கப்படுமஇம்ம்மானியம் வருமானமாக அங்ீ.

5.3 மூலதனப் பொறுப்புக்களும்,எதேச்சையான பொறுப்புக்களும்

எல்லா பொறுப்புள்ள பொருட்களும் மற்றும் எதேச்சையான பொறுப்புக்களும் கருத்திற் கொள்ளப்பட்டு அவற்றிற்குரிய தேவையான திருத்தங்கள் நிதிநிலைமைக் கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

**06. நிதிச் செயலாண்மை**

| M.D.C. த சில்வா | ………………………………………………………………… | 132,300 |
| சம்பிக்க ஜகத் குமார | ………………………………………………………………… | 99,546 |
| A.S.அமரசிங்க | ………………………………………………………………… | 241,628 |
| P.P.P.நாணயக்கார | ………………………………………………………………… | 174,972 |
| M.விதாணபத்திரன | ………………………………………………………………… | 179,357 |
| K.T.அரசிங்க | ………………………………………………………………… | 120,328 |
| G.D.N.M.பெரேரா | ………………………………………………………………… | 143,640 |

| | | |
|---|---|---|
| D.K.W.S.மங்கள | ......................................................................................... | 4,198 |
| R.J.சமரவீர | ......................................................................................... | 208,300 |
| அநுர வீரக்கோன் | ......................................................................................... | 87,486 |
| D.W.N.குணசிரி | ......................................................................................... | 103,193 |
| P.G.ஆனந்த | ......................................................................................... | 1,297 |
| T.செந்தூரன் | ......................................................................................... | 70,822 |
| சுமிந்த அருணகீர்த்தி | ......................................................................................... | 81,939 |
| J.A.D.J.ஜயலத் | ......................................................................................... | 95,818 |
| D.B.R.மஞ்சுளா | ......................................................................................... | 79,456 |
| G.K.ஹேகொடஆராச்சி | ......................................................................................... | 29,813 |
| V.பெரேரா | ......................................................................................... | 104,150 |
| G.G.சமன் குமார | ......................................................................................... | 130,684 |
| W.J.L.A.தமயந்தி | ......................................................................................... | 112,482 |
| U.A.P.தர்மசேன | ......................................................................................... | 115,440 |
| G.A.M.U.கனேபொல | ......................................................................................... | 179,138 |
| N.D.விஜேசேகர | ......................................................................................... | 85,618 |
| S.S.கல்பகே | ......................................................................................... | 72,722 |
| P.C.P.ஜயதிலக்க | ......................................................................................... | 229,130 |
| J.சிறிபால | ......................................................................................... | 122,642 |
| M.L.N.S. எதிரிசூரிய | ......................................................................................... | 137,478 |
| | | **5,340,316** |

## மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு

### நிதிசார் சிறப்பம்சங்கள்


| வகை/நோக்கின் தலைப்பு<br>மூலதனச் செலவு | மதிப்பீடு<br><br>ரூ..'000 | மீள் மதிப்பீடு<br>ரூ.'000 | உண்மையான செலவு<br>ரூ.'000 | சதவீதம்<br>% |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள் - கொள்வனவு** | | | | |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 240 | 500 | 511 | **102** |
| ஆதனம் மற்றும் இயந்திரம் | 240 | 1,578 | 1,101 | **70** |
| நூலக புத்தகங்கள் | 40 | 40 | 42 | **105** |
| | 520 | 2,118 | 1,654 | **78** |
| **புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | | | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 80 | 670 | 334 | **50** |
| ஆதனம் மற்றும் இயந்திரம் | 100 | 100 | 13 | **13** |
| வாகனங்கள் | | 600 | 571 | **95** |
| | 180 | 1,370 | 918 | **67** |
| **அபிவிருத்தி மூலதனச் செலவுகள்** | | | | |
| V.E.T திட்ட செயலாக்கம் | 900 | 888 | 1,572 | **177** |
| தேசிய தேர்ச்சி தரங்கள் நாளதுவரையாக்கம் | 2,250 | 1,649 | 1,656 | **100** |
| தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவி | 3,500 | 2,706 | 2,702 | **100** |
| ஆராய்ச்சிகளை நடாத்துதல் | 1,000 | 1,294 | 1,185 | **92** |
| ஏதுநிலைக்குட்பட்டவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக நிதியுதவி வழங்குதல் | 750 | 580 | | **-** |
| மாகாண VET திட்டங்கள் அபிவிருத்தி | 4,000 | 2,900 | 2,813 | **97** |
| MIS மென்பாகத்தை தரமுயர்த்தல் | 650 | 1,005 | 999 | **99** |
| தேசத்திற்கு மகுடம் | 300 | | | |
| GPS | 300 | 45 | | |
| வன்பாகம் | 650 | 445 | 216 | **49** |
| | 14,300 | 11,512 | 11,143 | |
| **மொத்த மூலதனச் செலவு** | **15,000** | **15,000** | **13,715** | **91** |
| **மீள்வருஞ் செலவு** | | | | |
| சம்பளமும் கூலியும | 24000 | 26,308 | 26,489 | **101** |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புச் செலவு | 2880 | 3,277 | 3,019 | **92** |
| ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புச் செலவு | 720 | 814 | 755 | **93** |
| மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 750 | 985 | 888 | **90** |
| பயிலுநர்களுக்கான கொடுப்பனவு | 1000 | 1,088 | 1,159 | **107** |
| தலைவருக்கான கொடுப்பனவு | 600 | 600 | 600 | **100** |
| பணிக்கொடை | | 231 | 503 | **218** |
| | 29,950 | 33,303 | 33,413 | **100** |
| **பிரயாணச் செலவு** | | | | |
| உள்ளூர் | 350 | 390 | 320 | **82** |
| வெளியூர் | 400 | 450 | 419 | **93** |
| | 750 | 840 | 739 | **88** |


| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப் பொருட்களும் | | | | |
|---|---|---|---|---|
| அச்சடிப்பு, காகிதாதி மற்றும் அலுவலக தேவைகள் | 2300 | 2928 | 2,988 | **102** |
| எரிபொருட் செலவு | 2300 | 2715 | 2,933 | **108** |
| போக்குவரத்துச் செலவு | 17 | 10 | 3 | **30** |
| சீருடை | 125 | 80 | 80 | **100** |
| புதினப்பத்திரிகை மற்றும் சஞ்சிகைச் செலவு | 80 | 93 | 93 | **100** |
| ஏனைய சேவைச் செலவு | 150 | 225 | 226 | **100** |
| உபசரிப்புச் செலவு | 150 | 189 | 189 | **100** |
| பிரதிபண்ணி கொடுப்பனவு | 10 | 13 | 13 | **100** |
| | **5132** | **6253** | **6,525** | **104** |

| வகை/நோக்கின் தலைப்பு<br>மூலதனச் செலவு | மதிப்பீடு<br>ரூ..'000 | மீள் மதிப்பீடு<br>ரூ.'000 | உண்மையான செலவு<br>ரூ.'000 | சதவீதம்<br>% |
|---|---|---|---|---|
| **பராமரிப்புச் செலவு** | | | | |
| வாகன பராமரிப்பு மற்றும் காப்புறுதி | 1,350 | 2,335 | 2,330 | **100** |
| ஆதனம் மற்றும் இயந்திரம் | 125 | 225 | 233 | **104** |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | 70 | 110 | 118 | **107** |
| கணினி பராமரிப்பு | 250 | 200 | 173 | **87** |
| எந்திர மற்றும் மின்னணுப் பொருட்கள் | 20 | 100 | 65 | **65** |
| பொதுப் பராமரிப்பு | 50 | 125 | 126 | **101** |
| | **1,865** | **3,095** | **3,045** | **98** |
| **ஒப்பந்த சேவைகள்** | | | | |
| தொலைத்தொடர்பு | 1400 | 1570 | 1,569 | **100** |
| தபாற் கட்டணங்கள் | 150 | 122 | 131 | **107** |
| மின்கட்டணம் | 2850 | 3000 | 2,728 | **91** |
| குடிநீர் | 150 | 230 | 154 | **67** |
| வரிகள், வீதங்கள் மற்றும் வாடகை | 150 | 128 | 127 | **99** |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 643 | 819 | 819 | **100** |
| சுத்திகரிப்புச் செலவு | 575 | 750 | 750 | **100** |
| கணக்காய்வுக் கட்டணங்கள் * | 75 | 225 | 225 | **100** |
| சட்டஞ்சார் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் | 50 | 40 | 45 | **113** |
| பருவவெளியீடுகளுக்கான சந்தா | 30 | 30 | 27 | **90** |
| சந்தா மற்றும் அங்கத்துவக் கட்டணங்கள்<br>- உள்ளூர் மற்றும் வெளியூர் | 70 | 70 | 52 | **74** |
| பதவியணிப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி | 350 | 350 | 183 | **52** |
| பணக் கடப்பு காப்புறுதி | 15 | 14 | 14 | **100** |
| ஒப்பந்த உடன்படிக்கைகள் | 300 | 760 | 766 | **101** |
| | **6,808** | **8,108** | **7,590** | **94** |
| **தொழிற்படு செலவு** | | | | |
| நிறுவன பதிவுச் செலவு | 800 | 1000 | 666 | **67** |
| பாடநெறி உரித்துச்சான்றளிக்கைச் செலவு | 1750 | 1750 | 1,686 | **96** |
| NVQ நிகழ்ச்சித்திட்ட செலவு | 2900 | 1702 | 1,321 | **78** |
| VET திட்ட தயாரிப்புச் செலவு | 1700 | 1470 | 1,470 | **100** |
| LMI செலவு | 2500 | 1884 | 1,652 | **88** |
| தர முகாமைத்துவ முறைமை தாபிப்புச் செலவு | 250 | 30 | 5 | **17** |
| நிதியுதவி கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புச் | 90 | 228 | 238 | **104** |


| | | | | |
|---|---|---|---|---|
| செலவு | | | | |
| மாகாண VET திட்ட ஒருங்கிணைப்புச் செலவு | 75 | | | |
| கொள்கை ஆவணங்கள் தயாரிப்பு | 80 | | | |
| தேசத்திற்கு மகுடம் | 500 | 704 | 704 | **100** |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 60 | 78 | 78 | **100** |
| கௌரவக் கொடுப்பனவு ( சபை அங்கத்தவர்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு) | 675 | 512 | 489 | **96** |
| | 11,380 | 9,358 | 8,309 | **89** |
| **மொத்த மீள்வருஞ் செலவு** | **55,885** | **60,957** | **59,621** | **98** |

| நிதிசார் சிறப்பம்சங்கள் | | | |
|---|---|---|---|
| **மீள்வரும் செலவு** | | **மூலதனச் செலவு** | |
| | **(ரூ.)** | | **(ரூ.)** |
| ஆளுக்குரிய ஊதியம் | 32,910,021 | ஆதனம், இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி கொள்வனவு | 2,869,579 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | 502,685 | ஆராய்ச்சி மற்றும் மாகாண VET திட்டம் | 3,997,981 |
| பிரயாணச் செலவு | 738,843 | புனரமைப்புச் செலவு | 919,215 |
| வழங்கல்களும் பயன்படுத்திய நுகர்வுப் பொருட்களும் | 6,526,279 | தனியார், அரச துறை மானியங்கள் மற்றும் NCS அபிவிருத்தி | 5,928,741 |
| பராமரிப்புச் செலவு | 3,044,833 | | |
| ஒப்பந்த சேவைகள் | 7,591,039 | | |
| பணிப்பாளர் சபை மற்றும் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு | 489,068 | | |
| தொழிற்படு செலவு | 7,818,613 | | |
| **மொத்தம்** | **59,621,381** | **மொத்தம்** | **13,715,516** |








| நிதிசார் சிறப்பம்சங்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அரச மற்றும் தனியார் துறை நிறுவகங்களுக்கான மானியங்கள் | | | | | | |
| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | |
| மானியங்கள் /அரச துறைக்கு முன்னதாக செலுத்தப்பட்ட தொகை | 5,565,474 | 6,938,571 | 16,988,909 | 1,446,652 | 2,252,249 | |
| தனியார் துறைக்கான மானியம் | 1,647,699 | 806,144 | 4,886,224 | 2,196,298 | 2,701,650 | |
| மானியங்கள்/ ஏதுநிலைக்குட்பட்டவர்களுக்காக முன்னதாக செலுத்தப்பட்ட தொகை | | 858,164 | 1,990,345 | 798,515 | 661,995 | |
| **மொத்தம்** (ரூ.) | **7,213,173** | **8,604,888** | **23,867,489** | **4,443,477** | **5,615,894** | |



| பாதீட்டு மதிப்பீடுகள், உண்மையான செலவு, திருப்பிப் பெறப்பட்ட மானியங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010 | | 2011 | | 2012 | | 2013 | |
| | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை | மதிப்பீடு | உண்மை |
| மீள்வரும் மானியம் | 42,200,000 | 38,523,832 | 47,370,000 | 46,571,924 | 55,073,712 | 54,761,014 | 60,957,000 | 59,621,381 |
| மூலதன மானியம் | 18,000,000 | 12,978,832 | 33,000,000 | 31,292,303 | 12,239,500 | 10,819,565 | 15,000,000 | 13,715,516 |
| திருப்பிப் பெறப்பட்ட மானியம் | | 6,865 | | 280,968 | | 224,617 | | 401,908 |
| **மொத்தம் (ரூ.)** | **60,200,000** | **51,509,529** | **80,370,000** | **78,145,195** | **67,313,212** | **65,805,196** | **75,957,000** | **73,738,805** |



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. ஜேபீ/ஈ/ரீவீஈசீ/1/13/225
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி 2015 பெப்ரவரி 09
Date

பணிப்பாளர் நாயகம்,

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி (திருத்த அதிகாரச்சட்டத்தின்) 10(ஈ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 ஆகஸ்ட் 15 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

பணிக்கொடைச் செலவினக் கணிப்பீட்டு வழுவின் காரணமாக ரூபா 142,883 தொகை அதிகரித்து ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது.

2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணனி மற்றும் உபபாகங்கள் பேரேட்டுக் கணக்கின் மீதி ரூபா 15,309,664 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் ரூபா 15,359,464 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 49,800 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.3 சட்டங்கள். விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் ரூபா 3,448,406 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 1994 ஆகஸ்ட் 3 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | ஒதுக்கப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த எஞ்சிய சகல வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.3.5(அ) பிரிவின் பிரகாரம் "சீ" தரத்திலுள்ள கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ வாகனம் தலைவர், பிரதான பதவிநிலை உத்தியோகத்தர் மற்றும் பதவிநிலைப் பணிப்பாளர்களுக்காக மாத்திரம் ஒதுக்கப்பட முடியும். இந்த ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் 05 பணிப்பாளர்களுக்கும் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்துடன் மாத்திரம் ஒதுக்கப்பட்ட வாகனங்கள் வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 1,241,100 தொகை எரிபொருள் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 3,229,145 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,495,496 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,724,641 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(அ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி கொள்கைகள், உபாயங்களை முறையாகத் தயாரித்து ஆய்வு செய்தல் மற்றும் நாளதுவரையாக்குவதற்காக 04 பிரிவுகளின் கீழ் 44 நிகழ்ச்சித் திட்டங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட அளவு 32 ஆகும். அதன் பிரகாரம் இலக்கை அடைய முடியாத நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

(ஆ) கைத்தொழில் பிரிவை அபிவிருத்தி செய்வதற்காக போக்குவரத்துப் பிரிவில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத்தைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண தொழிற்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு 02 செயலமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய தொழிற்தகைமை முறைமையினை பரவலாக்குதல் மற்றும் பேணுவதற்காக 05 பிரிவுகளின் கீழ் 748 நிகழ்ச்சித்திட்டங்களைச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக 156 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. 592 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பிரிவு, தனியார் பிரிவு மற்றும் இடர்களுக்கு உள்ளாகியவர்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 12,467,374 நிதியுதவி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போதே செலவினமாகக் கணக்கிடப்பட்டிருந்தும் உள்ளபடியாக செலவிடப்பட்டிருந்ததா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனம், ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பதிவு செய்ய வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு பதிவுசெய்து கொள்வதற்காக ஆணைக்குழுவிடம் போதியளவான வேலைத்திட்டம் காணப்படாமை.

(ii) பதிவுக்காலம் முடிவடைந்த நிறுவனங்களின் பதிவினை மீளப் புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமை.

(iii) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவனம் தொடர்பாக மேற்பார்வை செய்யாமை மற்றும் பதிவு செய்யாத 44 நிறுவனங்கள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை.

(இ) தேசிய திறன் நியமம் (NCS) தயாரிப்பதற்கு அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் தேயிலை உற்பத்தி தொழில்நுட்பம் மற்றும் அழகியல் (Cosmetology) போன்ற பாடநெறிகளுக்காக தேசிய திறன் நியமம் 2013 மே 30 ஆந் திகதிக்கு முன் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2 மாதங்களைவிடத் தாமதமாகி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 487,073 தொகை செலவிடப்பட்டு 26 செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இந்தச் செயற்பாடுகள் 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 08 மாதங்கள் எடுத்திருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,184,760 தொகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 09 ஆராய்ச்சிகள் மீளாய்வாண்டில் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஒரு ஆராய்ச்சி கைவிடப்பட்டிருந்தது. ஆராய்ச்சிப் பிரேரணைகள் சமர்ப்பிக்கும் போது நடைமுறையில் அமுல்படுத்துவதற்குரிய இயலுமை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆணைக்குழுவின் 05 உத்தியோகத்தர்கள் ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு இனங்கியிருந்த போதிலும் அவர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(iii) ஆராய்ச்சிக்காக அது தொடர்பாக திறமைகளையுடைய நிபுணர்களால் மேற்கொள்ள வேண்டுமாயினும் ஆராய்ச்சி செயற்பாடுகளில் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் பதவியணியினர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

(உ) அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்ட திறன் போட்டிகளில் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 4,127,802 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) போட்டி நடவடிக்கைகளுக்காக ஒரு நிறுவனத்திற்கு ரூபா ஒரு மில்லியன் படி நான்கு நிறுவனங்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும் முற்பணம் வழங்கப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் அந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முற்பணம் 2014 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 275,574 தொகையான எஞ்சிய பணம் ஆணைக்குழுவிற்கு மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் பொருட்கள் என்பவற்றைக் கொள்வனவின் மேற்பார்வைக்கு ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாடற்ற சொத்துக்கள்

வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 2,000,000 இற்கு அண்ணளவான மீதி ஆண்டு முழுவதும் காணப்பட்டதுடன் அந்த மீதி சில சந்தர்ப்பங்களில் ரூபா 5,000,000 வரை அதிகரித்தமையினால் நிதிசார் முகாமைத்துவத்தின் நலிவினைக் காட்டியது.

4.4 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 85 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 70 ஆனமையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 16 ஆகவும் மிகையின் எண்ணிக்கை 1 ஆகவும் இருந்தன.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் பரீட்சை மதிப்பீட்டுப் பிரிவை ஸ்தாபிப்பதற்காக 05 பதவியணியினர்களை சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களைச் சேர்த்து அப்பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 கூட்டிணைந்த திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக ஒவ்வொரு பிரிவிற்குமிடையே உப இலக்குகள் குறிப்பாகக் காண்பிக்கப்படாதிருந்ததுடன் காண்பிக்கப்பட்டுள்ள உபாய மார்க்கங்களைப் பூர்த்தி செய்யவேண்டிய காலப்பகுதி மற்றும் அதற்கான செலவினம் மற்றும் வருமானம் என்பன காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீடு திருத்தப்பட்டிருந்ததுடன் அத்திருத்தப்பட்ட பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையே 5 சதவீதம் முதல் 117 சதவீதம் வரையிலான வீச்சில் நிலவியமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் நிலவிய குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளின் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதி முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் திணைக்களம்
பத்தரமுல்லை.

**மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான விளக்கங்கள் மற்றும் விடைகள்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் சம்பந்தமாக தங்களது இல. 3P/E/TVEC/FA/12 மற்றும் 2013.05.22 திகதியிடப்பட்ட 2013.05.27 திகதி கிடைக்கப்பெற்ற அறிக்கையினூடாகத் தெரிவிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான விளக்கங்கள் மற்றும் விடைகள் ஆகியவற்றை இத்துடன் அனுப்புவதுடன் இவ்விடைகளைக் கருத்திற்கெடுத்து இறுதி அறிக்கையை அனுப்புமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

கணக்கிடல் சரியானது.

**2.2.2 விளக்கப்படுத்தப்படாத வித்தியாசங்கள்**

இதனுடன் தொடர்புடைய ஜர்னல் குறிப்பேடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

(அ) 2012.08.14 திகதியன்று அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடமும் மற்றும் 2014.03.07 திகதியன்று நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் காண்பிக்கப்பட்டதன்படி செயற்திட்டங்களுக்காக பெறப்படும் நிதித்தொகை முறையற்ற விதத்தில் பேணுவதைத் தவிர்ப்பதற்காக குறுகிய கால நிலையான வைப்புகளில் நிதி வைப்பிலிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், தங்களது அவதானிப்புக்கமைய பொதுத் திறைசேரியிடம் அனுமதி பெறுவதற்கு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) ஒதுக்கப்பட்ட வாகனங்களைத் தவிர மற்றைய வாகனங்கள் அனைத்திற்கும் அரச மற்றும் ஆணைக்குழு இலச்சினைகளுடன் மும்மொழிகளிலும் நிறுவகத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

**2.4 போதிய அதிகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்**

பணிப்பாளர்களுக்கென உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்குவதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான அனுமதி கிடைக்கும் வரையில் அமைச்சின் செயலாளர் அவர்கள் 22/99 சுற்றறிக்கைக்கு அமைய போக்குவரத்து வசதிகளுக்கான அனுமதியை வழங்கியுள்ளார். இதற்காக அரச பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் அனுமதி போதுமானதென்று 2014.03.07 திகதியன்று அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கமைய அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் கடிதம் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**3. நிதி மீளாய்வு**

2012 ஆண்டு ஒப்பிடுகையில் பொதுத் திறைசேரியிடமிருந்து பெறப்பட்டதில் 4.6% அதிகரிப்பு காணப்படுவதுடன் செலவு அதிகரிப்பு 12% ஆகக் காணப்பட்டமை ஆகியவை இதில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் காரணமாகும்.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயற்திறன்**

(அ) பாடநெறி தராதர அங்கீகாரம் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் உபகரணங்களுக்கும் பார்க்க அதிகமாக உபகரணங்கள் ஒவ்வொரு பாடநெறிக்காக தனித்தனியே வழங்கியதனால் இரண்டு (02) பாடநெறிகளுக்காகவென ஒதுக்கப்பட்ட நிதித்தொகை போதாமையின்

காரணத்தால் அவ் இரண்டு (02) பாடநெறிகளுக்கும் 2013 ஆண்டில் நிதியுதவி விருதளித்தல் கைவிடப்பட்டது.
மதிப்பிடப்பட்ட எட்டு (08) நிறுவகங்களுக்காக நிதியுதவி விருதளிக்கப்படாமைக்கான காரணங்கள் பின்வருமாறு:
இரண்டு (02) பாடநெறிகளுக்காக சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவகம் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதை எதிர்பார்த்து உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருப்பினும் அந்நிறுவகம் முறையான வகையில் கொள்வனவை மேற்கொள்ளாமையின் காரணத்தால் தற்பொழுது இந்நிறுவகத்துக்கு நிதியுதவி விருதளித்தல் கைவிடப்பட்டுள்ளது. நிதியுதவி விருதளிப்பதற்காக ஆணைக்குழுவுக்கும் நான்கு (04) நிறுவகங்களுக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னரே பாடநெறிகளை தராதர அங்கீகார நிர்ணயங்களைப் பூர்த்தி செய்தல் அடிப்படையில் நிறுவகங்கள் இணக்கத்தை தெரிவித்தன. எனினும் தராதர அங்கீகார நிர்ணயங்களைப் பூர்த்தி செய்யாததன் காரணத்தால் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவில்லை. இக்காரணத்தால் மீண்டும் ஆறு (06) பாடநெறிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக போதுமான காலம் கிடைக்கவில்லை. எனவே, மேலும் ஆறு (06) பாடநெறிகளுக்கு நிதியுதவி விருதளிக்கப்படவில்லை.
ஏழு (07) பாடநெறிகளுக்காக நிதியுதவி விருதளிக்கப்பட்டிருப்பினும் மிகுதியான ரூ.65,000/= நிதித்தொகை ஒரு பாடநெறிக்காக உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு போதாமையின் காரணத்தால் பாடநெறியொன்றிற்கு நிதியுதவி விருதளித்தல் கைவிடப்பட்டது.
ஓர் ஆராய்ச்சிக் கற்கைக்காக, அதாவது " மின்னணு ஊடகத்தைப் பயன்படுத்தி தொழிற் பயிற்சி நிலையங்களில் தரக் கணக்காய்வை நடாத்துவதற்கான இயலுமை தொடர்பான ஆராய்ச்சி" கற்கைக்கு இரண்டு (02) கட்டங்களில் செயலாக்குவதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. அதாவது தற்போது உள்ள தர முகாமைத்துவ முறைமை செயலாக்கத்தின் செயற்திறனை முதலாம் கட்டத்தின் கீழ் ஆராய்ச்சி செய்து அது வெற்றியளித்தால் மட்டுமே மின்னணு ஊடகத்தை பயன்படுத்தி தரக் கணக்காய்வை நடாத்துவதற்கான இயலுமை அளவீடு செய்தலாகும். அதன் வெற்றிவாய்ப்பின் அடிப்படையில் இவ் ஆராய்ச்சியை நடாத்துவதற்கு எதிர்பார்த்தே இது கைவிடப்பட்டது.

(ஆ) கைத்தொழிற் துறைக்காக தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் (VET Plan) அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டத்தின் கீழ் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் துறைக்கான VET திட்டத்தைத் தயாரிக்கும் பணிகள் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் "யுனிகன்சல்டன்ஸி சேர்விசஸ்" நிறுவகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன.
அடிப்படைத் தரவுகளை சேகரிக்கையில் ஏற்பட்ட தடங்கல்களின் காரணத்தால் நகல் அறிக்கையை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு யுனிகன்சல்டன்ஸி சேர்விசஸ் நிறுவகம் 2012.12.31 திகதி வரை காலக்கேடு தருமாறு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதற்கான காலத்தை வழங்கியதனால் 2013 ஆம் ஆண்டில் தயாரிப்புப் பணிகள் நிறைவடையவில்லை. எவ்வாறெனினும் இத்தயாரிப்பு வேலைத்திட்டத்தின் தேர்ச்சியை கண்டறிதல் இவ்வாணைக்குழுவினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதுடன் அத்திட்டத்தின் முதல் நகல் அறிக்கை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆந் திகதி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
இவ் அறிக்கை தொடர்பாக கலந்தோசிப்பதற்காக மூன்று (03) கூட்டங்கள் முறையே 2014.01.13, 2014.01.28 மற்றும் 2014.02.10 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்டதுடன் அறிக்கையில் மேலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பகுதிகள் உள்ளதனால் அறிக்கையின் செல்லுபடியாக்கல் (இறுதி மதிப்பீடு) கூட்டத்தை 2014 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தில் நடாத்துவதற்கு அலுவல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(இ) மாகாண தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்ட (VET) ஒருங்கிணைப்பு செயலமர்வுகள் தற்போது அத்திட்டங்கள் அபிவிருத்தி செய்யபட்டுள்ள மாகாணங்களின் தலைமைச் செயலாளரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள செயற்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
தென் மாகாண பிரதி தலைமைச் செயலாளர் (திட்டமிடல், ஆராய்ச்சி) அவர்களால் அம்மாகாணத்தின் VET திட்டத்தை செயலாக்குவதற்கான திட்டமொன்று 2013.04.04 திகதியன்று எமக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அத்துடன், 2014.02.20 திகதியன்று எமது ஆணைக்குழு பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் தென் மாகாண தலைமைச் செயலாளர் ஆகியோர்

கலந்துகொண்ட கூட்டமொன்று நடாத்தப்பட்டது. மேலும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் கிழக்கு மாகாண தலைமைச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்ட VET திட்ட ஒருங்கிணைப்புக் கூட்டமொன்று 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடாத்தப்பட்டது.

(ஈ) 150 புதிய கணிப்பீட்டாளர்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்குதல், தேர்ச்சிசார் கணிப்பீட்டின் சீர்த்தன்மையை உறுதி செய்வதற்கான பத்து (10) கணக்காய்வுகளை நடாத்துதல் மற்றும் அது தொடர்பாக மூன்று (03) செயலமர்வுகளை நடாத்துதல் ஆகியனவற்றை மேற்கொள்ள முடியாமல் போனதற்கான காரணம் யாதெனில் இதற்கென அமர்த்தப்பட்டுள்ள பதவியணிநர் வருடாந்த செயலாக்கத் திட்டத்திற்குப் புறம்பான பல்வேறு அலுவல்களை மேற்கொண்டமையாலாகும். அதாவது, 2013.06.27 திகதியன்று நடைபெற்ற சர்வ முகவர் வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தொழில்நுட்பவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் இறுதிக் கணிப்பீடுகளுக்கான அனைத்து அலுவல்களுக்காக கணிப்பீட்டாளர்களை நியமித்தல் மற்றும் கணிப்பீட்டு அலுவல்களை ஒழுங்கமைத்தல் ஆகியவை எமது ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கமைய தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்காக 408 கணிப்பீடுகள் ஒழுங்கு செய்யபட்டதுடன் அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்கான 1034 கணிப்பீடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் காரணமாக மேற்கூரிய வருடாந்த செயலாக்க திட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் இலக்குகள் முழுமையாக எய்த முடியவில்லை.

(உ) இச்செயற்திட்டம் வெளிவாரி விசேட போதானசிரயொருவரை பணிக்கமர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைத்திட்டமாக வருடாந்த செயலாக்கத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அச்செயற்திட்டத்திற்காக விசேட போதானசிரியொருவரை பெற்றுக்கொள்வதற்கு சில தடவைகள் முயற்சித்திருப்பினும் நாம் ஒதுக்கியிருந்த நிதித்தொகை போதாமையின் காரணத்தால் இச்செயற்திட்டத்தை செயலாக்குவதற்காக அமர்த்தப்பட்ட போதானாசிரியர்கள் அத்தொகைக்கு இணங்காததனால் இக்காரியத்தை நிறைவேற்ற முடியவில்லை.

(ஊ) பாடநெறி தராதர அங்கீகரிப்பிற்கான கணிப்பீட்டை நடாத்துவதற்கான சம்பந்தப்பட்ட நிறுவகங்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுடன் 2013 ஆம் ஆண்டில் 127 பாடநெறிகளுக்கான தராதர அங்கீகாரம் புதுப்பிக்கப்பட வேண்டியிருப்பினும் விண்ணப்பங்களை அனுப்பாத மற்றும் கட்டணம் செலுத்தப்படாத அரச துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 16 பாடநெறிகளும் தனியார் துறை பயிற்சி நிறுவகங்களால் நடாத்தப்படும் 14 பாடநெறிகளும் கணிப்பீடு செய்யப்பட்டன.

### 4.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) இரண்டு (02) அரச துறை பயிற்சி நிறுவகங்களுக்காக வழங்கப்பட்ட ரூ.528,702/= நிதித்தொகைக்கான கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு 2013.12.26 திகதியன்று பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன.
மூன்று (03) தொழில்நுட்ப பயிற்சி நிறுவகங்களுக்கு கொள்வனவுக்காக வழங்கப்பட்ட ரூ.358,540/= நிதித்தொகை தொடர்பில் 2013.12.31 திகதியன்று கொள்வனவு முற்றாக மேற்கொள்ளப்பட்டு 2014.02.24 திகதியன்று பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அத்தோடு, வடமேல் மாகாண சபைக்கு கொள்வனவுக்காக வழங்கப்பட்ட நிதித்தொகை தொடர்பில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு 2012.12.18 திகதியன்று பற்றுச்சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன.
ஆகவே நிதித்தொகை செலவிடப்பட்டுள்ளதென தெளிவாகியுள்ளது.

(ஆ) (i), (ii) புதினப் பத்திரிகைகள் மூலமாக கண்டறிதல் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களிடம் பதிவு செய்யப்படாத பயிற்சி நிறுவகங்களைக் கண்டறிந்து அறிவிக்குமாறு கடித மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சமர்பிக்கப்பட்ட அறிக்கைக்கமைய பயிற்சி நிறுவகங்களுடன் தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுமாறு அந்நிறுவகங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. தரமற்ற வகையில் தொழிற்படும் பயிற்சி நிறுவகங்களுக்கெதிராக எந்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதென்பது சட்டத்தில் குறிப்பிடப்படாமையின் காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவகங்களுகெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவோ அல்லது தடை செய்வதற்கோ சட்டத்தில் அதிகாரமெதுவுமில்லை.

அதற்கமைய தற்போது சட்டம் திருத்தஞ் செய்யப்பட்டு வருகின்றது. நிறுவகப் பதிவைப் புதுப்பித்தல் தொடர்பாக பயிற்சி நிறுவகங்களுக்கு தெரிவிக்கப்பட்டு கடித அனுப்பி வைக்கப்பட்டது. அத்தோடு குறிக்கப்பட்ட காலத்தில் பதிவைப் புதுப்பிக்காதுவிடின் அந்நிறுவகங்களிடமிருந்து தண்டப் பணம் அறவிடப்படும்.

(ii) பதிவு செய்யப்படாத பயிற்சி நிறுவகங்களை இனங்கண்டதன் பிற்பாடு அந்நிறுவகங்களை ஆணைக்குழுவில் பதிவு செய்துகொள்ளுமாறு கடிதம் அனுப்பி வைத்ததுடன் பதிவு செய்தல் தொடர்பான செயற்பாடும் அந்நிறுவகங்களுக்கு தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு தெரிவிக்கப்பட்டும் பதிவு செய்யாத நிறுவகங்களுக்கெதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் இடமிருப்பினும் எந் நீதிமன்றத்தினூடாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்படாமையின் காரணத்தால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இது தொடர்பாக இல.E/03/2012 2012.03.06 திகதியிடப்பட்ட கடிதமொன்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(இ) 2013.05.30 திகதியன்று உற்பத்தி தொழில்நுட்பவியல் மற்றும் அழகியல் ஆகிய பாடநெறிகளுக்கான தேசிய தேர்ச்சித் தரங்களைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் அதற்கு மேலதிகமாக அப்பாடநெறிகளின் பாடவிதானங்கள் மற்றும் கணிப்பீட்டு வளங்கள் ஆகியனவற்றையும் தயாரித்ததன் காரணத்தால் 2013 ஆகஸ்ட் 01 மற்றும் 2013 ஒக்டோபர் 14 வரை தேசிய தேர்ச்சித் தரம் தயாரிப்பு பிற்போடப்பட்டது.

(ஈ) (i) பத்து (10) ஆராய்ச்சிகளில் ஒன்பது (09) ஆராய்ச்சிகள் முறையாக செயலாக்கப்படுத்தப்பட்டுள்ளன. ஓர் (01) ஆராய்ச்சி மட்டும் செயலாக்க இயலாமைக்கான காரணம் யாதெனில் EMIS முறைமையை செயலாக்கும் வரையில் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியை கைவிடுவதற்கு தீர்மானித்ததன் காரணத்தால் இவ்வாறு ஏற்பட்டது.

(ii) எதிர்வரும் வருடங்களில் தங்களது அவதானிப்புகளுக்கமைய அலுவல்கள் மேற்கொள்ளப்படும்.

(iii) ஆராய்ச்சியின் உள்ளடக்கம் மற்றும் எதிர்பார்க்கும் இலக்குகள் என்பவற்றின் போதுமைத்தன்மையைக் கருத்திற்கெடுத்து அவை தொடர்பான விசேட அறிவு மற்றும் திறன் உள்ளவர்களிடமே சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(உ) (i), (ii) இங்கு சம்பந்தப்பட்ட நிறுவகம் முற்பண தீர்வு செய்தலை மூன்று (03) நாட்களுக்கும் அதிகமாக தாமதப்படுத்தியதுடன் அம் முற்பணத்தொகையைப் பயன்படுத்தி கொள்வனவு செய்த உபகரணங்களின் அசல் பற்றுச்சீட்டுகள், அவ் உபகரணங்கள் களஞ்சியத்திற்கு கையளித்ததற்கான குறிப்புப் பத்திரம் மற்றும் கட்டளைப் பத்திரம் என்பன முற்பணத்தை தீர்வு செய்வதற்கான உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்டு இவ்வாணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் 2014.05.06 திகதியன்று இவ் முற்பணத்தை ஈடுசெய்துள்ளது.

வழங்கிய முற்பணத்தைப் பயன்படுத்தி திறன்கள் போட்டிக்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் மற்றும் நுகர்வுப் பொருட்கள் அந்நிறுவகங்களின் கையிருப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

முற்பணத்தை தீர்வு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட முற்பண தீர்வு உறுதிப்பத்திரங்களில் அக்குறிப்பேடுகளின் பிரதிகள் இணைக்கபட்டுள்ளன. இந்நிறுவகங்களால் போட்டிகள் நடாத்தப்பட்டமையினால் போட்டிகளில் பயன்படுத்தபட்ட உபகரணங்கள் அந்நிறுவகங்களினுடையதால் அவைகளின் பொறுப்பிலேயே இருந்தன. எனவே மீண்டும் எமக்கு ஒப்படைப்பதற்கு தேவையேதும் எழவில்லை.

வழங்கப்பட்ட அனைத்து முற்பணத்தொகைகளும் தற்போது தீர்வு செய்யப்பட்டுள்ளன.

(iii) இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் 2014.03.19 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட செலவு தீர்வு செய்தல் அறிக்கைகளின் பிரகாரம் மொத்தச் செலவுத் தொகை ரூ.1,170,349.83 ஆகும். அதற்கமைய, அந்நிறுவகத்தால் மேலதிகமாக செலவிடப்பட்ட தொகை ரூ. 170,349.83 ஆவதுடன் அத்தொகை இவ்வாணைக்குழுவால் 2014.04.29 திகதியன்று அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டது.

மொத்தச் செலவும் தொழிற் பயிற்சி அதிகாரசபையால் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

(iv) திறன்கள் போட்டியை ஏற்பாடு செய்கையில் ஒவ்வொரு நிலையத்திற்கும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவை பிரதிநிதித்துவம் செய்யுமுகமாக அலுவலரொருவர் பங்குபற்றியுள்ளார். அதற்கமைய, போட்டியுடன் தொடர்புடைய கொள்வனவு செய்யப்பட்ட சகல உபகரணங்களும் மற்றும் நுகர்வுப் பொருட்களும் அவ் அலுவலர் மற்றும் நடுவர்கள் குழுவினால் கண்காணிக்கப்பட்டதன் பிற்பாடே போட்டியின் போது பயன்படுத்தப்பட்டதை இங்கு குறிப்பிடுகிறோம்.

இப்போட்டிகளை நடாத்துவதற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய சகல உபகரணங்கள் அல்லது நுகர்வுப் பொருட்கள் இல்லாமல் போட்டியை நடாத்த முடியாது. அதற்கமைய, சகல உபகரணங்கள் அல்லது நுகர்வுப் பொருட்கள் நடுவர்கள் குழு மற்றும் ஆணைக்குழு அலுவலர் ஆகியோரால் உறுதிப்படுத்தியதன் பிற்பாடே போட்டி நடாத்தப்பட்டது. ஆகவே, முறைப்படி போட்டிக்கான சகல பொருட்களும் கிடைக்கப்பெற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

போட்டிக்காகத் தேவைப்படும் பொருட்கள் முறைப்படி இருக்க வேண்டியுள்ளதால் பௌதீக ரீதியாக உள்ளமையை அவர்களிடம் உறுதி செய்ததன் பிற்பாடே போட்டி நடைபெற்றது.

**4.3 செயற்திறனற்ற சொத்துக்கள்**

078-1001-12268324 வங்கிக் கணக்கில் திசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூ. 2,855,870/= மீதியும் மற்றும் வருடம் பூராகவும் ரூ. இரண்டு (02) மில்லியனுக்கு அண்ணளவான மீதியும் காணப்பட்டமைக்கான காரணம் யாதெனில் வெளிநாட்டு செயற்திட்டங்களினூடாக பெறப்பட்ட நிதி, தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் தயாரிப்பதற்காக சம்பந்தப்பட்ட செயலமர்வுகளை நடாத்துவதற்கான நிதி மற்றும் "எதிர்காலத்தைக் காண்போம்" வேலைத்திட்டத்திற்கு அமைச்சினால் விடுவிக்கப்பட்ட நிதி என்பன இக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையே ஆகும். இங்கு இந் நிதியை முதலீடு செய்ய முடியாமைக்கான காரணம் யாதெனில் "எதிர்காலத்தைக் காண்போம்" வேலைத்திட்டத்திற்காக மாதத்திற்குள் தேவைப்படும் நிதித்தொகை ரூ. இரண்டு (02) மில்லியன் மட்டுமே என்பதாலாகும்.

**4.4 பதவியணி நிர்வாகம்**

(அ) இது வரையில் பதவியணிக்கு 77 பேர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனருடன் நூலக உதவியாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளுக்காக இரண்டு (02) தடவைகள் நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டிருப்பினும் தேர்வுநாடிகளுக்கு போதுமான தகுதிகள் காணப்படாமையால் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை.

(ஆ) இங்கு பணிப்பாளரைத் தவிர மற்றைய நான்கு (04) அலுவலர்களும் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன் தற்போது அவர்கள் கணிப்பீட்டு பிரிவில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர்.

**5. கணக்கீட்டு அலுவல்கள் மற்றும் கட்டுப்பாடு**

**5.1 யாக்கத் திட்டம்/ கூட்டுத் திட்டம்**

எதிர்வரும் வருடங்களின் அவதானிப்பின் பிரகாரம் அலுவல்களை மேற்கொள்ள உள்ளோம்.

**5.2 வரவுசெலவு/ பாதீட்டுக் கட்டுப்பாடு**

எதிர்வரும் வருடங்களில் முடியுமானவரை விலகல்கள் ஏற்படாத வண்ணம் பாதீட்டைக் கட்டுப்படுத்தி அலுவல்களை மேற்கொள்ள உள்ளோம்.

**6.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

சகல முறைமைகளையும் நிர்வகிப்பதற்காக முறையியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றை செயலாக்குவதற்கு பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. முறைமைகளின் குறைபாடுகள் இனங்காணப்படும் சந்தர்ப்பங்களில் அம்முறைமைகளின் கட்டுப்பாடு அபிவிருத்திக்காக செயற்பட்டுள்ளோம்.



**முனைவர் எஸ்.டி.ஆர். பெரேரா**
பணிப்பாளர் நாயகம்

பிரதி - செயலாளர், இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு